

கல்கி
KALKI
17.12.2000
ரூ. 5.00
இசை விழா
சிறப்பிதழ்
பாடும்
படங்கள்!

A Godrej Product





To retain the freshness, simply chill it.

Vegetables are refrigerated so that they do not wilt or lose their flavour but stay crisp and fresh. The same goes for chicken. Which is why Real Good Chicken, once cut, is chilled to retain its freshness and nutrition. Giving you the convenience of hygienic, clean and dressed chicken. With no thawing required. And it's ready to be cooked! Of course, it would only go well with the garden-fresh veggies served with it.

Real Good Chicken

Fresh chicken in a bag!

* Available in Bangalore, Chennai, Cochin and Mangalore.

RediffusionDY&R/Bom/GA/611a

மூலிகை சீயக்காய்; பாதாம் கண்மை!

இவ்வாண்டு கான கலா சாரதியாகப் பட்டம் பெறும் சுதா ரகுநாதன் மிஸ் சென்னைக்குப் பட்டம் சூட்ட நடுவராகப் பொறுப்பு வகித்தார் ஓர் அழகுப் போட்டியில். தமது அழகைப் பராமரிக்க என்ன செய்கிறார் சுதா...? கேட்டோம் அவரிடமே...

"சத்தியமாச் சொல்றேங்க. டயட், எக்சர்சைஸ்னு ரொம்ப பெரிசா பிளான் பண்றதெல்லாம் கிடையாது. ஏன்னா, தவறாம எதுவும் பண்ண நேரம் கிடைக்காது. ப்ராணாயாமம், தியானம் செய்வதுண்டு. அப்பப்போ, சைக்கிளிங் பண்ணுவேன். எப்படியும் என்னோட எடை அறுபது கிலோவைத் தாண்டாம பார்த்துப்பேன்."

"ரிச் லுக்கிங்கா இருக்கிற பட்டுப் புடைவைகள் மட்டுமே தேர்ந்தெடுப்பேன். வித்தியாசமான நிறங்களில், தங்க ஜரிகை போட்ட, அசல் கெட்டி பட்டுப் புடைவைகளை மட்டுமே வாங்குவேன். விலை அதிகமா இருந்தாலும், இந்தப் புடைவைகளுக்குத் தனிப் பொலிவு இருக்கும். வெளியே போய்விட்டு வந்த உடனேயே தரையில் புரண்ட கரைப் பகுதியை மட்டும் உடனே சுத்தம் செய்து, காய வைத்து, அயர்ன் செய்து வைச்சுடுவேன். சோம்பல் பட்டா முடியுமா?

"கருவேப்பிலை, செம்பருத்தி, பயத்தமாவு, வெந்தயம் போட்டு அரைச்ச மூலிகை சீயக்காய்த்தூள் பயன்படுத்தறேன். அப்பவும் முடி கொட்டுது. என் கண்கள் ரொம்ப சின்னதோன்னு காம்ப்ளெக்ஸ் உண்டு. கண்களைப் பெரிசா காட்ட பாதாம், கேரட் விதை எல்லாம் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஷனாஸ் கண்மைதான் இட்டுக்கறேன்.

"மல்லிகை என்னை மயக்கும் மலர். நம்ம ஊர் கச்சேரின்னா குண்டு மல்லிகை நெருக்கமா கட்டித் தரச் சொல்லி, வைச்சுக்குவேன். பட்டு கட்டி, நகை, மேக்கப் எல்லாம் போட்டும் கிடைக்காத திருப்தி, ஒரு முழம் மல்லிப்பூ வைச்சதுமே கிடைச்சுடும். வெளியூர் போனால், பேப்பர் மல்லிதான். காகிதப்பூ என்றாலும் ஃபோட்டோவிலும் வீடியோவிலும் 'பளிச்'னு விழும். வாடாது. கசங்காது. உதிராது. ரொம்ப சாது!

"பழங்களில் எலுமிச்சை, சாத்துக்குடி, ஆரஞ்சு மூன்றையும் ஏறெடுத்தும் பார்க்க மாட்டேன். வைட்டமின் 'சி' நிறைஞ்ச நல்ல பழங்கள்தான். ஆனா என்ன பண்றது? எனக்குத் தொண்டை கட்டிக்குமே! அதிக காரம், புளிப்பு, க்ரீம் உள்ள உணவுகளையும் நான் தவிர்த்துடுவேன். இலேசா புளிக்கிற தயிர் பிடிக்கும். 'லொச்சு' கொட்ட வைக்கிற தயிர்னா... ஓடு... சுதா.... ஓடு...

"தண்ணீர் நிறைய குடிப்பேன். ஒரு நாளைக்கு எப்படியும் பத்து தம்ளர் தண்ணீர், நிறைய பால் குடிச்சுடுவேன். கச்சேரிக்குப் போகும் நாளில் மிளகு, ஜீரகம் தட்டிப் போட்டுக் காய்ச்சிய, வெந்நீர்தான். ஐஸ்க்ரீம் விளம்பரம் வந்தா கூட பார்க்க மாட்டேன்!

"நினைவுகள் நல்லதாய் இருந்தா, மனசு அமைதியா இருக்கும். மனசுலே 'ஸ்ட்ரெஸ்' இல்லாம இருந்தாலே, அழகும் ஆரோக்கியமும் தானா வரும். அதனால நான் எதற்கும் ரொம்ப டென்ஷன் ஆக மாட்டேன். எதையுமே பாசிடிவ்வா யோசிப்பேன். ரொம்ப முடியலையா? மதர், பாபா, ராகவேந்திரர், பிள்ளையார்னு யாரையாவது உதவிக்குக் கூப்பிடுவேன். இல்லையா, மியூசிக் கேட்பேன். உடனே கூலா விடுவேன். சங்கீதமே தெய்வீகம் என்பதால், அதிலேயே லயித்துப் போகும் இசைக் கலைஞர்களுக்கு வயசு கூடாது. கூடினாலும் வெளியே தெரியாது."



சின்னதாக ஒரு துக்கடா : சுதாவுக்குப் பிடித்த சென்ட் இஸ்ஸே மைக்யோம். இதில் கூட இசை மணக்குதுல்லே!

- அனுராதா



• டி. ருக்மிணி

பைரீனைரய சென்டிமென்ட்ஸ்!

மேடையில் மினரல் வாட்டர் வைப்பார்கள். ஆனால், கச்சேரிக்கு நடுவே பாடகர் ஃப்ளாஸ்கைத் திறந்து, தமது ரகசிய ஃபார்முலா பானத்தைப் பிரத்யேகமாக அருந்துவார். வித்வான்களுடன் மேடையேறும் அவர்களுடைய 'கச்சேரி கிட்'களில் இன்னும் பல பிரத்யேகங்கள் உண்டு. கொஞ்சம் குடைந்தோம்—அவர்கள் அனுமதியுடன்தான்!

பிள்ளையாருக்கு மட்டும் ஒரு டஜன் தோப்புக்கரணங்கள், வீட்டில் அத்தனை சுவாமி படங்களுக்கும் வந்தனம், காரில் செல்லும்போது குரு தியானம் என்று கச்சேரி தவறாமல் சென்டிமென்ட் கடைப்பிடிக்கும் டி. ருக்மிணியிடம் ஒரு வெங்கடாசலபதி படம் உண்டு- கறுப்பு-வெள்ளை படம்தான். அது கட்டாயம் கச்சேரி கிட்டில் இருக்கும். தவிர வயலின் பெட்டியில் தந்திகள், ரோஸின் (வயலின் வாசிக்கப் பயன்படும் வில்லைப் பக்குவப்படுத்தும் மெழுகு போன்ற பொருள் இந்த ரோஸின்), எண்ணெய்யில் தோய்த்த பஞ்சு, சுருதி சேர்க்க உதவும் பிச் பைப். பர்ஸில் கர்சீஃப், மூக்குக் கண்ணாடி, பணம். வெளியூர் செல்லும் போது வீட்டுத் தண்ணீர். வயலின் பெட்டிக்கு நீல நிற உறைதான் எப்போதும்.



• திருச்சூர் ராமச்சந்திரன்

தொண்டைக்கு ஆயுர்வேத மாத்திரையை மறக்காமல் கொண்டு செல்பவர் திருச்சூர் வி. ராமச்சந்திரன். தவிர பாட்டு புத்தகங்களும் எடுத்துப் போவதுண்டு.

"சாமி படம்லாம் காணுமே சார்...?"

"அந்த புக்ஸ்லயே நிறைய சுவாமி படம் இருக்கு; தனியே வேற எதுக்கு சுவாமி படம்?" என்பவருக்கு ரகசிய ஃபார்முலா அடங்கிய ஃப்ளாஸ்கும் தேவையில்லையாம்!

ஓடாத கடிகாரத்தைப் பத்திரமாக அணிந்து செல்பவர் கன்னியாகுமரி! "காஞ்சி பரமாச்சார்யாரின் நூற்றாண்டு விழாவின் போது வாங்கியது. அதை மாற்ற மனசு வரவில்லை" என்கிறார். வயலினுக்கான சாமக் கிரியைகள் தவிர கைப்பையில் எப்போதும் திருப்பதி பிரசாதம் இருக்கும்; குங்குமம் இருக்கும்; குருவாயூரப்பன் எண்ணெய் இருக்கும். வீட்டில் அப்பா அம்மாவுக்கு நமஸ்காரம்

செய்துவிட்டு குரு தியானம் பண்ணிவிட்டுக் கிளம்பு வாராம்.

குருவையும் குலதெய்வத்தையும் தூக்கிக் கொண்டே கச்சேரி மேடை ஏறுபவர் ஸ்ரீமுஷ்ணம் ராஜாராவ்! இவரிடமுள்ள ஆஞ்சநேயர், குருதத்தர்- இரண்டும் சின்ன விக்ரஹங்கள்.


• கன்னியாகுமரி


• ராஜாராவ்

"மிருதங்க தொப்பிக்கு ஒரு மூடி உண்டு. மேடையில் நிறுத்தி விக்ரஹங்களைத் தொப்பியால் மூடிவிடுவேன். தவிர ஒரு கவரில் ராகவேந்திரர், வேங்கடாசலபதி, பிள்ளையார் பட்டி விநாயகர் போன்ற தெய்வங்களின் படங்கள் இருக்கும். சாய்பாபா படம் போட்ட வெள்ளை கலர் பேனா இருக்கும்..." என்கிறார்.


• ஹரிசங்கர்

பக்கிங்ஹாம் பாலஸ்ல கச்சேரின்னா கூட என் மஞ்சள் தோள்பையோடதான் போவேன்" என்று வீர சபதமே செய்கிறார் கஞ்சிரா ஹரிசங்கர். "சபரி மலைக்கு எங்கப்பா எடுத்துப் போன பை இது. சென்டிமென்ட்...." வாத்தியம் தவிர வெற்றிலை சீவல் நிச்சயம் இருக்குமாம் ஹரிசங்கருடைய 'லக்கேஜ்'ஜில்! புறப்படுவதற்கு முன்...? கரெக்ட்! அப்பா அம்மாவுக்கு நமஸ்காரம்- கண்ணப்ப சுவாமிகளையும் கும்பிட்டாகவேண்டும்.

— லயா

படங்கள்: ஸ்ரீஹரி

மாமியார் இயற்றும் பாடல்களை, ஒரு பக்கம் மருமகள் கச்சேரிகளில் பாட, இன்னொரு பக்கம் தாம் புதிதாகக் கண்டுபிடித்திருக்கும் ராகத்திற்கு மருமகள் பெயரையே வைத்துவிட்டார் மாமியார்.

மருமகள் கர்னாடக இசைக் கலைஞர் சுபஸ்ரீ மணி. மாமியார் டி. பட்டம்மாள். சுபஸ்ரீமணியைச் சந்தித்தோம்.

கல்கி : *மாமியார் புகழ் பாடும் மருமகளே வணக்கம்.*

சுபஸ்ரீ : வணக்கம்! (வெட்கத்துடன் சிரிக்கிறார்)

கல்கி : *மாமியார் எழுதும் பாடல்களைப் பாடும் உங்களுக்கு அவரே தான் குருவா?*

சுபஸ்ரீ : திருமணத்திற்கு முன்பே நான் டி.ஆர். பாலாமணி, டி.கே. கோவிந்தராவ் ஆகியோரிடம் இசை கற்றிருந்தேன். ஆனால் இசை என்றால் மும்மூர்த்திகளின் இசை மட்டுமே என்று நினைத்திருந்த எனக்கு என் மாமியார் தான் தமிழிசையைப் புகட்டினார். தமிழில் அதே அளவு இனிமையான பாடல்கள் உண்டு என்பதை உணர்ந்தேன். அதன் பின்னர் அவர் இயற்றிய பாடல்களை அவரிடமே கற்கும் பாக்கியம் கிடைத்தது.

கச்சேரிக்குப் பாடல்களை எப்படித் தேர்வு செய்வது; பாடல்களில் வார்த்தைகளை எப்படி ஸ்பஷ்டமாக உச்சரிப்பது; சுருதி என்பது ஒரு பாடகருக்கு எவ்வளவு இன்றியமையாதது என்றெல்லாம் தெளிவாகச் சொல்லித் தந்தார்.

• டி.பட்டம்மாள்



சில சமயம் நாம் நினைத்தபடி பாட இயலாமல் அவர் கூறும் படி பாட வேண்டியுள்ளதே என்று வருத்தப்படுவதுண்டு. ஆனால் பிறகுதான் அவர் கூறுவதன் உட்பொருள் புரியும். சிலிர்த்துப் போய்விடுவேன்.

கல்கி : *உங்கள் மாமியார் பாடல் இயற்றும்போது சாஹித்யத்தோடு இசையையும் இணைத்து அமைத்துவிடுவாரா?*

சுபஸ்ரீ : ஆமாம். எழுபத்திரண்டு மேளகர்த்தா ராகங்களிலும் கிருதி அமைத்த முதல் பெண்மணி என் மாமியார்தான்.

திருவிளையாடல் புராணம், நாயன்மார்களின் கதை, சங்கீத மும்மூர்த்திகளின் மீது பாமாலைகள், ராமகிருஷ்ணர், அன்னை சாரதா இவர்களின் மீது கிருதிகள் என்று இவர் இயற்றியிருக்கும் பாடல்கள் ஏராளம். இதைத் தவிர, கானி



• சுபஸ்ரீ மணி
(படம் : ஸ்ரீஹரி)

மருமகள் பெயரில் ஒரு ராகம்!

தாஸரின் குமாரஸம்பவத்தையும் தீக்ஷிதரின் நவக்கிரஹ கீர்த்தனைகளையும் தமிழில் மொழிபெயர்ப்பு செய்திருக்கிறார்.

கல்கி : பாடல் இயற்ற வேண்டும் என்கிற வேகம் அவருக்கு எப்படி வரும்?

சுபஸ்ரீ : ஒரு முறை ஜெயதேவரின் கீத கோவிந்தத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழில் கீர்த்தனைகள் இயற்ற வேண்டும் என்று அவருக்குத் தோன்றியிருக்கிறது. 'மீனும் ஆமையும்' என்ற துவக்க வார்த்தைகள் உடனே தோன்றிவிட்டாலும் மேற்கொண்டு பாடல் உருவாகவில்லை. மூன்று நாட்கள் உண்ண முடியாமல் உறங்க முடியாமல் வார்த்தைகள் வராமல் திணறியிருக்கிறார். மூன்றாம் நாள் மாலை திடீரென எழுந்து உட்கார்ந்து இருபத்தியாறு கீர்த்தனைகளையும் ஒரே மூச்சில் எழுதி 'மாதவ கீதம்' என்று பெயரும் சூட்டி விட்டார்!

'எழுத வேண்டும் என்று உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது' என்று கேட்டால், "ஏதோ தோன்றுகிறது எழுதுகிறேன்!" என்று சிரித்துக் கொண்டே சொல்வார்.

கல்கி : அவருடைய பாடல்களை எல்லோரும் பரவலாகப் பாடுகிறார்களா?

சுபஸ்ரீ : வித்வான்கள் டி.ஆர். சுப்பிரமணியம், எஸ்.ராஜம், டி.வி.கோபாலகிருஷ்ணன், எஸ்.கல்யாணராமன், ஜி.என்.தண்டபாணி போன்றோர் இவரது பாடல்களைப் பாடியிருக்கிறார்கள். பம்பாய் சகோதரிகள் அவரிடமே வந்து அவருடைய கீர்த்தனைகளை நேரடியாகக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவருடைய 'சுவாமி கந்தசுவாமி' என்ற பிரஹரி ராகக் கீர்த்தனை வெகு பிரபலம். 'மயில் மீது' என்று தொடங்கும் சண்முகப்ரியா பாடலுக்குத் திருமதி கமலா லக்ஷ்மணனும் 'மாதவ கீதம்' கீர்த்தனைகளுக்குத் தனஞ்செயனும் நாட்டியம் ஆடி இருக்கிறார்கள்.

கல்கி : அவர் இயற்றிய பாடல்களில் உங்கள் மனசுக்குப் பிடித்த பாடல் எது?

சுபஸ்ரீ : "போதும் போதும் பட்ட துயரம்" என்ற ரேவதி ராக கீர்த்தனையும் "நீலமயில் வாகனா" என்ற சலநாட்டை ராகக் கீர்த்தனையும் என்னுடைய ஃபேவரிட்.

கல்கி : அதென்ன உங்கள் மாமியார் உங்கள் பெயரிலேயே ராகம் ஒன்று அமைத்திருக்கிறாராமே?

சுபஸ்ரீ : ''கந்தன் சக்தி சிவனின் மைந்தன்'' என்று ஒரு பாடல். புதிய ராகத்தில் அமைத்திருந்தார் மாமியார். ராகத்திற்கு என்ன பெயர் சூட்டலாம் என்று அவர் யோசித்துக் கொண்டிருந்த போது வித்வான் எஸ். கல்யாணராமன் விளையாட்டாக ''உங்கள் மருமகள் பெயரைச் சூட்டலாமே!'' என்று சொல்ல, அவர் நிஜமாகவே 'சுபஸ்ரீ' என்று பெயர் சூட்டிவிட்டார்.

கல்கி : மற்ற மாமியார்களைப் போல் அவரும் உங்களை வேலை வாங்குவாரா?

சுபஸ்ரீ : ஏன் இல்லாமல்? அடிக்கடி, "ஒத்தை நன்றாகப் பெருக்கு!" என்று ஆர்டர் பண்ணுவார். என்ன, ஆச்சர்யமாய் இருக்கிறதா? அவர் பாஷையில் ஒத்தை நன்றாகப் பெருக்கு என்றால் "ஸ்ருதியை நன்றாகச் சேர்த்துப் பாடு" என்று அர்த்தம்.

கல்கி : டி. பட்டம்மாள் டி.கே. பட்டம்மாள் பெயர் குழப்பம் அடிக்கடி ஏற்படுவதுண்டா?

சுபஸ்ரீ : ஒரு தடவை என் மாமியாருக்கு விருது என்று அறிவிக்கப்பட்டபோது யாரோ அதை டி.கே. பட்டம்மாளுக்கு என்று எண்ணி டி.கே. பட்டம்மாளின் சகோதரர் நாகராஜனிடம் சொல்லி இருக்கிறார்கள். அவரும் உடனே தம் சகோதரியைத் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவிக்க, பிறகு டி.கே. பட்டம்மாள் விஷயத்தைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

மற்றபடி இருவருக்கும் நேரடி தொடர்பும் உண்டு. என் மாமியார் டி.கே. பட்டம்மாளிடமே இசை பயின்றிருக்கிறார். தாம் பாடல்கள் இயற்றத் தொடங்கியபிறகு அவற்றை அடிக்கடி டி.கே. பட்டம்மாளிடம் பாடிக் காண்பிப்பாராம்.

கல்கி : அவர் வயது என்ன...?

சுபஸ்ரீ : எழுபத்திரண்டு. இப்போது "ஆல்சிமர்ஸ்" என்ற நோயால் பாதிக்கப்பட்டு, சிறிது சிறிதாக நினைவிழந்து வருகிறார். அவருக்குத் தன் மகன்களையே அடையாளம் தெரியவில்லை. ஆனால், ஓர் ஆச்சர்யம் பாருங்கள், கீத கோவிந்தத்தை மட்டும் நினைவில் வைத்துக் கொண்டு முணுமுணுத்துக் கொண்டேயிருக்கிறார்.

— சித்ரா மாலோலன்

எலெக்ட்ரானிக் தபலா!

பெங்களூரைச் சேர்ந்த ராஜ்நாராயணன், தாம் உருவாக்கிய எலெக்ட்ரானிக் தம்புரா பற்றிய செய்முறை விளக்கத்தை முடித்ததும், பார்வையாளர்களில் முதல் வரிசையில் அமர்ந்து, பார்த்துக் கொண்டிருந்த உலகப் புகழ்பெற்ற வித்வான், உடனே மேடை ஏறி, ராஜ் நாராயணனை, கைகுலுக்கிப் பாராட்டினார். 'இது இசை உலகில் ஒரு பெரிய புரட்சி' என்பது அவர் கொடுத்த சர்டிபிகேட். அந்த வித்வான் : பாலமுரளி கிருஷ்ணா!

வெறும் பாராட்டுடன் பாலமுரளி நிற்கவில்லை! உடனே ஒரு எலெக்டிரானிக் தம்புராவுக்கு ஆர்டர் கொடுத்து விட்டார். தம் கச்சேரிகளிலும், எலெக்டிரானிக் தம்புராவைப் பயன்படுத்த ஆரம்பித்து விட்டார்.

"தம்புரா வித்வான் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. சீசன் வந்து விட்டால், போச்சு. தம்புரா போட ஆட்கள் கிடைப்பது, ஸ்டார் வித்வான்களின் டேட் வாங்குவதை விடக் கஷ்டமான விஷயம்' என்கிறார்கள் கர்நாடக இசை வட்டாரத்தில்.

"எங்களை யார் சார் மதிக்கிறார்கள்? புகழும் கிடையாது; வருமானமும் பெரிசாய் இல்லை! அதனால்தான் தம்புரா கற்றுக் கொண்டு வாசிக்க யாரும் முன்வருவதில்லை' என்று முணுமுணுக்கிறார்கள் தம்புராக் கலைஞர்கள்.

"இந்த இருதரப்பினரது பிரச்னைக்கும் தீர்வு காண வந்திருப்பதுதான் எலெக்ட்ரானிக் தம்புரா'' என்கிறார் ராஜ் நாராயணன்.

இவரது குடும்பம் இசைக் குடும்பம். இவரும் ஒரு புல்லாங்குழல் வித்வான். பல கச்சேரிகள் செய்திருக்கிறார். சென்னை எம்.ஐ.டி.யில் படித்த என்ஜினீயர். இவரது என்ஜினீயரிங் மூளையும், இசை ஞானமும் இணைந்து நடத்திய ஃப்யூஷனின் விளைவுதான் எலெக்ட்ரானிக் தம்புராவும் எலெக்டிரானிக் ஸ்ருதிப் பெட்டியும். இந்த இரண்டிலும், தொள்ளாயிரம் ரூபாய் விலையுள்ள எலெக்ட்ரானிக் ஸ்ருதிப் பெட்டிக்கு ஏக டிமாண்டு.

இவர் உருவாக்கிய இன்னொரு எலெக்ட்ரானிக் உபகரணம்: தாள மீட்டர்.

வட இந்திய இசைக் கலைஞர்கள், இவர் உருவாக்கிய எலெக்ட்ரானிக் இசைக் கருவிகளைப் பார்த்து வியந்து ஒரு கோரிக்கை வைத்தார்களாம். எங்களுக்குப் பயன்படும் படியாய் ஒரு எலெக்ட்ரானிக் தபலா உருவாக்கிக் கொடுங்களேன் என்று. ஆராய்ச்சியில் இறங்கினார் ராஜ்நாராயணன். உருவானது எலெக்டிரானிக் தபலா.

"வெறும் பதினைந்தாயிரம் ரூபாய் முதலீட்டில் துவக்கி, சுமார் இருபது வருடங்களுக்குப் பின், இப்போது பிசினஸ் ஒண்ணே கால் கோடி. இன்று இந்தியாவில், பாரம்பரிய இசைக்கு, இந்த இசைக் கருவிகள் தயாரிக்கிற ஒரே நிறுவனம் எங்களுடையதுதான். வித்வான்களிடம் இந்தக் கருவிகளை எடுத்துக் கொண்டு போய், பயன்படுத்திப் பாருங்களேன்' என்றால், "நன்றாக, புதுமையாக இருக்கிறது'' என்று பாராட்டுவார்களேயொழிய, தன் கச்சேரிகளில் பயன்படுத்த முன்வர மாட்டார்கள்! வேண்டாத விமர்சனங்கள் வருமோ என்ற தயக்கம்தான் காரணம்.

"அப்புறம், இசை சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர்களை அணுகினோம். அவர்கள் மத்தியில் எங்கள் தயாரிப்புகளுக்கு நல்ல வரவேற்பு. எங்கள் கம்பெனி சிறிய கம்பெனி என்பதால், பெரிய அளவில், விளம்பரங்கள் செய்ய முடியவில்லை'' என்று தாம் கடந்து வந்த கரடுமுரடான பாதையைப் பற்றி அசை போடுகிறார் ராஜ்நாராயணன்.

தமது தயாரிப்புகளைப் பாராட்டி, பல இசை மேதைகள் எழுதிய கடிதங்களைக் காட்டுகிறார் ராஜ் நாராயணன். பீம்சென் ஜோஷி, ரவிசங்கர், சுபாமுட்கல், அம்ஜத் அலிகான்— என்று பட்டியல் நீளமானது.

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**



• எலக்ட்ரானிக் தம்புராவுடன் ராஜ் நாராயணன்



பாடும் படங்கள்!

கலைந்த, நரைத்த தலைமுடி. இலேசான வழுக்கை. விசாலமான நெற்றி. தாகூர் - தாடி. மூக்கு நுனியில் நிற்கும் மூக்குக் கண்ணாடி. நல்ல உயரம். டீ ஷர்ட்டும், வெள்ளை ஷார்ட்ஸுமாக, படு காஷுவலாக இருக்கிற எம்.ஏ. ராஃப், இன்றைய ஸ்டார் பாடகர்களையும், பாடகிகளையும் புகைப்படங்களாக எடுத்திருக்கும் அபூர்வ புகைப்படக்கலைஞர். மேலே குறிப்பிட்ட

• இயற்கையும்...

வர்ணனையை மீண்டும் ஒரு முறை வேண்டுமானால் படித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் ராஃப் தம்மை யாரும் படம் எடுக்கக் கூடாது என்று அடம் பிடிக்கும் புகைப்படக் கலைஞர். அவ்வளவு தன்னடக்கம்!

இராயப்பேட்டையின் குறுகலான சந்துகளுள் ஒன்றில், பழைய ஓட்டு வீடு. ஆனால் இவரது அறைக்குள் நுழைந்தால் பிரமிப்புத் தட்டுகிறது. சச்சதுரமான அறை. கதவு கிடையாது! தொங்கும் மின் விளக்குகள். அங்கங்கே சிறிய ஃபோகஸ் லைட்டுகள். சுற்றிலும் ஸ்டீன்பெக், வோட்ஹவுஸ் உட்பட ஏராளமான ஆங்கில நூல்கள். நூற்றுக்கணக்கில் ஆங்கில - இந்தி ஸிடிக்கள்.

ஸ்பீக்கரிலிருந்து; எழுபதுகளில் பிரபலமாவிருந்த பிங்ஃப்ளாய்டின் இசை மெலிதாகக் கசிந்து கொண்டிருந்தது.

''இன்றைய இளம் இசைக் கலைஞர்கள் யாரைக் கேட்டாலும் நீங்கள் எடுத்த படத்தைத்தான் பெருமையாகக் காண்பிக்கிறார்கள்!''

''எல்லாரும் என் நண்பர்கள்தான்!''





• -இசையும்... (தொடர்ச்சி)

என்கிறார் ராஃப் மகிழ்ச்சியாக. "ஒரு கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர் கம்பெனிக்கு, வேலை நேரத்தில் மெலிதாகக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்று சில ஸிடிக்கள் தேர்ந்து எடுத்துத் தரச் சொல்லிக் கேட்டார்கள். ஸ்பென்சருக்குப் போய் எடுத்துக் கொடுத்தேன். அப்போது பல ஆடியோ கேசட்டுகள், ஸிடிக்களில நான் எடுத்த புகைப்படங்கள் இருந்ததைக் கண்டு எனக்கே ஆச்சர்யம்" என்று இலேசாகப் புன்னகைத்தவரிடம், "படம் எடுக்கும்போது பாட வைப்பீர்களா?" என்றோம்.



கல்கி தீபாவளி மலருக்காக... கிருஷ்ணா-சங்கீதா-ஆர்யா

"ஆமாம். அப்போதுதான் முகத்தில் உணர்ச்சி தெரியும். ஒரு பாடகியின் அம்மா 'எதற்குப் பாடணும்?' என்று கேட்டார். 'நானென்ன ஃப்ரீ கச்சேரியா கேட்கிறேன்?' என்றதும்தான் சரி என்றார்!'' என்று சிரிக்கிறார் ராஃப். இன்னோர் அம்மா, பெண்ணின் நகைப் பெட்டியையே மடியில் சேர்த்துக் கட்டிக் கொண்டு வந்து விட்டாராம்-நகைகளை மாற்றி மாற்றிப் போட்டுப் படமெடுக்க!



• சிநேகிதம் டாட்காம்!
-விஜய் சிவா, கிருஷ்ணா, பாம்பே ஜெய்ஸ்ரீ.

பாம்பே ஜெயஸ்ரீ பாடச் சொன்னால் உடனே பாடி விடுவாராம். லால்குடியைப் படம் எடுக்கிறபோது, வயலின் வாசித்துக் கொண்டே இருந்தாராம்.

வேறொரு பாடகியின் கணவர் ரொம்பப் படுத்தல் கேஸ். "பிறகு நானே சொல்லி விட்டேன். அம்மா, இனிமே உன் புருஷனையும் கூட்டிக் கொண்டு வராதே. மனுஷர் பிராணனை வாங்கி விடுகிறார் படம் எடுப்பதற்குள், அவருக்குப் பதில் சொல்லியே நேரம் போய் விடுகிறது!"

செக்காவஸ்கி, ஸ்ட்ராவன்ஸ்கி, சிபிலியஸ் போன்ற மேலை நாட்டு கம்போஸர்களை மிகவும் ரசிக்கிறார் ராஃப்.

''பெரி கோமோ, நாட்கிங் கோல், ஜிம் ரீவ்ஸ் எல்லாம் கூட அறுபதுகளின் பிரபல பாடகர்கள்தாம். கேட்பதுண்டா?"


"ஆகா, அவர்கள் எல்லாம் என் ஃபேவரிட்டுகள்! அதுவும் என்ன

திக், ரிச் வாய்ஸ்! இப்போது எம்டிவியில் எதையாவது ரசிக்க முடிகிறதா? இளைய தலைமுறையைக் கண்டு நான் பரிதாபப்படு கிறேன்!'' என்கிறார். ஜாஸ், வெஸ்டர்ன் கிளாசிகல் ரசித்தாலும், இந்துஸ்தானி இசையின் பரம ரசிகர் ராஃப்.

''பீம்ஸென் ஜோஷியையும், கிஷோரி அமோங்க்கரையும் கேட்டுக் கொண்டே அதில் அப்படியே அமிழ்ந்து போய் விட லாம். என்ன பாட்டு! ரவிசங்கர், அம்ஜத் அலி சிதார் கேட்பேன். அக்பர் அலியின் சரோட் ரசிப்பேன்.''

''கஜல்..?''

''பிடிக்கும். ஆனால் எனக்கென்னமோ ஜக்ஜித் சிங்கை விட பூபீந்தரை அதிகம் ரசிக்க முடிகிறது. உணர்ச்சியும், ஒருவித சோகமும் அவர் குரலில் இழைகின்றன.''



''ஓடுற பஸ்ல ஏம்பா பிக்பாக்கெட் அடிச்சே?''

''ஓடாத பஸ்ல ஒருத்தருமே ஏமாட் டேங்கிறாங் களே, சார்!''

– வி. சாரதிடேச்சு

இந்தித் திரைப்பட இசையமைப்பாளர் களில் இவர் ஃபேவரிட் மதன்மோகனும், எஸ்.டி. பர்மனும்தான். ''லதா மங்கேஷ்கர் மாதிரி நிறையப் பேர் கிடைக்கலாம். கவிதா கிருஷ்ணமூர்த்தி, அனுராதா பட்வல் என்று நிறையப் பேர் இருக்கிறார்கள். ஆனால் இன்னொரு ரஃபி? இன்னொரு முகேஷ்? இன்னொரு ஹேமந்த் குமார்? இன்னொரு தலத் மெஹ்மூத்? ஒவ்வொருவருக்கும் என்ன யுனீக் வாய்ஸ்! அப்புறம்... மன்னா டே எப்படிப்பட்ட வித்தியாசமான பாடகர்!''

பெயிண்டிங்கும் இவருக்குக் கைவந்த கலை. தாம் எடுக்கும் புகைப்படங்களின் பின்னணிக்கு, பெரிது பெரிதாக கான் வாஸில் வண்ணக் கலவைகளைத் தீட்டித் தள்ளியிருக்கிறார். (ஓவியர் ஆதிமூலத்தின் ரசிகர்!) ''ஜே.பி. சிங்கல் என்றொரு பிரபல புகைப்பட நிபுணர் இருக்கிறார். ஆர்ட்டிஸ்ட்–கம்– போட்டோகிராபர். நான் அவரது பரம ரசிகன்!'' என்கிறார் ராஃப்.

இந்துஸ்தானி அல்லது மேற்கத்திய இசை அளவுக்குக் கர்நாடக இசையை ரசித்ததில் லையாம் இவர். ஆனால் பாம்பே ஜெயஸ்ரீ மாதிரி சிலர் கச்சேரிகளுக்கு அழைத்தால் போய்க் கேட்டு வருவதுண்டாம்.

சிட்டி பாபு வீணை, கத்ரிகோபால்நாத் சாக்ஸபோன், லால்குடி மற்றும் கணேஷ் குமரேஷ் வயலின்– இவற்றைக் கேட்டதுண் டாம்.

''உங்கள் படங்களில் லைட்டிங்குக்கு இம்பார்டன்ஸ் அதிகம் கொடுப்பீர்களோ?''

''ஆர்டினரி லைட்டிங்தான். அதுவும் இரண்டே இரண்டுதான். லைட்டை எங்கே வைக்கிறோம், எப்படி வைக்கிறோம் என்பது தான் முக்கியம். அவுட்டோர் ஆனால், உட்காரும் போது, நிற்கும்போது லைட்டைப் பார்த்து அட்ஜஸ்ட் செய்து கொள்ளுவேன்.

''பாடகர் பாடகிகள் நான் எடுக்கும் புகைப்படங்களுக்கு ரொம்பவே ஒத்துழைப் புக் கொடுப்பார்கள். படம் எப்படி வரவேண்டும் என்று நான் விரும்புகிறேனோ அப்படி நடந்து கொள்வார்கள். குறைந்த பட்சம் நான்குமணி நேரம் வரை ஒரு வரைப் படமெடுக்கச் செலவழித்ததுண்டு'' என்கிறார் இந்த மனிதர்.

ராஃபைப் பொறுத்தவரை, போட் டோஜினிக் என்பதில் எல்லாம் அவருக்கு நம்பிக்கை இல்லை. ''எல்லாரும் ஒரே மாதிரி தான் எனக்கு. புகைப்படம் எடுப்பவர் தமது திறமையைக் காண்பித்தால் அழகில்லாத வரைக் கூட ஆகா என்று சொல்ல வைக்கிற மாதிரி படம் எடுக்க முடியும்!'' என்கிறார்.

சமீபத்தில் ஜெருசலத்திலிருந்து கௌரின் என்றோர் இளைஞர் இவரைச் சந்திக்க வந்திருந்தாராம். ''அவரைப் பார்த்த போது சாயலில் அவர் கொஞ்சம் ஜீஸஸ் மாதிரி இருந்தார். பாருங்கள், கிரைஸ்ட் மாதிரி இல்லை?'' என்று சுவரில் மாட்டியிருந்த புகைப்படத்தைக் காண்பித்தார். (ஆம் என்று சொல்லுவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை!)


இமாசல பிரதேசம், ஊட்டி, குடகு என்று அவ்வப்போது ட்ரெக்கிங் போய் விடுகிறார் ராஃப். போகிற வழியில் எல்லாம் அங்கங்கே நின்று இயற்கைக் காட்சிகளை ஓவியங்களாகவும் காமராவிலும் பதிவு செய்து கொண்டு வந்து விடுகிறார்.

சிக்கிம், பனாரஸ் இரண்டும் இவரைக் கவர்ந்த நகரங்கள்.

சந்திப்பு : **எஸ்.வி.என்.**

அட்டை, கட்டுரைக்கான படங்கள்: **ராஃப்**





ஸ்ரீ ராமஜெயம்

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ஹனுமந்த் ஜெயந்தி மஹோத்ஸவம்

ஸ்ரீ பக்த ஆஞ்ஜநேயர் லட்சார்சனை

23.12.2000 முதல் 25.12.2000 வரை

நடைபெறும் இடம்:

T.V.R. சுப்பு செட்டி வசந்த மண்டபம், எண் 14, மேற்கு சித்திரகுளம் தெரு, மயிலாப்பூர்.

மனோஜவம் மாருத துல்ய வேகம்
ஜிதேந்திரியம் புத்திமதாம்
வரிஷ்டம்
வாதாத்மஜம் வானரயூத முக்யம்
ஸ்ரீராமதூதம் சிரஸா நமாமி

23.12.2000 சனிக்கிழமை. **நவதானிய காப்பு கட்டணம் ரூ. 250/-** நவக்கிரகதோஷம் மற்றும் சனீஸ்வரதோஷம் விலகுவதற்கு இந்த உபயத்தில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கு **2 கிராம் வெள்ளி டாலர்** வழங்கப்படும்.

24.12.2000 ஞாயிற்றுக்கிழமை **செந்தூரகாப்பு கட்டணம் ரூ. 250/-** தேஜஸ் உண்டாக, சத்ரு பயம் நீங்க கலந்து கொள்ளவும். இந்த உபயத்தில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கு **2 கிராம் வெள்ளி டாலர்** வழங்கப்படும்.

ஹனுமந்த்ஜெயந்தி அன்று 25.12.2000 திங்கட்கிழமை. **விசேஷ வெண்ணெய் காப்பு. ரூ. 500/- அஷ்ட ஐஸ்வர்யமும்** உண்டாக கலந்து கொள்ளவும். இந்த உபயத்தில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கு **5 கிராம் வெள்ளி டாலர்** மற்றும் **பிரசாதம்** வழங்கப்படும்.

வடை மாலை உபயம் ரூ. 100/- (20 வடை மற்றும் காப்பர் டாலர்)

லட்சார்சனை கட்டணம் ரூ. 60/- (காப்பர் டாலர்)

(குறிப்பு: அனைத்து உபயத்திற்கும் செந்தூரம் பிரசாதம் வழங்கப்படும்)

MO, DD அனுப்ப, நேரில் அணுக வேண்டிய முகவரி:

**ஸ்ரீ சுதர்ஷன மஹா யக்ஞ கமிட்டி,
S. ஸ்ரீ ரங்கராஜபட்டாசாரியார்,
பழைய எண் 5, புதிய எண் 32.
கேசவப்பெருமாள் சன்னதி வீதி,
மைலாப்பூர், சென்னை – 600 004.
போன்: 4610179**

இங்ஙனம்

**ஸ்ரீ சுதர்ஷன மஹா யக்ஞ கமிட்டி,
S. ஸ்ரீ ரங்கராஜபட்டாசாரியார்,
T. சம்பத்குமார்,
V. நந்தகுமார்,
M. பிரவின்குமார்
T. சுதர்ஸன்**

மண்டை ஓடு

தென்னை மரத்தடியில் பள, பள வென்று மின்னியவை கண்ணாடித் துண்டுகள். குழந்தைகள் இல்லாத வீட்டில் கண்ணாடிகளை உடைத்துப் போட்டிருப்பது குறித்து சந்தேகம் எழுந்தது. எந்த ஜன்னலிலும் கண்ணாடி உடைந்திருக்கவில்லை. அந்தப் பெண்ணின் உடல் இரண்டாம் முறையாகப் போஸ்ட் மார்ட்டம் செய்யப்பட்டது. அப்போது நிபுணர்கள் ஆச்சர்யப்படும் விதமாக அந்தப் பெண்ணின் உடலில் சிறு, சிறு கண்ணாடித்துண்டுகள் கண்டெடுக்கப்பட்டன.



கணவனைப் பிடித்து உலுக்கியதில் உண்மை வெளிவந்துவிட்டது. தென்னை மரத்தடியில் எடுக்கப்பட்ட கண்ணாடித் துண்டுகளையும், உடலில் இருந்து எடுக்கப்பட்ட கண்ணாடித் துண்டுகளையும் சோதனை செய்தபோது, இரண்டின் குணாம்சமும் ஒன்று எனத் தெரிந்தது. கண்ணாடித் துண்டுகளை நாட்டுத் துப்பாக்கியில் போட்டு மனைவியை மிக நெருக்கத்தில் நின்று சுட்டிருக்கிறான் அந்தப் பெண்ணின் கணவன்! பின்னர் துப்பாக்கியைக் கல்லில் கட்டி கிணற்றில் போட்டு விட்டான். அதன்பின் சமையலறையில் தண்ணீரைக் கொட்டி அரிவாள்மனையால் மனைவியைச் சுட்ட இடமான நெஞ்சில் குத்தி, தான் செய்த கொலையை, ஒரு எதேச்சையான விபத்து போல செட்டப் செய்திருக்கிறான். ஆனால் மாட்டிக் கொண்டான். கண்ணாடித் துண்டுகளைத் தென்னை மரத்தடியில் பார்த்ததும் தடய அறிவியல் நிபுணர்களுக்குச் சந்தேகம் வந்து துருவவேதான் பெண்ணின் மரணத்துக்குக் காரணம் தெரிந்தது.

சில ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம் இது. ஸ்கூட்டரில் சென்ற இளம் தம்பதி ஏதோ ஒரு வாகனத்தால் மோதப்பட்டு சாலையிலேயே இறந்து போனார்கள். சொந்தக்காரர்கள், அவர்களின் மரணத்துக்குக் காரணமானவனைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று போலீஸிடம் வற்புறுத்தினார்கள். சாதாரணமான நடைமுறையில் போலீஸ் அந்த வழக்கைக் கையாண்டிருந்தால் பல வருடங்கள் இழுக்கப்பட்டு "undetectable" என்று மூடும் வாய்ப்புகூட இருந்திருக்கும். ஆனால் இறந்துபோன தம்பதிகளின் உறவினர்கள் கொஞ்சம் செல்வாக்காக இருந்ததால் விஷயம் கொஞ்சம் சீரியஸாக கவனிக்கப்பட்டது. தடய அறிவியல் நிபுணர்கள் களத்தில் குதித்தார்கள். சம்பவம் நடந்த இடம் மிகக் குறுகலான சாலை. டிராபிக் நிரம்பிய பீக் அவர். ஏராளமான பலதரப்பட்ட வண்டிகள் போய்க் கொண்டிருக்கும் சாலையில் மோதியது எந்த ரக வண்டி என்று எப்படிக் கண்டு பிடிப்பது? இறந்தவர்களின் உடல் சோதனை செய்யப்பட்டது. விபத்தைச் சந்தித்த ஸ்கூட்டரும் நன்கு சோதனையிடப்பட்டது. ஒவ்வொரு பாகத்தையும் தனித்தனியாக ஆராய்ந்தோம். பின் பகுதியில் ஸ்டெப்னி டயர் பொருத்தி வைக்குமிடத்தில் டயரைப் பொருத்தும் நான்கு சிறு ஸ்க்ரூக்களுள் ஒன்றில் கொஞ்சம் பெயிண்ட் ஒட்டியிருந்தது. அந்தப் பெயிண்டின் கலர் நகரப் பேருந்துகளில் பூசப்பட்டிருக்கும் கலரோடு பொருந்திப் போனது. **ஆயிரக்கணக்கில் பஸ்கள் ஓடும் நகரத்தில் எந்த பஸ்ஸின் பெயிண்ட் என்று எப்படிக் கண்டுபிடிப்பது?**

மகாத்மியம்!

தடய அறிவியல் நிபுணர் டாக்டர் பி. சந்திரசேகரன்



• விஜி

சம்பவம் நடந்தபோது, அந்தக் குறிப்பிட்ட நேரத்தில், அந்தப் பகுதியை எந்தெந்த பஸ்கள் கடந்து போகின்றன என்ற பட்டியல் எடுக்கப்பட்டது. அந்த பஸ்கள் கடுமையாக சோதனையிடப்பட்டன. ஒரு பஸ்ஸின் முன் புறத்தில் வலதுபுறம் கொஞ்சம் நசுங்கியிருந்தது. பெயிண்ட் உரிந்திருந்தது. ஓட்டுனர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

நடந்த விஷயங்கள் வெளிவந்தன. தம்பதி சென்ற ஸ்கூட்டர், பின்னால் வந்த பஸ்ஸுக்கு இடம் கொடுக்காமல் சென்றிருக்கிறது. பஸ்காரன் அடித்த ஹார்ன் ஒலி அவர்கள் காதில் விழவில்லை. அதற்குக் காரணம் அவர்களிருவரும் உரத்தக் குரலில் பேசிக் கொண்டே சென்றதுதான். எனவே அவர்களின் கவனத்தைக் கவருவதற்காக பஸ் ஓட்டுனர் மிக நெருக்கமாக பஸ்ஸை செலுத்தியிருக்கிறார். பஸ்ஸின் முன்புறம் ஸ்கூட்டரின் மீது பட்டவுடனேயே ஸ்கூட்டர் குட்டிக் கரணம் போட்டு விட்டது. தம்பதி படுகாயமடைந்து இறந்து போனார்கள்.

ஸ்கூட்டரின் பின்புறம் ஒட்டிக் கொண்டிருந்த பெயிண்ட் துகள்கள் பஸ்ஸில் அடிக்கப்பட்டிருந்த பெயிண்ட் துகள்கள்தான் என்று உறுதிபடுத்திப் பார்த்தது தான் மிக முக்கிய சோதனை.

அறிவியல் உலகில் எந்த கண்டு பிடிப்புக்கும் முதலில் எதிர்ப்பு இருக்கும். அதற்கு முதல் காரணம் சக விஞ்ஞானிகள் ஒரு விஞ்ஞானியின் கண்டுபிடிப்பை உடனே ஒப்புக் கொள்ள மாட்டார்கள். பலவிதமான சந்தேகங்களைக் கிளப்புவார்கள். சவாலுக்கு அழைப்பார்கள். சகட்டு மேனிக்குக் கேள்விகள் கேட்பார்கள். குறிப்பிட்ட விஞ்ஞானி என்ன சொல்ல வருகிறான் என்பதை முழுவதும் தெரிந்து கொள்ளாமல் விமர்சனம் செய்வார்கள்.

இதில் விசித்திரம் என்னவென்றால் வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள்கூட ஒப்புக் கொண்டு விடுவார்கள். நம் ஊர் ஆட்களைத் திருப்திப் படுத்துவது மிகவும் கடினம். அப்படிப்பட்ட ஒரு அனுபவத்தைத்தான் சொல்லப் போகிறேன்.

கிரேனியல் வால்ட் என்று சொல்லப்படும் உச்சி மண்டையில் கரோனல், சஜிட்டல், லேம்ப்டாய்டு என்ற மூன்று இணை கோடுகள் இருக்கின்றன. இந்த இணை கோடுகள் மனிதனுக்கு மனிதன் மாறுபடும் என்பதே என் கண்டு பிடிப்பு. கொலை செய்யப்பட்டோ அல்லது வேறு எதாவது சம்பவம் காரணமாகவோ மரணமடைந்த ஒருவரின் மண்டையோட்டுடன் எலும்புக்கூடு மட்டுமே கிடைக்குமானால், அந்தமண்டையோட்டை வைத்துக் கொண்டு ஏற்கெனவே உயிரோடு இருக்கும் போது அவரின் மண்டைப் பகுதி எக்ஸ்ரே எடுக்கப்பட்டிருக்குமானால் அதனுடன்



ஒப்பிட்டு "மாண்டு போனது மன்னார் சாமி"தான் என்று உறுதியாகச் சொல்ல முடியும். எனது கண்டுபிடிப்புக்கு முன்னர் மண்டையோட்டை வைத்து தோராயமான வயது, ஆணா, பெண்ணா எந்த இனத்தவர் (race) என்பதை மட்டும்தான் சொல்லி வந்தார்கள்.

மண்டையோடு இணை கோடுகள் என்பவை உண்மையிலேயே கோடுகள் அல்ல. அவை ஆங்கிலத்தில் sutures எனப்படும் அசையா மூட்டே (Immobile Joint) ஆகும். குழந்தைப் பிறந்தவுடன் மண்டையோட்டில் தனித்தனியாக இருக்கும் எலும்புகள் ஒன்று சேராமலேயே இருக்கும். இரண்டு வயதுக்குள் அவை இணைந்து விடும். அப்படி ஏற்படும் இணைப்பில், இரண்டு எலும்புகளுக்கிடையில் இருக்கும் வளைவு நெளிவான சிறிய இடைவெளியைத் தான் sutures என்கிறோம். இந்த sutures என்கிற இணைப்புக் கோடுகள், வளைந்தும் நெளிந்தும் இருக்கின்ற அமைப்பு முறை அவரவர் மரபுவழி பண்புகளால் கட்டுப் படுத்தப்படுகின்றன. எனவே ஒரு நபர் வளர்ச்சியடைந்தாலும் வடிவ அமைப்பு மாறாது. ஒரு நபரின் இருபத்தைந்து வயதில் எடுத்த எக்ஸ்ரே படத்திலும் ஐம்பது வயதானவுடன் எடுத்த எக்ஸ்ரே படத்திலும் பார்த்தால் இந்தக் கோடுகளின் வடிவமைப்பு மாறாதிருப்பது தெரியும். ஒப்பு நோக்கி பார்ப்பதற்கு இணை கோட்டில் ஒரு பகுதியின் வடிவமைப்பே போதுமானது.

இதையெல்லாம் நான் ஆராய்ந்து சொன்னபோது "மண்டையோட்டை மருத்துவரல்லாதார் ஆராயக் கூடாது" என்றார்கள். மண்டையோட்டை என்னைப் போன்றவர்கள் ஆராய்வது மருந்து கொடுப்பதற்கு அல்ல. உலகெங்கும் உள்ள எலும்பு ஆராய்ச்சியாளர்களால் பெரும்பாலோர் Physical Anthropologist எனப்படும் மருத்துவர் அல்லாதவரே. மருத்துவத்துக்கான நோபல் பரிசை ஒரு முறை பெற்ற மெக்ளின் டாக் என்ற பெண்மணி டாக்டரல்ல. இந்தக் கண்டுபிடிப்பில் இருந்த ஒரே ஒரு நடைமுறை சிக்கல் என்னவென்றால் உலகில் உள்ள எல்லோர் தலையையும் எக்ஸ்ரே எடுத்து வைத்துக் கொள்ள வேண்டுமா என்பதே! விரல்ரேகை, உதட்டுக் கோடுகள் ஆகியவற்றில் உள்ள வித்தியாசங்களை வைத்தும் ஆட்களை அடையாளம் கண்டு பிடிக்கலாம். பல குற்ற வழக்குகளில் அந்த முறை உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது. எனவே, இந்த அடிப்படையில் எல்லோரது உதட்டு ரேகைகளையும் பதிவு செய்து வைக்க வேண்டும் என்று நாம் சொல்வதில்லையே. விரல்களோ உதட்டு சதைப் பாகங்களோ புதைக்கப்பட்ட உடலில் அழியக் கூடிய பாகங்கள் ஆகும். ஆனால் மண்டையோடுகள் எரித்தாலோ அல்லது புதைத்தாலோ அழியாதவை. எனவேதான் அதிலிருக்கும் இணை கோடுகள் தடயமாக உபயோகிக்கப்பட வேண்டும்.

சில வழக்குகளில் நான் கொடுத்த அறிக்கை காரணமாக என்னை பழிவாங்கு

'ஜங்கிள் டைரி'



வீரப்பனால் கடத்தப்பட்ட கன்னட நடிகர் ராஜ்குமார் காட்டில் இருந்த அனுபவத்தை டி.வி. நிகழ்ச்சி மூலம் சொல்ல இருக்கிறாராம். இந்நிகழ்ச்சிக்கு 'ஜங்கிள் டைரி' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். 'சன்' டீ.வி. கன்னடத்தில் நடத்தி வரும் உதயா டீ.வி.யும் உஷே டீ.வி.யும் இந்நிகழ்ச்சியைத் தாங்கள் டெலிகாஸ்ட் செய்ய முண்டியடிக்க, இரண்டு டீ.வி.க்கும் தண்ணி காட்டி விட்டு தூர்தர்ஷனில் டெலிகாஸ்ட் செய்ய இருக்கிறார்களாம். நிகழ்ச்சி தயாரிப்பு வேறுயாருமல்ல. ராஜ்குமாரின் மகனான சிவராஜ்தானாம். 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்கிறார்கள்' என்று முணுமுணுக்கிறார்கள் சில கன்னட டீ.வி. நிகழ்ச்சி தயாரிப்பாளர்கள்!

- அனு

வது போன்ற நடவடிக்கைகளையும் நான் சந்தித்திருக்கிறேன். சுப்பிரமணிய சாமி - தடா ரவி புகைப்பட விவகாரத்தில் 'படம் போலி' என்ற உண்மையை நான் அம்பலப்படுத்திய காரணத்தால், சென்னை பல்கலைக் கழகத்தில் தடய அறிவியல் துறையின் சிறப்பு ஆராய்ச்சி பிரிவை, மான்யக் குழு எவ்வளவோ கேட்டுக் கொண்டும் என் தலைமையில் துவங்குவதற்கு ஜெயலலிதா அரசு மறுத்துவிட்டது. அதிலும் அந்த மான்யக் குழு என்னை எமிரெட்டஸ் ஃபெல்லோ என்று நியமித்து ஐம்பது லட்சம் மான்யம் வழங்கி இந்தப் பிரிவைத் துவங்குமாறு தமிழக அரசைக் கேட்டுக் கொண்டது. தமிழக அரசு matching grant போட்டுத் துவங்கியிருக்க வேண்டும். ஆனால் என் மீதுள்ள கோபத்தில் அந்தப் பிரிவையே துவங்கவில்லை.

நடிகைகள் தூக்கு மாட்டிக் கொண்டு தற்கொலை செய்து கொள்வது பற்றியும், அது போன்ற மரணங்களில் தடய அறிவியல் நிபுணர்கள் சந்திக்கும் சவால்களைப் பற்றியும் சில வாரங்கள் முன்பு சொல்லியிருந்தேன். அச்சான மை உலர்வதற்குள் நடிகை விஜி தூக்கு மாட்டிக் கொண்டு இறந்த சம்பவம் நடந்திருக்கிறது. மரணம் உண்மையிலேயே தற்கொலையா அல்லது கொலை செய்து தற்கொலை போல் ஒருவரை செட்டப் செய்து மாட்டி விட்டார்களா என்பதைத் தெரிந்து கொள்ளும் தடயங்களை ஏற்கெனவே விளக்கியிருக்கிறேன். ஒரு முக்கியமான விவரம் சொல்லவில்லை. ஒருவர் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்து கொண்டால், கழுத்தின் கீழ் உள்ள கயிற்றில் அந்த நபரின் உமிழ்நீர் இருப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது.

ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு கோடியக்கரை மிராசுதார் சண்முகம், சி.பி.ஐ. விசாரணையின்போது மரணமடைந்தார். வேதாரண்யம் பயணிகள் இல்லத்தின் பின்புறம் இருந்த மரத்தில் தூக்கு மாட்டிக் கொண்டு இறந்து போனார் அவர். ஜெயலலிதா சி.பி.ஐ.யைக் குற்றம் சாட்டி கடுமையாக சட்டசபையில் பேசினார். முதல்வரின் அந்தப் பேச்சு அதிகாரிகளை அதிர்ச்சியடைய வைத்தது.

(தொடரும்)



கூடுதல் ஆதாயங்கள்
உடன் சிறப்பு பேக்கேஜ்

இணையற்ற சிறப்பு அம்சங்கள் இணையற்ற ஆதாயங்கள்.

பணம் செலுத்த வசதியான தேர்வுகள் • முதிர்வுக்குப் பின்னும் தொடரும் தேர்வு • கூடுதலாக, முதிர்வுக்குப் பின்னும் போனஸ் • தனிநபர் விபத்துக் காப்பீடு ரூ 50,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது

அம்சங்கள் : திட்டம் : ஓபன் எண்ட் வரிசேமிப்பு மற்றும் காப்பீடு திட்டம்.
காப்பீடு வரம்பு : செலுத்தப்படாத ஆனால் காலாவதியாகாத இலக்குத்தொகை வரையிலான ஆயுள்காப்பீடு.

இரு திட்டங்களின் தேர்வு	:	10 ஆண்டு / 15 ஆண்டு
இலக்குத் தொகை	:	குறைந்தபட்சம்ரூ 15,000/- அதிகபட்சம் ரூ 75,000/-
செலுத்துதல்	:	வருடாந்திரம் 1/10 பங்கு அல்லது 1/15 பங்கு மற்றும் அரை வருடத்திற்கு 1/20 பங்கு அல்லது 1/30 பங்கு இலக்கின்படி
போனஸ்	:	முதிர்வின்போது இலக்குத் தொகையில் 5% / 7.5%.

வரிச்சலுகைகள் : முதலீட்டாளரின் பேரில் அல்லது அவரது துணைவர் அல்லது குழந்தை பேரில் செய்யப்படும் முதலீடுகளுக்கு வருமான வரிச்சட்டம் பிரிவு 88ன் கீழ் வரிக்கழிவு 20%.
கூடுதல் ஆதாயங்கள் : புதுப்பிக்கும் பங்களிப்புக்கு பணம் செலுத்துவதில் வசதி : புதுப்பிக்கும் பங்களிப்புக்கு 3 மாதங்கள் வரை பணம் செலுத்தும் வசதி (*சில குறிப்பிட்ட சமயங்களைத் தவிர*).
தனிநபர் விபத்துக் காப்பீடு : ரூ. 30,000லிருந்து ரூ. 50,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.
விற்பனை/மறுகொள்முதல் : வாராந்திர விற்பனை & மறுகொள்முதல் என்ஏவி அடிப்படையிலான விலைகளில் –தற்போதைய விற்பனை விலை என்ஏவியிலிருந்து 1.5% கூடுதல் மற்றும் மறுகொள்முதல் விலை என்ஏவிக்கு 1.5% குறைவாக.
முதிர்வின் போது/பின்பு பல தேர்வுகள் : வளர்ச்சி பெற திட்டத்தில் தொடர்ந்து பங்கு பெறுவது அல்லது விற்பனைக்குள்ள வேறு ஏதேனும் யூனிட் திட்டத்திற்கு மாற்றிக் கொள்வது அல்லது முதிர்வுத்தொகையை பெறுவது.
முதிர்வுக்கு பின்பு கூடுதல் போனஸ் : முதிர்வுக்குப் பின்பு கூடுதல் போனஸ் இலக்குத் தொகையில் 0.5%, திட்டத்தில் முதிர்வுக்குப் பின்பு தொடரும் ஒவ்வொரு முழுமையான ஆண்டுக்கும் இது உரித்தாகும்.

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா

இந்தியாவின் மிகப் பெரிய மியூச்சுவல் ஃபண்ட்

13, சர் விட்டல்தாஸ் தாக்கர்சி மார்க், நியூ மெரைன் லைன்ஸ், மும்பை 400 020.
தொ.பேசி: 2031818. எங்கள் இணையதளம் வருக www.unittrustofindia.com


கூடுதல் விபரங்களுக்கும் மற்றும் விண்ணப்பப் படிவம்/வழங்குபத்திரத்திற்கும் தயவு செய்து உங்களுக்கு அருகிலுள்ள யூடிஐ அலுவலகம் அல்லது தலைமை பிரதிநிதி, முகவரை தொடர்பு கொள்ளவும்.

1.6 மில்லியன் யூனிட்தாரர்கள் அடங்கிய ஓர் குடும்பம்

சட்ட அமைப்பு 1963 யூடிஐ சட்டத்தின் பிரிவுகளின் கீழ் யூனிட் செயல்படுகிறது. [illegible]

தென் மண்டல அலுவலகம் : சென்னை தொ.பேசி: (044) 5210347. **கிளை அலுவலகங்கள்**: சென்னை தொ.பேசி: 5210356, 5230985. • கோயம்புத்தூர் தொ.பேசி: 214973. • மதுரை தொ.பேசி: 738186. • திருச்சி தொ.பேசி: 760060. **ஃபிரான்சைஸ் அலுவலகம்**: சேலம் தொ.பேசி: 416414. **சிஆர் கலெக்ஷன் மையங்கள்**: குன்னூர் தொ.பேசி: 31037. • கடலூர் தொ.பேசி: 21712. • தர்மபுரி தொ.பேசி: 61012. • திண்டுக்கல் தொ.பேசி: 432244. • ஈரோடு தொ.பேசி: 252494. • காஞ்சிபுரம் தொ.பேசி: 20076. • காரைக்குடி தொ.பேசி: 22277. • மயிலாடுதுறை தொ.பேசி: 26739. • நாகர்கோவில் தொ.பேசி: 40274. • பாண்டிச்சேரி தொ.பேசி: 339080. • ராஜபாளையம் தொ.பேசி: 21360. • தஞ்சாவூர் தொ.பேசி: 31374. • திருநெல்வேலி தொ.பேசி: 339567. • தூத்துக்குடி தொ.பேசி: 325621.

188/11-2000 C TAM (TN) A





2000 டிசம்பர் 17
விக்ரம மார்கழி 2
மலர் : 59
இதழ் : 20

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




வதைக்கும் வேலை நிறுத்தம்!

நாடு முழுவதும் ஆறு லட்சம் தபால்துறை ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். தங்கள் கோரிக்கைகள் நியாயமானவைதான் என்று அவர்கள் கருதலாம். 'அரசு, கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டது; முன்கூட்டியே அறிவித்துவிட்டு, போதுமான அவகாசம் அளித்து காலக்கெடு தாண்டிய பின்னரே நாங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளோம்' என்று விளக்கமும் அளிக்கலாம். ஆனால், எந்த விளக்கமும் பாதிக்கப்பட்ட பொதுமக்களின் மனப்புண்ணை ஆற்றாது.

தனியார் துறையின் கொரியர் சேவை இன்னமும் பெரும்பாலான இந்தியர்களுக்குக் கட்டுப்படியாகாத விஷயமாகவே இருந்து வருகிறது. குக்கிராமங்களிலும் சின்னஞ்சிறு நகரங்களிலும் வாழும் மக்களை இந்தத் தனியார் சேவை இணைப்பதும் இல்லை. நாட்டில் எங்கும் யாவரும் பயன்படுத்தக்கூடிய ஒரே சேவை தபால் துறையினுடையதுதான். இதில் தபால் வினியோகம் தவிர சிறு சேமிப்பு போன்றனவும் உள்ளடக்கம்.

ஆறு லட்சம் ஊழியர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்பதற்காக நூறுகோடி மக்கள் இன்னல்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.



அஞ்சல் துறைக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வான் அறுபது லட்சம் ரூபாய் செலவில் பீஹாரிலிருந்து தொண்டர்களை ரயிலேற்றி, தமது புதிய கட்சியின் துவக்க விழாவுக்கு அழைத்து வருவதில் சமீப காலங்களில் 'பிஸி'யாக இருந்துவிட்டார். தபால்துறை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தால் என்னென்ன வேலைகள் ஸ்தம்பித்துப் போகும்? அதனால் நாட்டுக்கு எத்தனை நஷ்டம் என்றெல்லாம் யோசிக்கும் மனோநிலை அவருக்கு இருந்திராது.


ஆனால், தபால்துறை ஊழியர்கள் ஆறு மாதங்களுக்கு முன்பாகவே இக்கோரிக்கைகளை முன்வைத்து, வேலை நிறுத்த தேதியையும் அறிவித்துவிட்டனர். இவ்வளவு காலமும் தொலைத் தொடர்பு துறை அலுவலகம் விரலசைக்காமல் இருந்தது ஏன் என்பது பாஸ்வானுக்கு மட்டுமே விளங்கக்கூடிய ரகசியம்! வேலை நிறுத்தம் தொடங்கிய பிறகுகூட பாஸ்வான் ஜன சக்தியில்தான் பிஸி!

கடந்தகால அஞ்சல்துறை வேலை நிறுத்தங்களால் நாட்டில் தொலைத் தொடர்பும் பொருளாதாரமும் கடுமையாக பாதிக்கப்பட்டன என்பது வரலாறு. சமீபத்திய அந்த வரலாற்றையும் ஊழியர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியையும் ஒருங்கே மறந்துவிட்டு மத்திய அரசு மக்களை வதைப்பது கொடுமை.

பிரதமரின் தடுமாற்றம்!

காஷ்மீரில் போர் நிறுத்த அறிவிப்பு செய்த பிரதமர், அத்தேசத்துடன் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு முயற்சி மேற்கொண்டிருக்கிறார். அதே சமயத்தில் உள்நாட்டில் அதுவும் நாடாளுமன்றத்தில், இங்கிதமின்றி இங்குள்ள இஸ்லாமிய சகோதரர்களின் மனம் புண்படும்படி பேசுகிறார்.

தேதியோ டிசம்பர் 6. தலைகுனிவுக்குரிய, பாப்ரி மஸ்ஜித் தகர்ப்பு தினம். தீவிரவாத நடவடிக்கைகளினால் பொதுச் சொத்துக்கள் சேதப்படுத்தப்படக்கூடும் என்று அஞ்சி ரயில்வே



துறை சரக்குகளைக்கூட ஏற்றிச்செல்ல மறுக்கும் ஓர் இறுக்கமான சூழல்.

அந்த சமயம் பார்த்து, எதிர்க்கட்சியினர் அயோத்தி பிரச்னையை நாடாளுமன்றத்தில் எழுப்பி, பாப்ரி மஸ்ஜித் தகர்ப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள அமைச்சர்கள் மூவர் ராஜினாமா செய்ய வேண்டும் என்று கோர, பிரதமருக்கோ அவர்களுக்காக வக்காலத்து வாங்க வேண்டிய நிர்ப்பந்தம்.

"அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதென்பது தேசிய உணர்வின் வெளிப்பாடுதான். பணி இனி முழுமை அடைய வேண்டும்" என்று கூறிவிட்டார் வாஜ்பாய்.

கூட்டணி கட்சிகள்கூட பிரதமரின் இந்த அறிக்கையால் அதிர்ச்சியடைந்தபோது எதிர்க்கட்சிகளின் கோபத்துக்குக் கேட்கவே வேண்டாம்!

உடனே தமது அறிக்கைக்கு விளக்கம் அளிக்கும் கட்டாயத்துக்கு உள்ளாகியுமிருக்கிறார் பிரதமர்!

முதலில் 'அயோத்தியில் கட்ட வேண்டும் என்றுதான் சொன்னேனேயொழிய, எவ்விடத்தில், எப்படி என்று நான் குறிப்பிடவில்லை' என்றும் 'அத்வானி, உமாபாரதி, ஜோஷி ஆகியோர் பாப்ரி மஸ்ஜித் தகர்ப்பு தினத்தன்று கூட்டத்தைக் கட்டுப்படுத்தத்தான் முயன்று கொண்டிருந்தார்களேயொழிய தூண்டிவிட முயற்சி செய்யவில்லை' என்றும் ஏற்கெனவே இயலாததொரு விளக்கவுரை அளித்துள்ளார். மறுநாளே, பிரச்னைக்குரிய இடத்தில்தான் ராமர் கோயில் கட்டப்பட வேண்டும்; மசூதியை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்று குட்டையைக் குழப்பியிருக்கிறார்.

பாகிஸ்தானுக்கு நேசக்கரம் நீட்டுவது முக்கியமெனில், அதைவிட முக்கியம், இந்திய முஸ்லிம் சகோதரர்களின் மனம் புண்படாமல் காப்பது என்பதைப் பிரதமர் உணர மறுக்கிறார். இதனால் அபாயங்களே அதிகரிக்கும். ◎







• முடிகொண்டான் வேங்கடராமய்யர்

• பாலக்காடு மணி அய்யர்

• வேங்கடராமய்யர்

• பாலக்காடு ரகு - மனோஜ்சிவா

இசை விழாவில் பட்டமும் பரிசும் பெறும் வித்வான்கள் அனேகம் பேர். அவர்களுள் நான்கு சீனியர்கள் சிறந்த சிஷ்யர்களையும் உருவாக்கியிருக் கிறார்கள். ஆர். வேதவல்லி, பி. ராஜம் ஐயர், டி.என். சேஷகோபாலன், பாலக்காடு ரகு— நால்வர் பற்றியும் அவர்களுடைய சிஷ்யர்கள் பேச, பட்டம் பெற்றவர்கள் தங்கள் குருவைப் பற்றிய பழைய நினைவுகளில் தோய்கிறார்கள்.

சங்கீத கலாநிதி விருது பெறும் ஆர். வேதவல்லி பற்றி அவரது மாணவி சுமித்ரா வாசுதேவன்.

'அம்மா'கிட்ட பாட்டு கத்துக்க ஆரம்பிச்ச காலம். வகுப்பில் 'சங்கராபரணம்' மாதிரியான பெரிய ராகங் களை எடுத்து விஸ்தாரமாக பாடுவாங்க. திடீர்னு ஒரு மாணவியைப் பார்த்து 'இப்ப நீ பாடு!' அப்படீம்பாங்க. தடுமாறிப்போயிடு வோம். பாட வராதுன்னு சொன்னாலும் விட மாட் டாங்க. சமாதானப் படுத்தி நம்பிக்கை ஊட்டி எப்படி யும் பாட வெச் சிடுவாங்க. அது மட்டும் இல்லை, குவாலிடியில் கொஞ்சம் கூட காம்ப்ரமைஸ் பண்ண மாட்டாங்க. ஒரு சின்ன தப்பு பண்ணா கூட அதைச் சுட்டிக்காட்டி அந்தத் தப்பு எங்கே வர்றது, எப்படி வர்றது, ஏன் வர்றது அப்படீன்னு விளக்குவாங்க. அதைப் புரிஞ்சுண்டு சரியாகப் பாடிக்காமிக்கிற வரைக்கும் விடமாட்டாங்க. சந்தேகம் கேட்டால் எரிச்சல் அடையாம பொறுமையாகப் பதில் சொல்றவங்க ரொம்ப குறைச்சல். அம்மா சந்தேகங்களை ரொம்பவும் வரவேற்பாங்க. அதுவும் தியரியில் கேட்டோம்னா இன்ன புஸ்தகத்தில் இப்படி போட்டிருக்குன்னு ஆதாரத்தோடு சொல்வாங்க.

அவங்ககிட்ட எனக்குப் பிடிச்ச இன்னொரு விஷயம், நமக்கு ஏதாவதொரு பிரச்னை, மனக்கஷ்டம்னு அவங்ககிட்ட சொன்னா, பொறுமையா நாம சொல்றதைக்கேட்டு ஒரு தேர்ந்த சைக்காலஜிஸ்ட் மாதிரி நிலைமையை எப்படி கையாளலாம்னு யோசனை சொல்றதுதான்.

ஆர். வேதவல்லி, தமது குரு முடிகொண்டான் வேங்கட ராமய்யர் பற்றி...

ஒரு தடவை, குரு அகாடமியில் பாடினார். நான் பின்னால் தம்புரா மீட்டிக் கொண்டிருந்தேன். அன்றைக்கு கச்சேரி மிகப் பிரமாதமாக அமைந்துவிட்டது. கைதட்டலும் பாராட்டுமாக ஒரே அமர்க்களம். கச்சேரிக்கு வந்திருந்த செம்மங்குடி தமது கையில் போட்டிருந்த தங்கக் கடிகாரத்தை கழற்றிக் கொடுத்து விட்டார், பரிசாக! திருவாங்கூர் ராஜாவும் ராணியும் 'டென்சிங்கும் ஹிலாரியும் இமயமலைச் சிகரத்தைத் தொட்டது ஒரு சாதனை என்றால் இன்றைய கச்சேரி இன்னொரு சாதனை" என்று புகழ்ந்து தள்ளி விட்டார்கள். எம்.எஸ்ஸும் சதாசிவமும் விளம்பரப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு ஒரு தொகையை சன்மானமாக அளித்தார்கள். குருவைப் பற்றி நினைக்கும்போதெல்லாம் இந்த நாள் என் ஞாபகத்திற்கு வரும்.

ஸ்ரீரஞ்சனி டிரஸ்டின் 'சங்கீத கலாசாகர்', ஆர்.ஆர். சபாவின் 'கலா ரத்னா', நுங்கம்பாக்கம் கல்கரல் அகாடமியின் 'சங்கீத கலா சிரோமணி' என்று ஹாட்ரிக் விருதுகள் பெறும் பி.ராஜம் அய்யர் பற்றி அவரது மாணவி ஸ்ரீகதா...

அகாடமி நடத்தும் இசைக்கல்லூரியில் நான் படித்துக் கொண்டிருந்த காலம். ஒருநாள், வகுப்பு தொடங்கும் சமயம், அகாடமி ஆபீஸிலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. நான் தான் ஸ்டூடண்ட் லீடர். 'நீ போய்ட்டு வா' என்று என்னை அனுப்பினார். மற்ற மாணவர்கள் 'நீங்கள் வகுப்பைத் தொடருங்கள் ஸார்!' என்று சொல்ல, 'உங்களுக்காகத் தானே அவபோயிருக்கா, அவளை விட்டுட்டு நான் எப்படி கிளாஸ் எடுப்பேன்?" என்று மறுத்துவிட்டாராம். விஷயம் தெரிந்தவுடன் நெகிழ்ந்து போய்விட்டேன். என் ஒருத்திக்காக காத்திருந்து அவர் கிளாஸ் எடுத்ததை என்னால் இன்னும் மறக்க முடியவில்லை.

பி. ராஜம் அய்யர் தமது குரு அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் மற்றும் நீதிபதி டி.எல். வேங்கடராமய்யர் பற்றி...

அரியக்குடியில் பத்து வருடம் குருகுலவாசம் முடிந்த கையோடு குருவுடன் சென்னை வந்திருந்தேன். அன்று ஆர்.ஆர்.சபாவில் கச்சேரி. கச்சேரிக்கு சபாவின் தலைவர் டி.எல். வேங்கடராமய்யர் வந்திருந்தார். கச்சேரி முடிந்தவுடன் "நீ அற்புதமான ஒரு குருவிடம் குருகுலவாசம் செய்திருக்கிறாய். இனி நீ ஏதாவது ஸ்பெஷலைஸ் பண்ண வேண்டும், சென்னையிலேயே தங்கிவிடுகிறாயா?" என்று கேட்டார். "குருநாதரிடம் உத்தரவு வாங்கிக் கொண்டு வருகிறேனே என்றேன்!" குருவைக் கேட்டபோது "நானே உன்னை மெட்ராஸுக்கு அனுப்ப வேண்டும் என்று நினைத்திருந்தேன்; அவரே உன்னைக் கூப்பிடுகிறாரா, நீ அதிர்ஷ்டசாலிதான்" என்று ஆசீர்வதித்து அனுப்பினார்.



• வேதவல்லி - சுமித்ரா



• ராஜம் அய்யர் - ஸ்ரீகதா

"உன்னை எதற்கு வரவழைத்தேன் தெரியுமா? இன்னொரு சமுத்திரத்தை உனக்குக் காண்பிக்கப் போகிறேன்!" என்று உற்சாகத்தோடு பயிற்சியைத் தொடங்கினார் டி.எல்.வி. முத்துசாமி தீட்சிதரின் கீர்த்தனைகளை முறையாகப் பயின்ற அவர், தீட்சிதருடைய "ஸ்ரீ மூலாதார சக்ர விநாயக" கிருதியைத் தான் முதல் பாடமாகச் சொல்லித் தந்தார். "நேரம் காலம் பார்க்க வேண்டாம், எப்பொழுதெல்லாம் முடிகிறதோ அப்பொழுதெல்லாம் வந்துவிடு!" என்று வாஞ்சையோடு சொல்லி அனுப்பியதை என்னால் எப்படி மறக்க முடியும்?

மதுரை சத்குரு சங்கீத சபாவின் 'மதுர கலா ப்ரவீண்', இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸின் 'சங்கீத கலா சிகாமணி', தமிழிசைச் சங்கத்தின் 'இசைப் பேரறிஞர்' .... இவற்றுக்குமேல் மதுரை டி.என். சேஷகோபாலனுக்கு சங்கீத நாடக அகாடமி விருது வேறு! இந்த ஹாட்ரிக் பிளஸ் ஒன் விருதுகள் பெறும் வித்வா



• சேஷகோபாலன் - காயத்ரி கிரீஷ்

னைப் பற்றி அவரது மாணவி காயத்ரி கிரீஷ்...

ஒரு நாள் என்னுடைய கச்சேரி நடந்து கொண்டிருந்தது. தற்செயலாக கடைசி வரிசைகளில் அமர்ந்திருந்தவர்களை நோட்டமிட்டுக் கொண்டிருந்த எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. காரணம், உன்னிப்பாக என் பாட்டை கவனித்துக் கொண்டிருந்தது சாட்சாத் என்னுடைய குரு! வெலவெலத்துப் போய்விட்டேன். மறுநாள், "நேற்று கச்சேரி எப்படி ஸார் இருந்தது?" என்று மெதுவாகக் கேட்டேன். பொறுமையாக எல்லாப் பாடல்களையும் அலசி ஆராய்ந்து எந்தெந்த இடங்களில் வலு சேர்க்கவேண்டும்; எப்படி வார்த்தைகளை அழுத்தமாக உச்சரிக்க வேண்டும் என்று அக்கறையோடு யோசனைகள் சொன்னார்.

டி.என். சேஷகோபாலன் தன் குரு ராமநாதபுரம் சி.எஸ். சங்கரசிவம் பற்றி...

நான் குருவிடம் பயிற்சிக்குப் போய்ச் சேர்ந்த அடுத்த வருடம் அவருக்கு 'மதுர கலா ப்ரவீணா' பட்டம் கொடுத்தார்கள். விழா அன்று நான் அவருடைய விருது பத்திரம், ஷால், மாலைகள் எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு அவர் பக்கத்திலேயே நின்று கொண்டு இருந்தேன். பிரமுகர்கள், பாடகர்கள் என்று ஏராளமான பேர் வந்திருந்தார்கள். வாழ்த்து தெரிவித்தவர்களிடம் எல்லாம் "இனிமேல் இந்தக் குழந்தை தான் பாடிப் பிரமாதமாய் வரணும்; இந்தப் பட்டம் இவனுக்குக் கிடைக்கணும், கிடைக்கும்!' என்று சொன்ன அவரின் வாக்கு இன்று பலித்துவிட்டதை நினைத்தால் பூரிப்பாய் இருக்கிறது. தமக்குப் பட்டம் கிடைத்து, ஒருபெரிய சபையில் தாம் கௌரவிக்கப்படும் அன்று கூட அவருடைய சிந்தனை என் எதிர்காலத்தைப் பற்றி இருந்திருக்கிறது. இவ்வளவு உயர்வான மனம் யாருக்கு இருக்க முடியும்?

நாரத கான சபாவின் 'நாத பிரம்மம்' விருது பெறும் மிருதங்க வித்வான் பாலக்காடு ரகு பற்றி அவரது மாணவர் மனோஜ் சிவா...

அகாடமியில் ஒரு தடவை நான் பாலாஜி சங்கருக்கு வாசிக்க வேண்டியிருந்தது. விஷயத்தை குருவிடம் சொன்னேன். "என்ன பாடப் போகிறார் என்று கேட்டுக் கொண்டு வா!" என்றார். நானும் கேட்டுக் கொண்டு வந்து சொன்னேன். ஒவ்வொரு கீர்த்தனைக்கும் எப்படி வாசிக்கவேண்டும் என்று தெளிவாகச் சொல்லிக் கொடுத்ததோடு தனி ஆவர்த்தனத்துக்கு ஒரு புது கணக்கும் சொல்லிக் கொடுத்தார். ஆனால் அந்தக் கணக்கு எனக்குச் சரியாக புரிந்ததா என்று அவருக்குக் கவலை போலும்.

அன்று மாலை மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸில் டி.வி. சங்கரநாராயணன் கச்சேரி. அதற்கு குரு தான் மிருதங்கம் வாசிப்பதாய் ஏற்பாடு. தனியாவர்த்தனம் வாசிக்கும்போது எனக்குக் கண் ஜாடை காண்பித்தார். கச்சேரி முடிந்தவுடன் "நன்றாக கவனித்துக் கொண்டாயா, அதே மாதிரி வரணும், உனக்காகத் தான் வாசித்தேன்!" என்றபோது என் மேல் அவருக்கு இருக்கும் அக்கறையை நினைத்து நெகிழ்ச்சியாகிவிட்டது.

பாலக்காடு ரகு, தமது குரு பாலக்காடு மணி அய்யர் பற்றி...

சின்னப்பையனாக நான் பர்மாவில் படித்துக் கொண்டிருந்த காலம். குரு வாசித்த எச்.எம்.வி., கொலம்பியா ரெக்கார்டுகளை மிகவும் விரும்பிக் கேட்பேன். அவரைப் பார்க்க வேண்டும் என்கிற ஏக்கம் கொஞ்சம் கொஞ்சமாக விஸ்வரூபம் எடுத்தது. அப்போதெல்லாம் நான்கு வருஷத்திற்கு ஒரு தடவை நாங்கள் ஊருக்கு வருவது வழக்கம். அப்படி ஒரு தடவை வந்திருந்தபோது திருச்சூரில் செம்பை கச்சேரி ஏற்பாடாகி இருந்தது. சௌடய்யா வயலின். என் குரு மிருதங்கம். என் சந்தோஷத்திற்குக் கேட்கவா வேண்டும்? இரவு ஒன்பது மணி கச்சேரிக்கு ஏழு மணிக்கே ஆஜராகி விட்டேன். முதன் முதலாக அவரைப் பார்த்தவுடன் ஏதோ கடவுளைப் பார்த்தது போல் ஒரு பரவச உணர்ச்சி. கச்சேரியை மெய்மறந்து கேட்டேன். அன்று கேட்ட அவருடைய வாசிப்பு இரண்டு வருடத்திற்கு என் காதில் ரீங்காரம் செய்து கொண்டு இருந்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

- சாருகேசி

படங்கள் : ஸ்ரீஹரி



கல்யாணியில்

அன்புள்ள நேத்ராவுக்கு,

கதிக்ஷா எழுதியது. ரொம்ப நாளா கடிதம் எழுதலேன்னு கோபமா? என்னப்பா பண்றது - அக்கா பையன் கல்யாணத்தில பிஸியா இருந்திட்டேன். ஸாரி, என்ன?

ஆனாலும் எந்த ஒரு நல்ல விஷயத்தைப் பார்த்தாலோ கேட்டாலோ உன்னோட உடனே பகிர்ந்துகிடணும்னு மனசு கிடந்து துடிக்கிறது.

நேத்து அப்படித்தான், அமரர் கல்கியோட நினைவு நாளை அவரோட அறக்கட்டளை சார்பில் கொண்டாடினாங்க. எவ்வளவு அழகான ஒரு விழா தெரியுமா? அதைப் பத்தி உன்கிட்ட சொல்லாம எனக்குத் தூக்கமே வரலை, அதான் உடனே இந்த லெட்டர்.

அமரர் கல்கியோட உருவச்சிலையை சி.பி.ஐ. டைரக்டர் ராகவன் திறந்து வைச்சார். சி.பி.ஐ.ன்ன உடனே எடிட்டர் சீதா ரவியோட வரவேற்புரைதான் ஞாபகத்திற்கு வருது 'தொட்ட விஷயத்திற்கெல்லாம் கூப்பிடுங்க சி.பி.ஐ.யை அப்படீங்கறாங்க எல்லாரும். நாங்களும் கூப்பிட்டுட்டோம் சி.பி.ஐ.யை, ஆனா ஒரு நல்ல விஷயத்திற்காக' அப்படீன்னு அவங்க சொன்ன உடனே ஒரே சிரிப்பு!



• ராகவன்



• மணி நாகப்பா

படங்கள்: **யோகா**

''ராஜேந்திரன் பேசும்போது, ''சோஷலிஸ்ட் காபிடலிஸ்ட்னு சொல்றோமே அது மாதிரி சி.பி.ஐ. ராகவன் ஒரு மர்மிஸ்ட் - மர்மமான சமாசாரங்களை டீல் பண்றவர், கல்கியும் கதைகளில் மர்ம முடிச்சுகளைப் போட்டு அவிழ்க்கிறார். அதனால் ராகவனைக் கூப்பிட்டது பொருத்தம்தானே'' அப்படீன்னார்.

சிற்பி மணி நாகப்பாதான் சிலையைச் செதுக்கியவராம். ரொம்ப தத்ரூபமா வந்திருக்குன்னு கல்கியை நேரில் பார்த்தவங்க பேசிக்கிட்டாங்க. சிலையை கல்கி ஆபீஸில் கொண்டு போய் நிறுவப் போறாங்களாம்.

ராகவன் கல்கியோட எழுத்துக்களை அலசி ஆராய்ஞ்சு டீடெயில்டா பேசினார். ''வீரம், துன்பம், காதல், பாசம், நகைச்சுவைன்னு கல்கி ஹான்டில் பண்ணாத சப்ஜெக்டே இல்லை; அவரோட கதைகளில் வரும் கதாபாத்திரங்கள் இன்னும் நம்ம மத்தியில் உலவிகிட்டே இருக்கிற மாதிரி இருக்கு; குறிப்பா பொன்னியின் செல்வன் படிக்கிற ஒவ்வொருவருக்கும் ஒரு பிரமிப்பு உண்டாவது நிச்சயம். அதனோட முகவுரையில் ராஜாஜி, சூரிய ஒளிக்கு எப்படி முகவுரை தேவையில்லையோ அதே மாதிரி பொன்னியின் செல்வனுக்கு முகவுரை தேவையில்லைன்னு குறிப்பிட்டிருக்கார் - கல்கி இன்னும் கொஞ்சநாள் இருந்திருந்தா, சேர பாண்டிய நாடுகளைப் பத்தி அவர் கதைகள் மூலம் நம்ம நிறைய தெரிஞ்சுகிட்டு இருக்கலாம்; ஒரு நூல் இரண்டாவது தடவை வெளியாகும்போதே அது வெற்றி அடைஞ்சுட்டதாக அர்த்தம், அப்படிப் பார்க்கும்போது கல்கியோட நூல்கள் ஹிந்தி, மலையாளம், ரஷ்யன் என்று எத்தனை மொழிகளில் எத்தனை பதிப்புகள் வெளி வந்திருக்கு? ஒரு மொழியின் உண்மையான செல்வம் அந்த மொழியில் இயற்றப்படும் கவிதைப் படைப்புகள்தான். கல்கி அதிலும் குறை வைக்க

• கல்யாணபுரம் ஆராவமுதன்





அமரர் கல்கி நினைவு நாள்

• பார்வையாளர்கள்...



• சிலை

வில்லை, அவருடைய பாடல்களை டி.கே. பட்டம்மாள் பாடி எவ்வளவு கேட்டிருக்கோம்? எனக்கு இந்த விழாவில் தலைமை உரை ஆற்ற என்ன தகுதி இருக்கோ இல்லையோ நான் கல்கியோட வெறித்தனமான ரசிகன் அப்படீங்கற தகுதி நிச்சயமாக இருக்கு" - இப்படி அவர் சொல்லும்போது அவரோட பேச்சு அதை நிரூபிச்சுடுச்சுன்னு நினைச்சுக்கிட்டேன்.

புகார் சொன்ன சூர்ப்பனகை!

கடைசியா ஒரு யோசனை சொன்னார் - "திருமண வைபவத்திற்கோ, பிறந்த நாள் விழாவிற்கோ பரிசு கொடுக்க நினைக்கும்போது நீங்க எல்லோரும் கல்கியின் நூல்களைக் கொடுங்க, அவற்றைப் படிக்கும்போது நமக்கு ஏற்படற அலாதியான இன்பம் எல்லோருக்கும் ஏற்படட்டும்" அப்படீன்னார்.


கல்கி அறக்கட்டளை அறங்காவலரும் கல்கி ஆபீஸ் தலைமை நிர்வாகியுமான கோபாலன்தான் நன்றி உரை சொன்னார்.

"கல்கி ஒரு பெரிய மேதை சந்தேகமில்லை, அவர் ஒரு உயர்ந்த மனுஷரும்கூட; எந்தவித பப்ளிஸிடியும் இல்லாம அவர் செஞ்சிருக்கிற தான தர்மங்கள் எக்கச்சக்கம்; அதை விடாம செய்யணும்கிற நோக்கத்தோட தான் இந்த அறக்கட்டளை செயல்படுது; பத்தாயிரம் ரூபாயில் ஆரம்பிச்சு, இன்னைக்கு ஏழை மாணவர்களோட கல்விக்காக இந்த வருஷம் 1,65,000 ரூபாய் ஸ்காலர்ஷிப் கொடுத்திருக்கு'' அப்படீன்னு சொன்னார்.

ஒரு விஷயத்தைச் சொல்ல மறந்திட்டேனே - மதுமிதான்னு ஒரு குழந்தை, பட்டுப் பாவாடை சட்டை போட்டுகிட்டு ஒரு பத்து வயசு இருக்கும், இறை வணக்கத்தை என்னமா பாடிச்சு தெரியுமா? 'பூங்குயில் கூவும் பூஞ்சோலையில்' அப்படீங்கற கல்கியோட பாடலையும் பாடிச்சு - பூங்குயில் எல்லாம் தோத்தது போ, அவ்வளவு இனிமையாக இருந்தது. இந்தக் குழந்தை பிற்காலத்தில் ஒரு பெரிய கலைஞரா வர்றதுக்கு வாய்ப்பு



• மதுமிதா



''என்ன டாக்டர்... ஆபரேஷன்ல திடீர்னு ஆயிரம் ரூபா கூட்டிட்டீங்க?''
''எம்பிராய்டரி தையல் போட்டிருக்கேன்!''

— அம்பை தேவா

இருக்கு. அப்போ நான், 'இவங்க கல்கி விழாவில் பத்து வயதில் பாடும்போது கேட்டிருக்கேன்' அப்படீன்னு பெருமையா சொல்லிக்கப் போறேன், பாரு.

பாட்டுன்ன உடனே இன்னொரு விஷயம் உனக்குச் சொல்லணும். விழாவோட இரண்டாம் பாகத்தில் கல்யாணபுரம் ஆராவமுதனோட 'பக்தப் பிரஹலாதன் இசைப் பேருரை. 'ஸ்ரீராம பக்த ஹனுமான்'னு கல்கியில் இப்ப எழுதிண்டு சக்கைப் போடு போடுகிறாரே, அவர்தான். என்ன குரல் தெரியுமா? சாதாரணமாக காலக்ஷேபம் பண்றவங்களோட பாட்டு அத்தனை சுகப்படாதுன்னு நாம்பகூட பேசிப்போமே ஞாபகம் இருக்கா? ஆனால் இவர் கிருதிகளை எடுத்துப் பாடும்போது ஏதோ பெரிய வித்வானோட கச்சேரியைக் கேட்கிற மாதிரி இருந்தது.

எத்தனை அருமையான விஷயங்களைச் சொன்னார், ச்சே, நீ மிஸ் பண்ணிட்டியே!

அவர் சொல்றார் – கலிகாலத்தில் இறைவனுக்கு பக்தி செலுத்த பிரஹலாதன் ஒரு எளிமையான வழி சொல்லியிருக்கான். அதுதான் நாம சங்கீர்த்தனம். ஹரி, ஹரின்னுதான் சொன்னான் பிரஹலாதன். தபஸ் பண்ணலை, யாகம் வளர்க்கலை, பகவான் அவனுக்காக ஒரு அவதாரமே எடுக்கலையா? நாம்பளும் பகவானோட நாமத்தை ஜபித்தாலே போதும், மோக்ஷம் கிடைச்சுடும். (மோக்ஷம்னா உடனே பயந்துடாதீங்க, மோக்ஷம்னா விடுதலை; இந்த உலகத்திலே இருக்கிற கஷ்ட நஷ்டங்களிலிருந்து விடுதலை, பயங்களிலிருந்து விடுதலை, அவ்வளவுதான்!) பகவானைவிட பக்தர்கள் அவன் மீது கொண்ட பக்திதான் உசத்தி. அதனாலதான் பிரஹலாதனைப் பத்தி இவ்வளவு பேசறோம்.

விஷ்ணுவுக்கு எத்தனையோ பெயர்கள் இருக்க, பிரஹலாதன் ஹரின்னுதான் அழைச்சான். ஹரின்னா சிங்கம் – பின்னாடி சிங்க ரூபத்தில் விஷ்ணு அவதாரம் எடுத்து வரப் போறார்னு இது ஹிண்ட்.

இறைவன் நம்ம ஹிருதயத்திலேயே வாசம் பண்றார், நாம எதுக்கு அவரை வெளியே தேடணும்? அதே மாதிரிதானே அவர் எல்லார் ஹிருதயத்திலும் வாசம் பண்ணுவார், பின்ன ஏன் ஒருத்தரை எதிரியா நாம் நினைக்கணும்?'ன்னு கதைக்கு இடையே ஏராளமா விஷயங்கள்.

இன்னொரு சுவராஸ்யமான விஷயம் சொன்னார் – விஷ்ணுவோட டிரேட்மார்க் தாமரைக் கண்களாம். எல்லா அவதாரத்திலேயும் அதை மட்டும் தக்க வைச்சுப் பாராம். ஹிரண்யன் உத்தரவு போடும்போது கூட தாமரைக் கண்ணனை தேடிப் பிடிச்சு யமலோகத்திற்கு அனுப்புன்னுதான் சொன்னானாம்; சூர்ப்பனகை மூக்கும் காதும் அறுந்து தொங்குகிற நிலைமையில்கூட தாமரைக் கண்ணா நீ நாசமாய்ப் போகன்னுதான் திட்டுறாளாம். சூர்ப்பனகையின் புகாரை கல்யாணி ராகத்தில் பாடிக் காமிச்சார்!

கல்கி இந்த இசைப்பேருரைக்கு விமர்சனம் எழுதியிருந்தா 'கல்யாணியில் புகார் சொன்ன சூர்ப்பனகை!'ன்னு தலைப்பு வைச்சிருப்பார்!

விழாவிலேயே எனக்கு ரொம்ப பிடிச்ச விஷயம் – அதற்கு வந்திருந்த ஆடியன்ஸ். எவ்வளவு இன்வால்வ்மெண்ட்டோட எவ்வளவு அமைதியாக இருந்தாங்க தெரியுமா? இந்த ஆடியன்ஸ் ஈடுபாடு கல்கி விழாக்களோட டிரேட்மார்க்! கல்கிகிட்ட அவங்களுக்கு இருக்கிற ஈடுபாடு, மரியாதை... இல்லை இல்லை பக்திதான் இதுக்குக் காரணம்னு தோணுது. அவங்க அத்தனை பேரோட வைப்ரேஷனை உணர முடிஞ்சுது. இந்த ஸ்தாபனத்தைப் பத்தி எவ்வளவு 'குட்வில்'ஐ உண்டாக்கி வைச்சிட்டு போயிருக்கார் கல்கி, பாரேன்!

'கல்கி கடிதங்கள்' அப்படீங்கற புக்கை இதோட அனுப்பியிருக்கேன். படிச்சிட்டு எழுது.

அன்புடன்,
சுநிக்ஷா






யே ஹி ஹை
ரைட் சாய்ஸ் பேபி..
எல்லாம் டி.வி பாதிப்புதான்!
நடு நடுவிலே விளம்பரத்தையும்
பாடச் சொல்றாங்களாம்
ஸ்பான்ஸர்ஸ்...
என்னடீ
கச்சேரிக்கு வரலியா?
குளோஸப்ல
ஜிமிக்கி, நெக்லஸை
யெல்லாம் பார்க்க
றதை விட்டுட்டு
எதுக்கு
சபாவுக்குப்
போகணும்!
பிரஹ்லாத்



ஸீசன்ல இது மாதிரி பேக்கேஜ் டூர் சவுகரியமா இருக்கு! தினமும் டிபன், காபி, சாப்பாடு, கச்சேரின்னு அவங்களே எல்லா சபாக்களுக்கும் அழைச்சிண்டு போயிடறா. அங்கங்கே சபாவிலேயே நைட் ஸ்டே.. டூர் ஃபுல்லா புக் ஆயிடுத்தாம்!
ஆலபனா டூர்ஸ் & டிராவல்ஸ்
8 DAYS+9 NIGHTS
ராமகான சபா
வேணுகான சபா
S.S.சபா
etc.
ஸீஸீஸீ ஸீசன்!
என்ன சார், ஒரே கூட்டம்?
வித்வான்களுக்கு என்ன பட்டங்கள் கொடுக்கலாம்னு யாரோ பட்டியல் தயார் பண்ணி புத்தகம் போட்டிருக்காங்களாம்.. சபா செக்ரட்டரிகள் மொய்த்துண்டு இருக்கா-ங்க
BOOK SHOP
BESTSELLER
பட்டப் பெயர்கள் பத்தாயிரம்
ரூ. 88/-

அபூர்வ வர்ணனைகள்!



✉ டயானா பற்றி செய்தி வெளியிட்டால், வல்லிக்கண்ணன் திட்டுகிறார்! நீங்களோ வண்ணப்படத்துடன் டயானா பற்றி ஒரு பக்கத்துக்கும் மேலாக போடுகிறீர்கள். வல்லிக்கண்ணன் கல்கிக்கு கொடுத்த 'நற்சான்றிதழை' வாபஸ் வாங்கி விடப் போகிறார், ஜாக்கிரதை!
சென்னை - 29, **ஜி.ஜி. குமார்.**

✉ "ஸ்ரீ ராமபக்த ஹனுமான்" பக்தித் தொடரில் சீதாபிராட்டியை நினைத்து நினைத்து ஸ்ரீராமபிரான் நைந்துருகும் செய்தியை ஆஞ்சனேயர் எடுத்துரைப்பதும் அதைக் கேட்டு உணர்ச்சி அலைகளால் பிராட்டி தவிப்பதும் கண்ணீரை வரவழைத்த அபூர்வ வர்ணனைகள்.
திருவண்ணாமலை,
ஆர். ஆர். சாமி.

✉ வீரப்பன் விவகாரம் வெறும் சொல்லும் படலமாக இல்லாமல் நன்கு அலசப்பட்டுள்ளது. 'தோற்றால் தலைவலி, வென்றால் திருகுவலி' எல்லாப் பக்கமும் ஆராய்ந்து எழுதப்பட்ட ஒரு அற்புதமான தலையங்கம். உங்கள் சாணக்யம் வாழ்க!
விருதுநகர், **இரா. சந்திரசேகரன்.**

✉ பெண்ணுரிமை என்ற பெயரில் பெற்றவர்களைத் துச்சமாக மதிக்கும் நகரத்துப் பெண்கள் மத்தியில் குறி கேட்ட ஜக்கம்மா ('நல்லகுறி சொல்லுங்களேன்!') நல்ல கதாபாத்திரம்.
தூத்துக்குடி, **கே. சுதர்ஷன்.**

✉ பிரசார மேடை பகுதியில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் திமுகவின் நிரூபிக்கப்படாத ஊழல் பற்றிப் பேசுகிறாரே தவிர, அதிமுகவின் தலைவி, அமைச்சர்கள் செய்த நிரூபிக்கப்பட்ட ஊழல் பற்றி ஏன் வாயைத் திறக்கவில்லை? தேசிய அளவில் இன்று வடக்கே காஷ்மீர் - லடாக்கிலிருந்து தெற்கே குமரி வரை இருக்கும் ஒரே கட்சி காங்கிரஸ்தான் என்று பீற்றிக் கொள்கிறாரே, அக்கட்சியில் இருக்கும் எண்ணிலடங்கா கோஷ்டிகள் பற்றி எங்களுக்குத் தெரியாது என்று நினைத்துக் கொண்டிருக்கிறாரா? முதலில் கட்சியை வலுவாக்க முயற்சி செய்யுங்கள் இளங்கோவன் சார்.
மொரட்டுப்பாளையம்,
க.நா. இராஜேஸ்வரன்.

✉ முத்து விழாக் கண்ட முதுபெரும் படைப்பாளிகள் வல்லிக்கண்ணன் - சுரதா சந்திப்பு படித்தேன்; சந்திப்பின்போது, தெறித்து விழுந்த சிந்தனைச் சிதறல்கள், மிகவும் ஆழமானவை; அகலமானவை; தற்காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு மிக்க நலம் பயப்பவை.
நெல்லை - 6, **தி.க. சிவசங்கரன்.**

✉ கேபியின் நூறு நிமிட மேஜிக்' தலைப்பில் கே.பி சொல்லியுள்ளதைப் படித்தேன். மைக்ரோ தொடர் மொத்தமே நூறு நிமிடங்கள்தான் என்று நினைவூட்டிக் கொண்டு காட்சியை நறுக்கென்று அமைக்கும் பாணி சின்னத்திரைக்குப் புது வரவு!
சேலையூர், **கே.வி. ராமன்.**

✉ 'தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதல் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட முதல் நாளே குண்டு வெடிப்பை நிகழ்த்திய காஷ்மீர் தீவிரவாதிகள் தங்கள் நிலையை உணர்த்தி விட்டனர். கல்கியில் வெளியான கார்ட்டூன் தீர்க்க தரிசனமாய் இருந்தது!
பொன்மலை, **ஆர். பிரகாஷ்.**

✉ *(3.12.2000)* கல்கியில், 'தனுசு இராசிக்காரர்களுக்கு வருமானம் ஓஹோ என்று பெருகப் போகிறது என்று வெளியிட்டீர்கள். தனுசு இராசிக்காரனான எனக்கு சிறந்த கேள்விக்கான பரிசாக 50 ரூபாய் கிடைத்துள்ளது. இரட்டிப்பு மகிழ்ச்சி நன்றி.
வேலூர் - 6, **வி.என். குமாரவேல்.**

மறந்ததை மறக்க முடியுமா?

மறக்க முடியாத கச்சேரிகள் எந்த பிரயத்தனமுமின்றி ரசிகர்கள் மனத்தில் தங்கிவிடுகின்றன. மறப்பதே மேல் என்று நினைக்கக்கூடியவை பற்றி கவலைப்படத் தேவை இல்லை. ஆனால் வித்வான்கள் பாடு கஷ்டம்தான். முன்னூறு - நானூறு கீர்த்தனைகளாவது சதா ஞாபகத்தில் இருக்க வேண்டும். மறந்தால் சமாளிக்க வேண்டும். மறந்ததை மறக்காமல் இங்கே சில கலைஞர்கள் நினைவு கூர்கிறார்கள்.



• வீணை ஜெயந்தி



• சௌம்யா

வீணை ஜெயந்தி : கல்யாண கச்சேரியில் 'ஓ ரங்க சாயி' வாசித்துக் கொண்டிருந்தேன். அனுபல்லவியின் போது திடீரென்று சரணாகதி என்று சரணம் வந்து சேர்ந்து கொண்டுவிட்டது. என்ன வாசிக்கிறோம் என்பது எனக்கே புரியாமல் போய்த் திகைத்து, பிறகு சரணம் வாசித்தபோதுதான் செய்த தவறே விளங்கியது. வாத்தியம் என்பதால் ஒரு சௌகரியம். பல பேர் இந்தத் தவறை கவனிக்கவில்லை.

இதைவிட ஜோரான ஒரு சம்பவம் : அமெரிக்கா கச்சேரி ஒன்று. 'தீராத விளையாட்டுப் பிள்ளை'



• உன்னிகிருஷ்ணன்

'ரிக்வெஸ்ட்' கேட்டார்கள். 'தலை பின்னே திரும்பு முன்னே சென்று மறைவான்' என்று வாசித்து விட்டு அடுத்த அடியை மறந்தே போனேன். ஒரு சிறிய இடைவெளிக்குப் பிறகுதான் ஞாபகம் வந்தது. கச்சேரி முடிந்த பிறகு ஒரு ரசிகர் நேரே என்னிடம் வந்து சொன்னார். "திரும்பு முன்னே சென்று மறைவான்" இதற்குப் பிறகு ஒரு 'கேப்' கொடுத்தீங்களே! ரொம்ப பிரமாதம்! பொருத்தமா இருந்தது!"

சௌம்யா : அப்போது கேரளாவில் இருந்தோம். எனக்குப் பத்து வயது. ஒரு போட்டிக்காக சென்னை வந்தோம். பாபநாசம் சிவன், பெரியசாமி தூரன் பாடல்கள். நீதிபதியாக எஸ்.ராஜம். பைரவியில் 'பழம் நீ' பாடிய பிறகு, 'அருள வேண்டும் தாயே' பாடச் சொன்னார்கள். அநுபல்லவியையே மறந்து விட்டேன். பாடியது போதும் என்று அனுப்பிவிட்டார்கள். அப்பா திட்டித் தீர்த்தார். ஆனால் ஆச்சர்யம், முதல் பரிசு எனக்கு என்று அறிவித்துவிட்டார்கள். என் அப்பா நடுவர்களிடமே போய்க் கேட்டார். "மறந்து போனவளுக்குப் பரிசா?" என்று, 'பாடிய வரையில் சிறப்பாக இருந்தது. அதற்குத்தான் பரிசு' என்றார்கள்.

• ஸ்ரீராம்குமார்



உன்னிகிருஷ்ணன் : சமீபத்தில் பெங்களூரில் 'அபராதமுல' பாடியபோது சரணத்தில் வார்த்தை மறந்து விட்டது. பாடகி நீலா ராம்கோபால் கச்சேரிக்கு வந்திருந்தார். அவர் ஞாபகப்படுத்த தொடர்ந்து பாடி முடித்தேன். திட்டமிடாமல் போய் மேடையில் உட்கார்ந்து முகாரி பாடலாமா என்று யோசித்து, 'சஹானா' ஆலாபனை செய்து வயலின் ஆலாபனையின் போது கிருதியை முடிவு செய்தால் தட்டுக்கிட்டுப் போகும். அதனால் கூடியவரை திட்டமிட்டுக் கொண்டு போயே பாடுகிறேன்.

பாம்பே ஜெய்ஸ்ரீ : வார்த்தைகளை மாற்றிப் போட்டுப் பாடிவிடுவேன். அந்த மாதிரி சந்தர்ப்பங்களில் என் குரு (லால்குடி ஜெயராமன்) "உன் நாக்கில் சரஸ்வதி கடாக்ஷம் தாண்டவமாடுகிறது" என்பார். அமெரிக்காவில் ஒரு கச்சேரியில் 'ஞானமொஸகராதா' பாடியபோது 'பரமாத்முடு ஜீவாத்முடு'க்கப்புறம் வார்த்தையே வரவில்லை. சில நிமிடங்கள் வெறுமே மிருதங்கம் மட்டும் ஓடியது கச்சேரியில். அப்புறம் எப்படியோ ஞாபகம் வந்துவிட்டது. ஸ்ரீராம் குமார் போன்றவர்கள் வயலின் வாசித்தால் நாம் மறந்தாலும் சரியாக வார்த்தையை எடுத்துக் கொடுத்துவிடுவார்கள்.



• பாம்பே ஜெய்ஸ்ரீ

ஸ்ரீராம்குமார் அவர்களே! பாடகர்களே பாட்டை மறக்கும்போது நீங்கள் மட்டும் மறக்காமல் இருப்பதன் ரகசியம் என்னவோ?

- வாணி

நாற்காலி

பள்ளிக்கூடம் என்னவோ நன்றாகத்தான் இருந்தது - பதினைந்து நாற்காலிகள் வரும் வரை.

பள்ளிக்கூடத்திற்கெனப் பதினைந்து நாற்காலிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதை முதலில் செய்தியாகக் கொண்டு வந்தவர், ஜே.கே. என்ற ஜே. கோதண்டம் மாஸ்டர்தாம்.

"பதினஞ்சு வரப் போவுது... என்ன செய்யப் போறீங்க?" – ஆசிரியர் அறைக்குள் பற்ற வைத்தார்.

"பதினெட்டு கிளாஸ் இருக்கில்லியா... அதென்ன பதினஞ்சு கணக்கு?"

"அதானே, பதினெட்டு போட வேண்டியதுதானே?"

"அதுக்கென்னய்யா பண்றது... பதினஞ்சு வருதுன்னா நாம நமக்குள்ளாற அட்ஜஸ்ட் பண்ணிக்க வேண்டியதுதானே?"

"இதோ பாருங்க... பத்தாவதிலிருந்து ஏழாவது வரை பதினஞ்சு கிளாஸ் இருக்கு... வகுப்புக்கு ஒண்ணா போட்டுட்டு, கடைசி வகுப்பான ஆறாவது மூணு செக்ஷனுக்கும் பழைய நாற்காலியே போட்டுட்டாப் போவுது..."

"ஏன் சார், இந்த ஸ்கூல்லியே இளிச்ச வாயங்க நாங்க மூணு பேர்தானா? ஏன் மேல் கிளாஸ் மூணுக்கும் போடாம விட்டுட்டா என்னவாம்?"

"நமக்குள்ளாற ஏன் இத்தனை விவாதம்? நம்ம தலை என்ன பண்ணுதோ, பாக்கலாமே!"

"ஆமா, நாற்காலிக எப்படியிருக்காம்? இப்போ இருக்கிற எலும்பு நாற்காலிங்க தானா?"

"நோ... நோ... பிரமாதமா இருக்காம்... மொதல்லே, அதுக நமக்காகவே செஞ்சதில்லே. வேற ஆபீசுங்களுக்காகச் செஞ்சதாம். நல்ல தேக்கு மரத்தாலே எழச்சு, வார்னிஷ் அடிச்சிருக்காங்களாம்..."

"ஏன்யா ஜேகே... நீரு பாத்திரா, அந்த நாற்காலிங்களை...?

"பாக்காமயா சொல்றேன்... மொதல்ல அதுக நமக்காக செஞ்சதில்லே. அதைத் தெரிஞ்சுக்குங்க... மரத்தாலே செஞ்ச தளவாடங்க எதுவும் பயன்படுத்தக் கூடாதுன்னு சுற்றுச் சூழல் பாதுகாப்புக்காக முடிவெடுத்திட்டதாலே, அதுக்கும் முன்னதாகவே ஆர்டர் பண்ணின இதுகளை, ஓசை படாம நமக்கு அனுப்பிடறாங்களாம்..."

"புறக்கணிப்பாலே வந்த அதிர்ஷ்டம்னு சொல்லுங்க..."

"மொத்தம் எத்தனை செஞ்சாங்க?"

"மொத்தம் அம்பது... அதிலே நமக்கு அடிச்சது யோகம், பதினைஞ்சு..."

"மீதி?"

"ஏதேதோ ஆபீசுங்களுக்குப் போவுது... தலைமறைவான ஆபீசுங்களுக்கு..."

தலைமையாசிரியரை, ஆசிரியர் சங்கச் செயலாளர் போய்ச் சந்தித்தார்.

"சார், ஏதோ நாற்காலி வர்றதா கேள்விப்பட்டேன்..."

"ஆமாமா, பதினஞ்சு சாங்ஷன் ஆயிருக்கு. இந்த வருஷம் நாம எஸ்.எஸ்.எல்.சி.லே 'சென்ட்டம்' ரிசல்ட் காட்னோமில்லே... அதுக்குப் பரிசு..."

"அதென்ன சார், பதினஞ்சு... பதினெட்டா வாங்க வேண்டியதுதானே...?"

"முன்னாடி நமக்கு அஞ்சுதான் சேங்ஷன் ஆச்சு. நான்தான் பிடிக்க வேண்டியவங்களைப் பிடிச்சு, பதினைஞ்சு ஆக்கினேன்... அதுக்கு எவ்வளவு பாடுபட வேண்டியிருந்தது தெரியுமா...? சும்மாயில்லே..."

"பதினெட்டு வகுப்பறைகள்ல பதினெட்டு போட வேண்டியதுதானே நியாயம்? அதென்ன பதினஞ்சு...?"

"கிளாஸ் ரூமுக்கா அது...?" ஏளனமான ஒரு சிரிப்பு! "நல்லா சொன்னீங்க... மொதல்லே கிளாஸ்லே உக்காந்து பாடம் நடத்தறதே தப்பாச்சே... சட்டப்படி நின்னுகிட்டுதானே பாடம் நடத்தணும்! அங்கே எதுக்கு



நாற்காலி?''

''அப்போ, இப்போ போட்டிருக்கே ஓட்டை உடைசல் நாற்காலிங்க... அதுகளை எடுத்திடலாமா?''

''தாராளமா எடுத்திடலாம்... ஏதோ, போனா போவுதுன்னு...''

''ஏன் சார், நீங்க மட்டும் உக்காந்துகிட்டு வேலை பாக்கணும்... நாங்க மட்டும் நின்னு கிட்டு பாடம் நடத்தணுமா?''

''என்ன பேசறீங்க... நீங்களும் நானும் ஒண்ணா? நான் ஹெட்மாஸ்டர் தெரிஞ்சுக்குங்க...''

''நாங்க இல்லாட்டி நீங்க இல்லே... மொதல்லே அதை நீங்க தெரிஞ்சுக்குங்க...''

கடைசியாக, பள்ளி வேலை நேரம் எல்லாம் முடிந்து, தலைமையாசிரியர், ஏவலர், காவலர் ஆகிய மூவர் மட்டுமே புழங்கிக் கொண்டிருந்த ஒரு நாளைய மாலைப் பொழுதில், வேனில் வந்து இறங்கின வருவதற்கு முன்பாகவே புயலைக் கிளப்பியிருந்த நாற்காலிகள், பதினைந்தும்.

தா.பி. வரதராசன்

மற்ற இருவரின் துணையுடன் அவற்றை இறக்கி, அவற்றுக்கான அனுமதி ஆணையில் கையொப்பமிட்டு, வேன் ஓட்டுனருக்கு உண்டான மாமூல் 'டீ'க்காசைக் கொடுத்து விட்டு, அதன் ஒரு நகலில், நல்ல முறையில் பதினைந்து நாற்காலிகளை ஏற்பதாகக் கையொப்பமிட்டு, பொருள் இருப்புப் பதிவேட்டில் ஒட்டி வைத்தார்.

இருவரின் உதவியோடு, வந்த நாற்காலிகளை ஓட்டை உடைசல் மரத்தளவாடங்கள் அறைக்குள் ஒரு பக்கமாகஅடுக்கி வைத்து விட்டு அறையைப் பூட்டப் போகும் நேரத்தில், ஏவலர் சுந்தரம்தான் வாயைத் திறந்தான்.

''சார், ஒரு நாற்காலியை உங்களுக்குப் போட்டுக்கலாம் சார்...''

''வேண்டாம்பா... 'தலை மட்டும் போட்டுக்கிச்சு, வாலுங்களுக்கு ஒண்ணுமில்லே'ன்னு பேச்சு வரும்...''

''சார்... அதுக்காக ஹெட்மாஸ்டரும் மத்தவங்களும் ஒண்ணாக முடியுமா சார்... சும்மா இருங்க சார்... நான் போடறேன் சார்'' என்று

சொன்ன காவலர், அவற்றில் ஒரு நாற்காலியைக் கொண்டு வந்து தானாக அவர் இருக்கையில் போட்ட கையோடு, பழைய நாற்காலியை அவருக்கு எதிர்ப்புறத்தில் உதவி தலைமையாசிரியர் உட்காரும் இடத்தில் போட்டான். அங்கே இதுவரை அடுத்த அந்தஸ்தில் இருந்த உ.தலைமையாசிரியரின் நாற்காலி, ஆசிரியர்களின் ஓய்வறைக்கு இடம் பெயர்ந்தது.

அடுத்தநாள் காலை, கடவுள் வழிபாட்டின்போது தன்னுடைய முறைக்கு, பள்ளி மாணவர்கள் எப்படி ஒழுக வேண்டும் என்று பத்து நிமிடத்திற்கு மேல் அறிவுரைப்புகன்ற கணக்கு மாஸ்டர் சேகி. என்ற சே. கிருபாகரன் எம்.எஸ்.சி, எம்.எட்., வழிபாடு முடிந்த கையோடு, தலைமையாசிரியர் அறைக்குள் நுழைந்தார்.

"சார், நாற்காலி 'புத்க' போலிருக்கு.

அவருடைய 'புத்க' என்ற வார்த்தையிலிருந்த இடர்க்கர்ப் பொருள் தலைமையாசிரியருக்குப் புரியவே செய்தது.

"ஆமா, சார்..."

"ஒண்ணுதான் வந்துதா சார்...?"

"அதான் சொன்னேனே பதினைஞ்சு வந்திருக்குன்னு."

"அப்போ, உங்களுக்கு எதிர்த்தாற்போலவும் ஒண்ணு போடறதுதானே! அசிஸ்டெண்ட் ஹெட்மாஸ்டருக்குன்னு...? அவரும் உங்க மாதிரியே கிளாசுக்குப் பாடம் நடத்தப் போகாமே, இங்கே உக்காந்து வேலை பாத்துகிட்டுதானே இருக்காரு...!"

ஆசிரியர் வருகைப் பதிவேட்டைப் பரிசோதித்துக் கையொப்பம் இட்டுக் கொண்டிருந்த த.ஆசிரியர் தலை நிமிர்ந்து அவரைப் பார்த்தார். வார்த்தையை விட்டால் இன்னும் அதிகமாக வளரும் என்பது அவருக்குத் தெரியும். 'போய் உம்ம வேலையைப் பாரும்' என்று

"அவருக்குப் பயங்கர கவலை போல் இருக்கு..."

"எப்படி சொல்ற?"

"அவர் விக்கில் இருந்தும் முடி கொட்டுறதே!"

— எஸ். மோகன்



சொல்ல நினைத்தார். அதையும் சொல்லவில்லை. மறுபடி தலை குனிந்து வராத ஆசிரியர்களுக்கு விடுப்பு எழுதத் தொடங்கி விட்டார்..

சே.கி அறையை விட்டு வெளியேறவும், இரண்டாவது நிமிடம் ஆசிரியர்களின் ஓய்வறையிலிருந்து பலத்த சிரிப்பொலி பொங்கிப் பிரவாகித்தது.

தலைமையாசிரியர், பள்ளி வகுப்பறைகளைப் பார்வையிடுவதற்காகத் தயாரானார். அப்போது பார்த்து உள்ளே நுழைந்தார் சமூக அறிவு போதிக்கும் ஆசிரியர் சா.பூ' என்று குறிக்கப்படும் சா. பூமிநாதன்.

"சார், மன்னிக்கணும்... ஸ்டூடண்ட்ஸ் புறப்பட்டுட்டாங்களா?"

தலைமையாசிரியர் தலை நிமிர்ந்தார்.

"ஒரு நிமிஷம்... உங்களுக்கு எத்தனை வருஷம் சர்வீஸ் சார்?"

த.ஆசிரியர் இன்னும் கொஞ்சம் நிமிர்ந்து பார்த்தார். "இருபத்தெட்டு வருஷம்..."

"எனக்கு எத்தனை வருஷம் தெரியுமா? முப்பத்தோரு வருஷம். ஆனா, நீங்க ஹெட்மாஸ்டர், நான் அசிஸ்டெண்ட்... நான் அங்கீகாரம் பெறாத பள்ளியிலே அஞ்சு வருஷம் வேலை பார்த்ததாலே என் சர்வீஸ் கொறஞ்சு போச்சு."

"உம்... அதுக்கென்ன இப்போ?"

"அட, அரசாங்கம்தான் என் சர்வீஸை மதிக்கலே... அட்லீஸ்ட் நீங்களாவது மதிச்சு, நீங்க போட்டுகிட்டிருக்கிற நாற்காலியை – அது போல ஒண்ணை எனக்குத் தரலாமில்லியா?"

"இது சர்வீசுக்காகத் தர்றதில்லை. பதவிக்காகத் தர்றது..."

"பதவி சர்வீசுக்காகத் தர்றதுதானே?"

இதே நேரத்தில், ஆசிரியர்கள் ஓய்வறையில், பலருக்கும் இடையில், காலை நீட்டி உட்கார்ந்திருந்த உடற்கல்வி ஆசிரியர் கர்ஜித்துக் கொண்டிருந்தார்.

"உண்மையா சொல்றேன். எனக்கும் ஒரு நாற்காலி குடுத்தாகணும். அதிலே என் பேரைப் போட்டு வெச்சுக்குவேன்... அதிலே என்னைத் தவிர, வேற யாரும் உக்காரக் கூடாது. பள்ளிக்கூடத்திலே, இந்த வருஷம் 'சென்ட்டம் ரிஸல்ட்' வருதுன்னா, அதுக்கு நானும் ஒரு முக்கியமான பொறுப்பாளிதான். நான் மட்டும் நாள் தவறாம கிளாஸ் எடுத்தேன்னா 'கிரவுண்ட்'லே அவங்க போடற கோஷத்திலே, நீங்க பாடமே நடத்த முடியாது. அதுக்காகவே நான் என் பாடவேளைகளையெல்லாம் தியாகம் பண்ணி உங்களுக்கு விட்டுக் கொடுக்கவேதான் இந்த ரிசல்ட் வந்தது. அதுக்காக எனக்கும் ஒரு சேர் குடுத்தாகணும்."

இதை அவர் உண்மையாகத்தான் சொல்

கிறாரா, வேடிக்கையாகச் சொல்கிறாரா என்று தெரியாமல் சிலர் மயங்கியிருக்க, சிலர் சிரிக்க, சிலர் வெறுப்புடன் பார்த்தனர்.

விளையாட்டாகவும், கிண்டலாகவும் முளைவிட்ட இந்த விவாதம் கொஞ்சம் கொஞ்சமாகப் பலம் கொண்டு, இரண்டொரு நாட்களுக்குள்ளாகவே கட்சி கட்சியாகப் பிரித்துவிட்டது அவர்களை. 'மாற்றி மாற்றி வாதம் செய்து தத்தம் பக்க நியாயத்தைப் பலப் படுத்த பலமாகக் கத்திக் கத்தி ஆசிரியர் சங்கக் கூடமே ரணகளமாகியது. சுமுகமாகப் பேசு வதும், இடைவேளை உணவின்போது கறி வகைகளைப் பகிர்ந்துகொண்டு உற்சாகமாக இருப்பதும் போய், குழுக் குழுவாகப் பிரிந்து விட்டனர்.

ஆனால், முடக்கப்பட்ட பதினொன்று நாற் காலிகளில் ஒன்றுகூட வெளியில் வரவில்லை. த.ஆசிரியை தவிர, உதவி ஆசிரியர்க்கு ஒன்று போடப்பட்டு, நாளடைவில் அந்த ஒன்றும் பழைய யதாஸ்தானத்தை அடைந்துவிட்டது.

வேறுபாடற்ற முறையில் யாருக்கும் (த.ஆசிரியர் தவிர) புது நாற்காலி இல்லை என்ற ஹோதாவில் இது எல்லாருக்கும் ஒரு விதத்தில் சம்மதம்தான் என்றாலும், ஒவ்வொருவரும் தனக்கு வர வேண்டியதைத் தடுத்துவிட்டார்களே என்று தன்னுடன் போட்டிக்கு நின்ற அத்தனை பேர் மீதும் கோபம் கொண்டனர்.

கவுன்சிலரைச் சென்று பார்க்கப் போனார் த.ஆசிரியர். ஏனென்றால், அவரால்தான் பலான பள்ளிக்கு அந்த நாற்காலிகள் கிடைத் ததல்லவா?

முதல்முறை பார்க்க முடியவில்லை; இரண்டாவது முறை தரிசனம் கிடைத்தது.

நாற்காலிகள் பற்றிய மகாத்மியத்தை, சாங் கோபாங்கமாக அவரிடம் விவரித்தார் ஆசிரியர்.

கையில் செல்போனுடன், புகை மண் டலத்தின் கீழே அமர்ந்திருந்த அவர், முழுக் கதையையும் கேட்டுவிட்டு "நீங்க ஒண்ணுக்கும் அசைய வேண்டாம்; நாற்காலிங்க அங்கேயே இருக்கட்டும்'' என்று அபயமளித்தார்.

இதற்குப் பிறகுதான் த.ஆசிரியரின் நுண்ணுணர்வு ஓரக்கண்ணைச் சிறிதாகத் திறந்து தவற விட்ட வெளிச்சத்தைப் பார்த்தது.

அந்த நாற்காலிகளை ஆசிரியர்களின் அறையில் போட்டுவிட்டு, பள்ளி வசதிக் கட் டணத்திலிருந்து தமக்கு ஒரு ரோலிங் நாற் காலியை வாங்கிக் கொள்ளலாம் என்றுதான் முதலில் அவர் நினைத்திருந்தார்.

இதை ஆசிரியர் சங்கத்தின் மாதாந்திரக் கூட்டத்திலேயே பேசி முடிவெடுத்திருக்கலாம். மற்றபடி வகுப்பறையில் போட்டால், இரண்டே மாதங்களில் அக்குவேறு, ஆணி வேறாகப் பாழாகிவிடும் என்பது அவர் முடிவு.

இப்படி வியூகம் வகுக்காமல் ஏன் உணர்ச்சி வசப்பட்டு விட்டோம் என்று தம்மையே நொந்துகொண்டார் அவர்.

இதே நிலைமையுடன் மூன்று மாதங் களைக் கடந்தது, பள்ளிக்கூடம்.

கவுன்சிலரின் டாடா சுமோ பள்ளிக்கு வந் தது. ஆனால் அவர் வரவில்லை. அவருடைய பிரதிநிதி வந்திருந்தார்.

''அண்ணன் அனுப்பினாரு'' - வந்தவர்.

''அப்படியா... என்ன விஷயம்? ஏதாவது சொன்னாரா? - த.ஆசிரியர்.

''ஆமா... வீட்லே சின்ன பாப்பா வயசுக்கு வந்திடிச்சு... அதுக்காக ஸ்கூல்லே வந்துகிற புது நாற்காலிங்களைக் கொண்டாறச் சொன் னாரு...''

''அப்படியா?'' - த.ஆ.யோசித்தார். "எத் தனை நாக்காலி வேணும்? பாப்பாவுக்கு மாத் திரம் ஒண்ணு 'போதுமா?''

"இல்லே... பதினஞ்சு வேணும்...''

த.ஆ. யோசித்தார்.

"முடியாதுன்னு சொல்லிடவா?''

"இல்லே, இல்லே... எடுத்துட்டுப் போங்க.''

அவருடையதும் சேர்த்து, புது நாற்காலிகள் பதினைந்தும் சுமோவைப் பின் தொடர்ந்து வந்த 'டெம்போ'வில் ஏறின.

அன்று போனவை ஆறு மாதம் கழித்து ஓட்டையும், உடைசலுமாகத் திரும்பி வந்தன - அது கூட, அரசிடமிருந்து தணிக்கை வரப் போவதை மூன்று நான்கு முறை நேரில் போய் அவரிடம் தெரிவித்த பிறகுதான்.

வரும்போது, வெறுமனே வரவில்லை: "என்ன நாற்காலிங்கய்யா... எவன் செஞ்சான் தெரியலே... ஒரு மாசங்கூட ஒழைக்கலே" என்ற கவுன்சிலரின் வசவுடன்தான் வந்தன.

தணிக்கை வரும் முன்பாக, இருக்கை பதி வேட்டில் 'நாற்காலி'கள் உபயோகிக்கப் பட்டு, பழுதடைந்து விட்டன என்று வேண்டிய குறிப்புகளை முன்னெச்சரிக்கையாய்ப் பதிவு செய்தார் த.ஆசிரியர். ○



''இரண்டு டீ.வி சீரியல்களுக்கு இடையே போதிய இடைவெளி வேணும்னு அகில இந்திய கணவர்கள் சங்கம் போராட் டம் நடத்தறாங்களே! எதுக்காக?''

''அந்த இடைவெளில தங்களுக்கு உணவு பரிமாற மனைவிகளுக்கு நேரம் கிடைக்குமாம்.''

— ப்ரியதர்சினி



நாற்பத்து ஐந்தாம் அத்தியாயம்

"விடை கொடுங்கள்!"

பெரிய பழுவேட்டரையரின் கோப வெறி நந்தினிக்கு எந்தவித மான வியப்பையும் உண்டாக்கியதாகத் தெரியவில்லை. மூன்று ஆண்டு காலமாக அந்த மகா வீரரான முது கிழவரை அவன் கையில் பிடித்த கயிற்றின் நுனியில் ஆடும் பாவையைப் போல் ஆட்டி வைத்துக்கொண்டிருந்தாள். முதன்முதலாக, இன்றைக்கு அந்தக் கயிறு அறுந்துவிட்டது. ஆட்டி வைத்த படி ஆடிக்கொண்டிருந்த பாவை உயிரும் சுய அறிவும் பெற்று விட்டது. இதை நந்தினி எதிர்பார்த்தவளாகவே தோன்றியது. இனி அந்தப் பாவையினால் அவளுக்கு ஆக வேண்டிய காரியமும் ஒன்று மில்லை.

சிறிதும் பதற்றம் காட்டாமல் நந்தினி எழுந்து பெரிய பழுவேட்டரையரின் முன்னால் நமஸ்கரித்தாள். உணர்ச்சி மிகுதியினால் தழுதழுத்திருந்த குரலில் அவள் கூறினாள்:-

"சுவாமி! என்னுடைய வார்த்தைகள் தங்களுக்குத் தேனையும் தேவாமிருதத்தையும் விட இனிப்பதாகப் பல முறை சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இன்றைக்கு நான் கொடுத்த கஞ்சியைப் போலவே என் வார்த்தைகளும் தங்களுக்கு நஞ்சினும் கசப்பாயிருக்கும். ஆயினும், கருணை கூர்ந்து தங்களிடம்

அமரர் கல்கி

நான் இறுதி விடை பெறுவதற்கு முன்னால் சில வார்த்தைகள் சொல்ல அனுமதி கொடுங்கள். அருமைக் கண்மணி என்றும், ஆசைக் காதலி என்றும் என்னை அழைத்த வாயினால் இன்று பாதகி என்றும், ராட்சஸி என்றும் அழைத்தீர்கள். நான் பாதகிதான்; ராட்சஸிதான்! மூன்று வருஷமாகத் தங்களை வஞ்சித்து ஏமாற்றி வந்தேன். வனாந்தரத்தில் அநாதையாக நின்ற என்னை அழைத்து வந்து அரண்மனையில் வைத்தீர்கள். பேரரசிகளும் இளவரசிகளும் எனக்கு மரியாதை செய்யப் பண்ணினீர்கள். தங்கள் உயிருக்குயிரான சின்னப் பழுவேட்டரையரிடம் விரோதித்துக் கொள்ளவும் துணிந்தீர்கள். நாட்டு மக்களும் நகர மக்களும் கூறிய பழிச் சொற்களும், பரிகாஸப் பேச்சுக்களும் தாங்கள் என்னிடம் கொண்டிருந்த அபிமானத்தைப் பாதிக்க முடியவில்லை. இப்படியெல்லாம் என்னிடம் நம்பிக்கை வைத்து இணையில்லாச் சிறப்புக்கள் அளித்த தங்களை நான் வஞ்சித்து வந்தேன்; அது உண்மைதான். என்னுடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே தங்கள் அரண்மனையில் வசித்து வந்தேன். தங்களுக்குத் தெரியாமல் பல காரியங்களைச் செய்து வந்தேன். சதிகாரர்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தேன். கந்தமாறன் – பார்த்திபேந்திரன் போன்ற வாலிபர்களின் மதியை மயக்கி அவர்களை என் காரியத்துக்கு உபயோகப்படுத்திக்கொண்டேன். ஆனால், ஐயா, ஒரே ஒரு காரியத்தில் மட்டும் தங்களை நான் வஞ்சிக்கவில்லை. தங்களை உலகமறிய மணந்த நாளிலிருந்து தங்களையே என் பதியாகக் கொண்டிருந்தேன். தலைமுறை தலைமுறையாக மகா வீரர்களை அளித்து வந்த தங்கள் பழம் பெரும் குலத்துக்கு என்னுடைய ஒழுக்கத் தவறினால் சிறிதும் களங்கம் ஏற்படவில்லை. இனியும் நான் உயிரோடிருந்தால் அத்தகைய களங்கம் தங்களுக்கு ஒரு நாளும் ஏற்படாது...''

''நந்தினி! இது என்ன வார்த்தை சொல்லுகிறாய்? என் குலத்துக்கு இனி ஏற்படக் கூடிய களங்கள் வேறு என்ன இருக்கிறது? ஐயோ! என் கையினால்... இந்த என் கையினால்... அடிபாவி! வாள் ஒன்று வைத்திருந்தாயே? அது எங்கே? அதனால் என் கையை நீயே வெட்டி விடு! எனக்கு நீ செய்யக் கூடிய உதவி அது ஒன்றுதான்...! இல்லை, இல்லை! வேண்டாம்! இந்தக் கைக்கு இன்னும் ஒரு வேலை இருக்கிறது; மிக முக்கியமான வேலை இருக்கிறது. நான் கூறியதை உண்மை என்று நினைத்து அப்படி ஏதாவது செய்து விடாதே...!''

''சுவாமி! அப்படியொன்றும் நான் செய்யமாட்டேன். எத்தனையோ காலமாக நான் பழி முடிக்க எண்ணி இருந்தவரின் பேரிலேயே அந்த வாளை என்னால் உபயோகிக்க முடியவில்லை. சமயம் நழுவிப் போய் விடுமோ என்று நான் பயந்து மதி மருண்டிருந்த நேரத்தில் தாங்கள் என் உதவிக்கு வந்தீர்கள்...''

''அடி பாதகி! உன் உதவிக்கா நான் வந்தேன்? என்ன வார்த்தை சொல்லுகிறாய்? சண்டாளி! பெண் உருக் கொண்ட பேயே! இம்மாதிரி நேரும் என்று தெரிந்திருந்தால் நான் அங்கு வந்திருக்கவே மாட்டேன்! தெய்வமே! கொள்ளிடத்து வெள்ளத்திலே நான் முழுகித் தத்தளித்தபோதே அந்தப் பாவி யமன் என்னைக் கொண்டு போயிருக்கக்கூடாதா?''

''சுவாமி! தாங்கள் என் உதவிக்கு வரவில்லை. என் காரியத்தில் தங்களை உதவி செய்யும்படி நான் கோரவும் இல்லை. தாங்கள் சோழ மன்னர் குலத்துக்கு உண்மையாக நடக்கவும், சோழ குலத்தின் சேவையில் உயிரைக் கொடுக்கவும், பரம்பரையாக உறுதி பூண்ட குலத்தில் வந்தவர். நானோ சோழ குலத்தின் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்வதற்காக வந்தவள். ஆகையாலேயே தங்களிடம் என் உண்மை நோக்கத்தை நான் தெரிவிக்கவில்லை. சில சமயம் நான் அவ்விதம் தங்கள் மூலம் என்

காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளலாமா என்று எண்ணியதுண்டு. யோசித்துப் பாருங்கள்! தாங்கள் இன்று 'ராட்சஸி' என்றும், 'பெண் உருக் கொண்ட பேய்' என்றும் அழைக்கும் இந்தப் பேதையின் முக சௌந்தரியத்தில் கண்ணையும் கருத்தையும் கொடுத்து அபரிமிதமாக மதுபானம் செய்தவரைப் போல் மதியிழந்து பல தடவை தாங்கள் நின்றதில்லையா? அப்போதெல்லாம் தங்களைக் கொண்டே என் வஞ்சகத்தைத் தீர்த்துக்கொண்டால் என்ன என்று நான் நினைத்ததுண்டு. ஆனால் தங்களை அப்படிப்பட்ட துரோகச் செயல் புரியும்படி செய்து தங்கள் குலத்துக்குக் களங்கம் உண்டாக்க நான் விரும்பவில்லை. இதனாலேயே/ தங்களைக் கடம்பூரிலிருந்து தஞ்சைக்குப் போகச் செய்வதற்கு நான் அவ்வளவு பாடுபட்டேன். தாங்களும் போனீர்கள். ஆனால் விதியானது தங்களைச் சமயம் பார்த்து திரும்பிக் கொண்டு வந்துவிட்டது! தாங்களாக எனக்கு உதவி செய்ய முன்வரவில்லை. ஆனால் விதியானது தங்களை என் உதவிக்கு நல்ல சமயத்தில் கொண்டு வந்து சேர்த்தது! ஆம், ஐயா! விதிதான் தங்கள் மனத்தில் என் ஒழுக்கத்தைப் பற்றிச் சந்தேகத்தை மூட்டியது. நான் பழி முடிப்பதைத் தடுப்பது மட்டும் தங்கள் நோக்கமாயிருந்தால், பகிரங்கமாகவே வந்திருப்பீர்கள். நான் ஒழுக்கத் தவறு செய்து தங்களுக்குத் துரோகம் செய்கிறேனா என்று சந்தேகப்பட்டுத்தான் வேஷம் தரித்து இரகசிய வழியில் வந்தீர்கள்... அந்த விஷயத்திலாவது தங்கள் சந்தேகம் தீர்ந்து போயிருக்க வேண்டும்! இல்லாவிடில், இப்போதாவது தீர்த்துக்கொள்ளுங்கள். மனைவியும், கணவனும் வாழ்க்கைத் துணைவர்கள் என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் தங்களுக்கு உண்மையான பத்தினியாக இருந்தபடியால்தான் எனக்குத் துணை செய்வதற்குத் தக்க சமயத்தில் தங்களை விதி கொண்டு வந்து என்னிடம் சேர்த்தது..."

"நந்தினி! போதும்! நிறுத்து! உன் வார்த்தைகள் என்னைச் சித்திரவதை செய்கின்றன. அதைக் காட்டிலும், என்னை ஒரேயடியாகக் கொன்று போட்டு விடு! தடுப்பதற்குக்கூட என் கையில் சக்தி இல்லை; உடம்பிலும் வலிவு இல்லை. வாளினால் கொல்ல உனக்குத் தைரியம் இல்லையென்றால், உண்மையாகவே கஞ்சியில் விஷத்தைக் கலந்து எனக்குக் கொடுத்து விடு!"

"அரசே! என்னை மன்னியுங்கள்! இல்லை... என்னை உங்களால் மன்னிக்க முடியாது. இந்த ஜன்மத்தில் மன்னிக்க இயலாதுதான்! ஒன்று சொல்கிறேன். கேளுங்கள்! நாம் இருவரும் மறு ஜன்மம் எடுத்து இந்தப் பூமியிலே பிறந்தால், அப்போது இந்தப் பிறவியின் நினைவு ஒன்றும் நமக்கு இராது. நான் தங்களை வஞ்சித்துத் தங்கள் அரண்மனையில் வாழ்ந்ததும், தங்களுடைய பொக்கிஷத்தின் பொருளை என்னுடைய பழி முடிக்கும் காரியத்துக்கு உபயோகப்படுத்தியதும், கடைசியாகக் கடம்பூர் அரண்மனையில் விதி வசத்தினால் நேர்ந்த விளைவும், இவையொன்றும் தங்களுக்கும் நினைவு இராது; எனக்கும் நினைவு இராது. இந்த ஜன்மத்தில் தங்களுக்கு நான் செய்த துரோகத்துக்கு அடுத்த ஜன்மத்தில் பரிகாரம் செய்ய விரும்புகிறேன். மறு பிறப்பில் நான் தங்களையே மணப்பேன்; தங்களுக்கு உண்மையான வாழ்க்கைத் துணைவியாக இருப்பேன். இந்த வரத்தைத்தான் இனி இந்த உடம்பில் உயிர் இருக்கும்வரையில் எல்லாத் தெய்வங்களிடமும் நான் வேண்டிக் கொள்ளப் போகிறேன்."


பெரிய பழுவேட்டரையர் இந்த வார்த்தைகளைக் கேட்டு உடலும் உள்ளமும் நெகிழ்ந்து, "நந்தினி! நீ போய் விடு! உடனே இவ்விடம் விட்டுப் போய் விடு! இன்னும் சிறிது நேரம் இப்படியே நீ பேசிக் கொண்டிருந்தால் என் புத்தியே பேதலித்து விடும்! என் கடமையைக்

கைவிடும்படி நேரிடும்! இவ்வளவு காலமும் உன்னால் நேர்ந்த அனர்த்தங் கள் போதும்! இன்னமும் என் புத்தி யைச் சிதற அடித்துப் பித்துப் பிடிக்கச் செய்யாதே! போய் விடு. இப்போதே போய் விடு!'' என்றார்.

''சுவாமி! மன்னியுங்கள்! என்னுடன் வந்தவர்களின் யோசனையை நான் கேட்டிருந்தால், இதற்குள்ளே இந்தப் பச்சை மலையையும் கொல்லி மலை யையும் கடந்து கொங்கு நாட்டுக்குள் சென்றிருப்போம். ஆனால் தங்களிடம் பேசி விடை பெற்றுக் கொள்ளாமல் போக எனக்கு மனம் வரவில்லை.



கடம்பூர் கோட்டைக்கு வெளியிலே வந்ததும் தாங்கள் மூர்ச்சையடைந்தீர்கள். தங்களை அங்கேயே போட்டு விட்டு வந்து விடும்படி அவர்கள் சொன்னார்கள். அதற்கும் நான் சம்மதிக்கவில்லை. அவர்களையே தங்களைத் தூக்கிச் சுமந்து கொண்டு வரச் செய்தேன். இரவு பகல் நாங்கள் இடைவிடாமல் நடந்து வந்தும் மூன்று நாள் ஆகிவிட்டது. இங்கே வந்த பிறகும் தங்களை விட்டுப் போய் விடலாம் என்று சொன்னார்கள். தங்களுக்கு நினைவு வந்த பிறகு சொல்லிக் கொண்டுதான் பிரிந்து வருவேன் என்று பிடிவாதம்



பிடித்தேன். அந்த என் எண்ணம் நிறைவேறிவிட்டது. தாங்கள் என்னைக் கொல்லப் பார்த்தீர்கள். அதற்கு நியாயமும் இருந்தது. ஆனால் விதி வசத்தினால் வேறு விதமாக நடந்துவிட்டது. என் உயிரை வாங்க எண்ணிய தங்களை நான் உயிர்ப்பித்தேன். சற்று முன் என் கையால் கொடுத்த கஞ்சியை விஷம் என்று சொல்லி விட்டெறிந்தீர்கள். ஆனால் மூன்று தினங்களாகத் தாங்கள் நினைவிழந்திருந்த காலத்தில் இந்தக் கையினாலேதான் தங்கள் வாயில் தண்ணீர் விட்டுக் காப்பாற்றி வந்தேன். மூன்று ஆண்டுகாலம் தாங்கள் என்னைத் தங்கள் அரண்மனையின் பேரரசியாக வைத்து இணையற்ற பெருமை அளித்து வந்தீர்கள். அதற்குக் கைமாறு இந்த ஜன்மத்தில் நான் செய்ய முடியாது. என்றாலும் இந்த மூன்று நாள் தங்களுக்கு என் கையினால் பணிவிடை செய்யக் கொடுத்து வைத்திருந்தேன். இந்த நினைவு என் உயிர் உள்ள வரையில் எனக்குத் திருப்தி அளித்து வரும். போய் வருகிறேன், ஐயா! விடை கொடுங்கள்!''

''நந்தினி! என்னிடம் ஏன் விடை கேட்கிறாய்? கேட்காமலே போய் விடு! நீ இங்கே தாமதிக்கத் தாமதிக்க, என் புத்தி தடுமாறிக் கொண்டு வரும்!''

''ஆம்; என்னை மறுபடியும் கொல்ல வேண்டும் என்று தங்களுக்குத் தோன்றினாலும் தோன்றி விடும். சுவாமி! தங்கள் கையினால் உயிர் துறக்கும்படி நேர்ந்தால் அதை அடியாள் பெறற்கரும் பாக்கியமாகக் கருதுவேன். ஆயினும் முதலில் என்னைக் கொல்லுவதற்காகத் தானே தாங்கள் மாறுவேடம் பூண்டு வந்தீர்கள்?''

''எதற்காக மாறுவேடம் பூண்டு வந்தேன்? நீ ஏதோ ஒரு காரணம் கூறினாய். உன் ஒழுக்கத்தைச் சந்தேகித்து உண்மையைக் கண்டுபிடிக்க வந்தேன் என்று கூறினாய். அது சரியல்ல. நான் பழுவேட்டரையனாக உன் முன் தோன்றி, நீ இரண்டு வார்த்தை என்னிடம் பேசி விட்டால், என் மனம் இளகி விடும் என்று பயந்துதான் அவ்வாறு வேடம் போட்டுக் கொண்டு இரகசிய வழியில் வந்தேன். உனக்குப் பேசுவதற்கே இடங்கொடாமல் நீ பிரமித்து நிற்கும்போதே உன் மீது கத்தியை எறிந்து கொல்ல எண்ணி வந்தேன். கடம்பூர் அரண்மனை வேலைக்காரன் இடும்பன்காரியைப் பயமுறுத்தி அவன் கையிலிருந்த கத்தியைப் பிடுங்கிக் கொண்டு வந்தேன். அதுமட்டுமல்ல, நந்தினி! கிழவன் பழுவேட்டரையன் பொறாமை கொண்டு அவனுடைய இளம் மனைவியைக் கொன்றான் என்ற பழிச் சொல் பரவி ஊர் சிரிக்கக் கூடாது என்று நினைத்துக் காளாமுகனுடைய வேடத்துடன் வந்தேன். ஆனால் சற்று முன் நீ கூறியது போல், நான் ஒன்று நினைக்க விதி வேறு ஒன்று நினைத்தது. இனி ஒரு தடவை அத்தகைய முயற்சி என்னால் செய்யவே முடியாது. ஆகையால், நீ போய் விடு! இதை மட்டும் சொல்லி விட்டுப் போ! அச்சமயம் நான் வந்து குறுக்கிட்டிராவிட்டால், என்ன நடந்திருக்கும்? உன் நோக்கத்தை எப்படி முடிக்க எண்ணியிருந்தாய்?''

''ஆம், ஆம்; அதையும் சொல்ல வேண்டுமென்றுதான் காத்திருந்தேன். தங்கள் கோபம் என் புத்தியையும் குழப்பிவிட்டது. சுவாமி! தாங்கள் தஞ்சைக்குப் போகும்போது 'தங்கள் குல தர்மத்துக்கு என் கையினால் களங்கம் நேரிடாது' என்று உறுதி கொடுத்தேன். அதை நிறைவேற்றப் பெரும் பிரயத்தனம் செய்தேன். மணிமேகலை, கந்தமாறன், வந்தியத்தேவன் இவர்களில் ஒருவர் மூலமாக என் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளலாமென்று யுக்திகள் செய்தேன். முக்கியமாக, மணிமேகலையை நான் அதிகமாக நம்பியிருந்தேன். வேறு காரணத்துக்காக அங்கே மறைந்து நின்ற வந்தியத்தேவனைக் கொல்வதற்காகக் கரிகாலர் வெறி கொண்டு ஓடுவார்; அப்போது மணிமேகலை அவரைக் கொல்லுவாள்; மணிமேகலையின் மேல் குற்றம் சாராமலிருப்பதற்காக வந்தியத்தேவன் 'நான்தான்

கொன்றேன்!' என்று ஒப்புக்கொள்வான்; அதனால் பழையாறைக் குந்தவையின் பேரில் என் வஞ்சகத்தைத் தீர்த்துக் கொண்டதுமாகும்; – இப்படியெல்லாம் திட்டமிட்டிருந்தேன். ஆனால் இதற்கெல்லாம் அவசியம் ஏற்படவே இல்லை. இளவரசர் தம் கையினாலேயே தம் உயிரை மாய்த்துக்கொண்டார்...''

''இல்லை, நந்தினி! இல்லை! கரிகாலர் தம் உயிரைத் தாமே மாய்த்துக் கொள்ளவில்லை. என்னைக் கூடவா ஏமாற்றப் பார்க்கிறாய்?''

"சுவாமி! இடும்பன் காரியின் கத்தியைத் தாங்கள் அச்சமயம் எறிந்திரா விட்டால், அடுத்தகணத்தில் கரிகாலர் தம்மைத் தாமே வீர பாண்டியன் வாளினால் மாய்த்துக்கொண்டிருப்பார்...''

''ஆம், ஆம்; ஒரு கணம் நான் தாமதித்து வந்திருந்தால் இந்தப் பெரிய துரோகச் செயலைச் செய்திருக்க மாட்டேன். அதற்கு மாறாக, உன் பேரில் சந்தேகப்பட்டிருப்பேன். நந்தினி! விதிப்படி நடந்துவிட்டது. இனி அதை மாற்ற முடியாது. விதி ஒரு விதத்தில் எனக்கும் நல்லது செய்திருக்கிறது. இருவரும் இன்னொரு ஜன்மம் எடுத்தால், நீ என்னையே வாழ்க்கைத் துணைவனாய்க் கொள்ள விரும்புவதாய்க் கூறினாயே? அதைக் காட்டிலும் இனிமையான வார்த்தைகளை என் வாழ்நாளில் நான் கேட்டதில்லை. உன்னிடம்கூடக் கேட்டதில்லை. என் ஆவி பிரியும் நேரத்தில் நான் அந்த வார்த்தைகளைத்தான் நினைத்துக் கொண்டு சாவேன். ஆம், நந்தினி! இந்தப் பிறவியில் இனி நீயும் நானும் சேர்ந்து வாழ்க்கை நடத்த முடியாது. ஆகையால் நீ போய் விடு! போவதற்கு முன்னால், நான் ஆத்திரத்தினால் கொட்டியது போகக் கஞ்சி மிச்சமிருந்தால் கொடுத்து விட்டுப் போ! கஞ்சி இல்லாவிட்டால், கொஞ்சம் தண்ணீராவது உன் கையினால் கொடுத்து விட்டுப் போ! நான் முதலில் கூறியதை எல்லாம் மறந்து மன்னித்து விட்டதற்கு அடையாளமாக ஒரு வாய் கஞ்சியாவது, தண்ணீராவது கொடுத்து விட்டுப் போ!'' என்றார் பழுவேட்டரையர்.

''ஆகட்டும், ஐயா! இவ்வளவு கருணை செய்ததற்கு என் உயிர் உள்ள வரைக்கும் நன்றி செலுத்தவேன்!'' என்று நந்தினி கூறிவிட்டு, அடுப்பிலிருந்து கஞ்சி எடுத்து வரச் சென்றாள்!

ஆழ்வார்க்கடியான் அந்தச் சமயம் பார்த்துக் குகையிலிருந்து நழுவிச் செல்ல நினைத்தான். தெரிந்து கொள்ள விரும்பியதையெல்லாம் அவன் தெரிந்து கொண்டு விட்டான். இனி அங்கிருப்பதில் உபயோகம் இல்லை; அபாயமும் உண்டு. இனிமேல் செய்ய வேண்டியதென்ன என்பதைப் பற்றி வெளியிலே போய் யோசித்துக் கொள்ளலாம் என்று எண்ணிக்கொண்டே வெளியேறினான்.

நாற்பத்து ஆறாம் அத்தியாயம்

ஆழ்வானுக்கு ஆபத்து!

ஆழ்வார்க்கடியானும் பூங்குழலியும் மலையடிவாரத்து மரத்தினடியில் உட்கார்ந்தார்கள்.

''பெண்ணே! நான் வந்த காரியம் ஆகிவிட்டது. புறப்படலாமா?'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''வைஷ்ணவரே! நீர் வந்த காரியம் ஆகிவிட்டதென்றால் நீர் போகலாம். நான் வந்த காரியம் இன்னும் பூர்த்தி ஆகவில்லை!''

"நீ என்ன காரியத்துக்காக வந்தாய்?"

''என் அத்தையைக் கொன்ற பாதகனைத் தேடிக் கொண்டு வந்தேன்.''

''அவனைக் கண்டுபிடிக்கவில்லையா? அதோ அந்தச் சதிகாரரின் கூட்டத்தில் அவன் இல்லையா?''

''இருக்கிறான்!''

''பின்னே என்ன?''

''அவனைத் தரிசனம் செய்து புண்ணியம் கட்டிக் கொண்டு போவதற்காக வந்தேனா? கொலைக்குக் கொலை, பழிக்குப் பழி வாங்குவதற்காக வந்தேன்.''

''பூங்குழலி! குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பதற்கு நாம் யார்! அதற்குக் கடவுள் இருக்கிறார்!''

''கடவுள் இருக்கிறாரா, இருந்தாலும் மனிதர்களுடைய துரோகச் செயலைத்



தண்டிக்கிறாரா என்பது பற்றி எனக்குச் சந்தேகமாயிருக்கிறது.''

''கடவுளை விட்டு விடுவோம். இந்த உலகில் குற்றம் செய்தவர்களைத் தண்டிக்கும் பொறுப்பு அரசர்களுடையது; அரசர்கள் நியமிக்கும் அதிகாரிகள் செய்ய வேண்டியது.

''அரசர்களும் அவர்களுடைய அதிகாரிகளும் தங்கள் கடமையைச்



சரிவரச் செய்யாவிட்டால்?''

''செய்யவில்லையென்று நாம் எப்படித் தீர்மானிப்பது?''

''வைஷ்ணவரே! அதோ உள்ள பாதகர்களில் ஒருவன், மேல் மாடியிலிருந்து வேலை எறிந்து அன்பே உருவான என் அத்தையைக் கொன்றான். வாயினால் பேசத் தெரியாதவளும் ஒருவருக்கும் ஒரு தீங்கும் நினையாதவளும் வாழ்க்கையெல்லாம் துர்ப்பாக்கியசாலியாக இருந்தவளுமான ஒரு பேதைப் பெண்ணைக் கொன்றான். சக்கரவர்த்தியும் அவருடைய ராணிமார்களும் தஞ்சைக் கோட்டை அதிகாரியான சின்னப் பழுவேட்டரையரும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆயினும் அவனைத் தப்பி ஓடும்படி விட்டு விட்டார்கள்...''

''பூங்குழலி! சோமன் சாம்பவானைப் பிடிப்பதற்கு யாதொரு முயற்சியும் அவர்கள் செய்யவில்லையா?''

''வாழ்நாளெல்லாம் என் அத்தையை நிராகரித்த சக்கரவர்த்தி இப்போது அவளை மடியில் போட்டுக்கொண்டு அழுதார். மற்றவர்கள் எல்லாரும் திக்பிரமை கொண்டு நின்றார்கள். 'கொலைகாரனைத் தொடர்ந்து நான் போகிறேன்' என்றதும் சின்னப் பழுவேட்டரையரும் எழுந்து வந்தார். ஆனால் சுரங்கப் பாதையில் அவர் திரும்பிப் போக நேர்ந்தது.''

''அது ஏன்?''

''சுரங்கப் பாதையில் நானும் அவரும் சென்றபோது இருளில் ஓர் ஓலக் குரல் கேட்டது. சின்னப் பழுவேட்டரையர் அந்தக் குரல் வந்த இடத்தை நோக்கிப் பாய்ந்து அங்கே இருந்தவனைப் பிடித்துக் கொண்டார். 'இதோ கொலைகாரன் அகப்பட்டு விட்டான்!' என்று கூவினார். 'இல்லை! இல்லை! நான் கொலை செய்யவில்லை!' என்று ஒரு குரல் வந்தது. அது யாருடைய குரல் என்பது சின்னப் பழுவேட்டரையருக்குத் தெரிந்ததும் அவர் திகைத்துப் போய், 'ஐயோ? நீர் ஏன் இங்கே வந்தீர்?' என்றார். 'பொக்கிஷமெல்லாம் பத்திரமாக இருக்கிறதா என்று பார்ப்பதற்கு வந்தேன்' என்றது இருளில் வந்த குரல். 'ஐயோ! தெய்வமே உம்மை இங்கே யாராவது பார்த்தால் என்ன நினைத்துக்கொள்வார்கள்? நீர் அல்லவோ சக்கரவர்த்தியைக் கொல்ல முயன்றதாக எண்ணிக்கொள்வார்கள்?' என்றார் காலாந்தக கண்டர், 'சக்கரவர்த்தி செத்துப் போய் விட்டாரா?' என்று ஆவலுடன் கேட்டார் சின்னப் பழுவேட்டரையருடைய அருமை மருமகரான மதுராந்தகத் தேவர், 'அசட்டுப் பிள்ளையே! என்னுடன் வா! யாரும் பார்ப்பதற்கு முன் வா!' என்று சொல்லிக் காலாந்தக கண்டர் அவருடைய மருமகப் பிள்ளையின் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு போய்விட்டார். பிறகு நான் மட்டும் இந்தக் கொலைகாரனைத் தொடர்ந்து வந்தேன். இவ்வளவு தூரம் சிரமப்பட்டு வந்து, என் நோக்கத்தை நிறைவேற்றாமல் திரும்பிப் போகச் சொல்கிறாயா?'' என்றாள் பூங்குழலி.

''பெண்ணே! நீ ஆண் பிள்ளையாகப் பிறந்திருக்க வேண்டியவள். பிறந்திருந்தால் பெரியதொரு சாம்ராஜ்யத்தின் சர்வாதிகாரியாக இருந்திருப்பாய். அது போனால் போகட்டும். இதைக் கேள். ஒரு நியாயம் சொல்லு! ஒருவரைக் கொல்ல நினைத்து இன்னொருவரைத் தற்செயலாகக் கொன்றவன் மீது கொலைக் குற்றம் சாட்ட முடியுமா?''

''உம்முடைய கேள்வி எனக்கு விளங்கவில்லை. கொன்றவன் கொலைக் குற்றம் செய்தவன்தானே?'

''அது எப்படிச் சொல்ல முடியும்? இராமாயணம் கேட்டிருப்பாய். தசரதர் யானை தண்ணீர் குடிப்பதாக நினைத்து அம்பை விட்டார். அது ரிஷி குமாரன் மீது விழுந்தது. ரிஷி குமாரனைக் கொன்ற கொலைக் குற்றத்துக்காகத் தசரதர் தண்டிக்கப்பட்டாரா? இல்லை! இப்போது நீ தொடர்ந்து வந்த சோமன் சாம்பவனை எடுத்துக் கொள். அவன் சக்கரவர்த்தியைக் கொல்வதற்காக வேலை எறிந்தான். ஆனால் சக்கரவர்த்தி உயிரோடிக்கிறார். உன் அத்தை

குறுக்கே வந்து வேலைத் தாங்கி உயிரை விட்டாள். அவள் தற்கொலை செய்து கொண்டவள்தானே? பின், சோமன் சாம்பவன் மீது கொலைக் குற்றம் எப்படிச் சேரும்?''

''வைஷ்ணவரே! உம்முடைய நீதி முறை அதிசயமாக இருக்கிறது...''

''என்னுடைய நீதிமுறை மட்டும் அல்ல. சர்வலோக நாயகனான சாக்ஷாத் நாராயண மூர்த்தியின் நீதி முறையே விசித்திரமாகத்தான் இருக்கிறது. இந்த உலகில் பாவம் செய்கிறவர்கள். நல்லவர்கள் - புண்ணியாத்மாக்கள் – கஷ்டப்பட்டு உயிரை விடுகிறார்கள். இதற்கெல்லாம் கடவுளுடைய நியாயம் ஏதோ இருக்கத்தானே வேண்டும்.''

''நீரும் உம்முடைய நாராயணனும் எப்படியாவது போங்கள். எனக்குத் தெரிந்த நியாயத்தை நான் நிறைவேற்றி விட்டுத்தான் வருவேன்.''

''பூங்குழலி! உனக்காக மட்டும் நான் இந்தப் பேச்சை எடுக்கவில்லை. அதோ அந்த மலைக் குகையில் இரண்டு பேர் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் ஆதித்த கரிகாலரைக் கொன்றவர். ஆனால் கரிகாலரைக் கொல்ல வேணுமென்று நினைத்துக் கொல்லவில்லை. வேறொருவரைக் கொல்ல நினைத்து எறிந்த கத்தி இளவரசரின் பேரில் விழுந்து அவரைக் கொன்றுவிட்டது. அவரைக் கொலைகாரர் என்று சொல்ல முடியுமா?''

''வைஷ்ணவரே! என் மூளையைக் குழப்ப வேண்டாம். மலைக்குகைக்குள் இருப்பவர்கள் யார்?''

''சோழ சாம்ராஜ்யத்தின் தனாதிகாரி, தஞ்சை அரண்மனையின் சர்வாதிகாரி, இருபத்தி நான்கு போர்க்களங்களில் போரிட்டு அறுபத்து நாலு விழுப் புண்களைத் தம் திருமேனியில் சுமந்திருக்கும் வீராதிவீரர், இறைவிதிக்கும் தேவர், குறுநில மன்னர் குழுவின் மாபெரும் தலைவர், நந்தினி தேவியின் கணவர் – பெரிய பழுவேட்டரையர் அந்த மலைக் குகையில் வீற்றிருக்கிறார்...!''

இவ்வாறு ஆழ்வார்க்கடியான் பெருங் குரலில் கட்டியம் கூறுவது போல் கூறினான். அதே சமயத்தில் ரவிதாஸன், ரேவதாஸன், பரமேசுவரன், சோமன் சாம்பவன் முதலியவர்கள் திடு திடுவென்று ஓடி வந்தார்கள். பூங்குழலி சட்டென்று அப்பால் விலகி நின்றாள். வந்தவர்கள் ஆழ்வார்க்கடியானைச் சூழ்ந்து கொண்டார்கள். ரவிதாஸன் கையில் குறுந் தடி ஒன்று இருந்தது. அதை ஓங்கிய வண்ணம் ரவிதாஸன், ''அடே வேஷதாரி வைஷ்ணவனே! அன்பில் அநிருத்தனின் ஒற்றனே! கடைசியில் எங்களிடம் அகப்பட்டுக் கொண்டாயா? நாங்கள் செய்த மூன்று முயற்சியில் ஒன்றிலேதான் வெற்றி அடைந்தோம். மற்ற இரண்டிலும் தோல்வி அடைந்தோம். அந்தத் தோல்விகளைப் பற்றி எங்களுக்கு இனிக் கவலை இல்லை. மூன்று ஆண்டுகளாகத் தேடிக் கொண்டிருந்த உன்னைப் பிடித்து விட்டோமல்லவா? இந்தத் தடவை நீ எங்களிடமிருந்து தப்ப முடியாது!'' என்றான்.

உடனே ஆழ்வார்க்கடியான், முன்னைவிட உரத்த குரலில், ''அப்பனே! தேடுகிறவன் யார்? தப்பி ஓடுகிறவன் யார்? எல்லாரும் அந்த சாக்ஷாத் நாராயண மூர்த்தியின் குமாரர்கள்தான்! அவனன்றி ஓரணுவும் இந்த உலகில் அசையுமா? ரவிதாஸா! நீயும் கேள்! உன்னைச் சேர்ந்தவர்களும் கேட்கட்டும். வேறு வேறு சில்லறைத் தெய்வங்களையெல்லாம் விட்டு விட்டு சாக்ஷாத் மகா விஷ்ணுவைச் சரணமடையுங்கள்! பகவான் உங்களுடைய பாவங்களையெல்லாம் மன்னித்துக் காப்பாற்றுவார்! மானிடர்களுக்காக உழைத்து வாழ்க்கையை வீணாக்கி மடிந்து போகாதீர்கள். நாராயணனைத் தொழுது நர ஜன்மம் எடுத்ததன் பலனை அடையுங்கள். பரம பதத்தில் உங்களுக்கு இடந் தேடிக் கொள்ளுங்கள்! எங்கே? என்னுடன் சேர்ந்து எல்லாரும் பாடுங்கள்,

பார்க்கலாம்:-

"நாராயணனே தெய்வம் -
நாமெல்லோரும் துதிசெய்வம்!"
என்று பாடத் தொடங்கினான்.

ரவிதாஸன் கலகலவென்று சிரித்து விட்டு, "ஏனப்பா, வைஷ்ணவனே? சாக்ஷாத் பரமசிவன் மட்டும் தெய்வம் இல்லையா? பரமசிவனைத் துதித்தால் பரம பதம் கிட்டாதா?" என்றான்.

ஆழ்வார்க்கடியான் உற்சாகத்துடன், "பரமசிவன் அழிக்கும் தெய்வம்! நாராயணன்தான் காக்கும் தெய்வம்! அன்று முதலை வாயில் அகப்பட்டுக் கொண்டு தவித்த கஜராஜனை எங்கள் நாராயண மூர்த்தி காப்பாற்றியதை மறந்துவிட்டீர்களா?" என்றான்.

"அப்பனே! கஜராஜனைக் காப்பாற்றிய விஷ்ணுபகவான் முதலையைக் கொல்லத்தானே செய்தார்? அது போலவே இராவணன், கும்பகர்ணன், இரணியாட்சன், இரணியகசிபு, சிசுபாலன், தந்தவக்கிரன் ஆகியவர்களை உங்கள் மகாவிஷ்ணு அழித்துப் போடவில்லையா?" என்றான் ரவிதாஸன்.

"எங்கள் பெருமாளின் கையால் வதையுண்டவர்களும் சாக்ஷாத் ஸ்ரீ வைகுண்டத்தை அடைவார்கள். இரணியனையும் இராவணனையும் சிசுபாலனையும் கொன்ற பிறகு அவர்களுக்குப் பகவான் வைகுண்ட பதவியை அளித்தார். உங்கள் பரம சிவனோ திரிபுரர்களை ஒரேயடியாக நெற்றிக் கண்ணால் எரித்து அழித்துப் போட்டார். அவர்களுக்கு மோட்சத்தைக் கொடுத்தாரா?"

"சரி! சரி! உன் கதையை நிறுத்து! உன்னுடைய நாராயணன் இப்போது உன்னை வந்து காப்பாற்றட்டும்!" என்று சொல்லிக் கொண்டே ரவிதாஸன் தன் கையிலிருந்த குறுந்தடியை ஓங்கினான்.

அந்தச் சமயம் பூங்குழலி அவனுக்கு உதவி செய்ய விரும்பி இடுப்பில் செருகியிருந்த கத்தியை எடுத்தாள். அதே நேரத்தில் மலைக் குகையிலிருந்து தலைவிரி கோலமாக ஒரு பெண்ணுருவம் ஓடி வருவதைப் பார்த் தாள். ஒரு கண நேரம் அவளைத் தன் அத்தை மந்தாகினி என்று எண்ணிப் பிர மித்து நின்றாள். பின்னர், 'இல்லை, இவள் பழுவூர் ராணி நந்தினி' என்று தெளிந் தாள்.

இதற்குள் நந்தினி, ஆழ்வார்க்கடியான் அருகில் வந்துவிட்டாள். ரவிதாஸனுடைய ஓங்கிய கைத்தடியைத் தன் கரங்களினால் தடுத்து நிறுத்தினாள்.

"வேண்டாம்! என் சகோதரனை ஒன்றும் செய்யாதீர்கள்! ரவிதாஸா! நான் உங்கள் ராணி என்பது உண்மையானால், தடியைக் கீழே போடு!" என்றாள்.

ஆழ்வார்க்கடியான் அப்போது, "சகோதரி! உனக்கு நன்றி. ஆனால் இவர்களால் எனக்கு எந்தவிதத் தீங்கும் செய்திருக்க முடியாது. நான் வணங்கும் தெய்வமாகிய நாராயண மூர்த்தி என்னைக் காப்பாற்றியிருப்பார்!" என்றான்.

ரவிதாஸன் சிரித்துவிட்டு, "எப்படிக் காப்பாற்றியிருப்பார்? அன்றைக்குப் பிரஹலாதனைக் காப்பாற்றத் தூணிலிருந்து வந்ததுபோல் இன்று இந்த மரத்தைப் பிளந்துகொண்டு நாராயண மூர்த்தி வந்திருப்பாரா?" என்றான்.

"மந்திரவாதி! என் பேச்சில் உனக்கு நம்பிக்கை இல்லையா? நல்லது! அதோ பார்! சற்றுத் தூரத்தில் தெரியும் அய்யனார் கோவிலைப் பார்! அந்தக் கோயிலுக்கு முன்னால் மண் குதிரைகள் இருக்கின்றன அல்லவா? ஸ்ரீமந் நாராயணனுடைய கருணையினால் அந்த மண் குதிரைகள் உயிர் பெற்றுவிடும்! அவற்றின் பேரில் வேல் பிடித்த வீரர்கள் ஏறிக் கொண்டு வந்து உங்களைச் சிறைப் பிடித்து என்னைக் காப்பாற்றுவார்கள்!"

ஆழ்வார்க்கடியான் மேற்கண்டவாறு சொல்லிக்கொண்டே கையினால் சுட்டிக் காட்டிய திக்கை அனைவரும் நோக்கினார்கள். தங்கள் கண்களை நம்ப முடியாமல் திண்டாடிப் போனார்கள்! ஏனெனில், அந்த மண் குதிரைகள் உண்மையாகவே உயிர் பெற்று அவர்களை நோக்கிப் பாய்ந்து ஓடி வந்ததாக அவர்களுக்குத் தோன்றியது. ஒவ்வொரு குதிரையின் பேரிலும் வேல் பிடித்த வீரன் ஒருவன் உட்கார்ந்திருந்தான்!

(தொடரும்)

Life is too Wonderful to be spent worrying

Nicco Uco Alliance Credit Ltd is part of the Rs. 600 Crores NICCO Group. This Company is one of the leading Non Banking Finance Company in India.

The Company is Primarily engaged in the business of Hire Purchase & Leasing having its Head Office in Calcutta and the Southern Divisional Office based at Chennai.

Nicco Uco Alliance Credit Ltd is the only NBFC in India having the ISO 9001 certification for all its products & services. The Company is a serious and committed player in the NBFC sector with a record of uninterrupted dividend payments since inception.

PROMOTERS	ASSOCIATE COMPANIES
Nicco Group	NICCO HELIFOSION LTD
UCO Bank	WEBEL NICCO ELECTRONICS LTD
IFC - Washington (A world bank affiliate)	NICCO PARKS & RESORST LTD

PERIOD	NON-CUMULATIVE DEPOSIT SCHEME - A				CUMULATIVE DEPOSIT SCHEME - B	
	Monthly	Quarterly	Half-yearly	Annually	Interest Rate	Effective Annual Yield
12 Months	12.00 %	12.00 %	12.50 %	13.00 %	13.00 %	13.00 %
24 Months	12.50 %	12.50 %	13.00 %	13.50 %	13.50 %	14.41 %
36 Months	13.00 %	13.00 %	13.50 %	14.00 %	14.00 %	16.05 %
60 Months	14.00 %	14.00 %	14.50 %	15.00 %	15.00 %	20.23 %
Minimum Amount (Rs.)	15000	10000	10000	10000	5000	

PERIOD	MONEY MULTIPLIER - SCHEME - C	
	Minimum Deposit Rs.	Maturity value Rs.
37 Months	10000	15000

NICCO UCO ALLIANCE CREDIT LTD.

Regd. Office : NICCO House, 2, Hare Street, Calcutta - 700 001. Tel : 248-5102 (6 Lines). Fax : (91) 33 2430783

Southern Divisional Office : **Aalim Centre, 3rd Floor, 82, Dr. Radhakrishnan Salai, Chennai - 600 004.**

Phone : (044) 8112446 / 8113548 / 8111651. Fax : (044) 8111959.

Branches : • Bangalore ✆ 5589004 • Calicut ✆ 720456 • Cochin ✆ 361389 • Coimbatore ✆ 432376 • Hyderabad ✆ 3233806 • Madurai ✆ 630251 • Mettur ✆ 25031 • Mumbai ✆ 3723448 • Namakkal ✆ 32235 • Nasik ✆ 501807 • New Delhi ✆ 4651588 • Salem ✆ 448120 • Trichy ✆ 761168 • Tuticorin ✆ 327407 • Vellore ✆ 223008 • Vijayawada ✆ 483904

The Statutory Advertisement published in the Telegraph and Ananda Bazar Partika on 27-9-2000

"சமத்துவபுரத்தில்"

மதச்சார்பற்ற கொள்கைக்கு எந்த வடிவத்தில் எந்த நேரத்தில் எப்படிப்பட்ட சோதனை வந்தாலும் அதை நாங்கள் தீவிரமாக எதிர்ப்போம். இந்திய யூனியன் முஸ்லீம் லீக் என்ற குடையின் கீழ் இருந்த நாங்கள் "இந்திய தேசிய லீக்" என்ற அமைப்பைத் துவங்கியதற்குக் காரணம், எங்களில் சிலர் இந்த மதச்சார்பற்ற கொள்கைக்கு வேட்டு வைத்தவர்களுக்கு முட்டுக் கொடுத்ததுதான்.

இந்தியா ஒரு மதச் சார்பற்ற நாடு. பல்வேறு மதங்களில் அழுத்தமான நம்பிக்கைக் கொண்ட மக்கள் இங்கிருக்கிறார்கள். எனவே ஒருவருக்கொருவர் மற்றவர் பற்றியிருக்கும் மதத்தை மதிக்க வேண்டும். மதச்சார்பற்ற நாடு என்றால் மதங்களே கூடாது என்று அர்த்தம் செய்து கொள்ளக்கூடாது. ஒவ்வொருவரும், எந்த ஒரு இடையூறுமின்றி தங்கள் மதங்களைப் போற்றி வளர்த்திட, பாதுகாத்திட அரசியல் சட்டம் உறுதியளிக்கிறது. இங்கு அரசுக்கு மதம் கிடையாது. (State has no religion) அவ்வளவுதான். வாஜ்பாய் ஒரு ஹிந்து. அவருக்கு மதம் உண்டு. ஆனால் இந்தியப் பிரதமருக்கு மதம் கிடையாது. அப்துல் லத்தீபுக்கு மதம் உண்டு; ஆனால் வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினருக்கு மதம் கிடையாது.

பாபர் மசூதி 1992ல் இடிக்கப்பட்டது. அது இடிக்கப்பட்ட முறையும் இடித்ததற்காகக் கடைபிடிக்கப்பட்ட வழியும் சட்டத்திற்கு முரண்பட்டவை. "பாபர் மசூதி இருந்த இடத்தில் கோயில் கட்டுவதை நான் வரவேற்கிறேன்; ஆனால் இடித்த முறையும், கையாண்ட வழியும் தவறானவை" என்று காஞ்சி ஜெயேந்திரர் கூடச் சொல்லியிருக்கிறார். 1992ல் பிரதமராக இருந்தவர் நரசிம்மராவ். அவரது கடமை இறையாண்மையை எப்பாடு பட்டாவது காப்பாற்ற வேண்டும் என்பதே! பாபர் மசூதியை இடித்தது எதிர்பாராத செயல் அல்ல; ஒரு கூட்டம் திட்டமிட்டே ஆட்களைத் திரட்டி இடித்தது. ஒரு பழமையான மசூதி இடிக்கப்பட்டது என்பதைவிட 'சட்டத்தின் மேலாண்மை இடிக்கப்பட்டது என்பதே உண்மையாகும். மத்திய மாநில அரசுகள் தங்கள் கடமையிலிருந்து தவறி விட்டன. ராவ் அப்போது பிரதமர் மட்டுமல்ல; காங்கிரஸ் தலைவரும்கூட. அவர் பாபர் மசூதியை இடித்தவர்களுக்கு நேரிடையாகவும் மறைமுகமாகவும் உடந்தையாக இருந்தார் என்பதே எங்கள் குற்றச்சாட்டு. இதன் வாயிலாக மதச்சார்பற்ற கொள்கைக்கு வேட்டு வைக்கப்பட்டது. அந்தக் கால கட்டத்தில் கேரளாவில் காங்கிரஸோடு இணைந்து முஸ்லீம் லீக், ஆட்சியில் பங்கு கொண்டிருந்தது.

எங்கள் தலைவர் இப்ராஹிம் சுலைமான் சேட், மதச்சார்பற்ற தன்மைக்கும், அரசியலமைப்பு சட்டத்திற்கும் வேட்டு வைத்த காங்கிரஸோடு எந்தவிதமான தொடர்பும் வைத்துக் கொள்ள மாட்டோம் என்று சொன்னார். ஆனால் கேரளாவில் பொறுப்பில் இருந்த முஸ்லீம் லீக் பிரமுகர்கள் சிலர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. பதவிப் பித்தர்களாக இருந்தனர். இந்த நிலையில்தான் சேட் வெளியே வந்தார். இந்திய தேசிய லீக் பிறந்தது. ஆனால் இப்போதிருக்கும் காங்கிரஸ் தலைமை உடன்பாடானதே!

எங்களைப் பொறுத்தவரை தி.மு.கவுடன் நாற்பது வருட கால உறுதியான உடன்பாடு இருந்தது. குறிப்பாக கலைஞரிடம் எனக்கு அபரிமிதமான நெருக்கமும் உருக்கமும் உண்டு. இதற்குக் காரணம் எங்களிடையே பொதுவான நம்பிக்கையாக சில கொள்கைகள் இருந்தன. பெரியார், அண்ணா, காயிதே மில்லத் ஆகிய தலைவர்களுக்குப் பிறகு பெரு நோக்கு, பொது நோக்கு அடிப்படையில் மதச்சார்பற்ற கொள்கைக்கு எந்த ஆபத்து வந்தாலும் அதை எதிர்த்து குரல் கொடுக்கும் முதல் தலைவராக கலைஞர் இருப்பார் என்பது என் நம்பிக்கையாக இருந்தது.

எம். அப்துல் லத்தீப்,
தலைவர்,
இந்திய தேசிய லீக்
(தமிழ்நாடு பிரிவு)





சமூகநீதி இல்லை!"

பா.ஜ.க.வோடு கலைஞர் உடன்பாடு கண்டது எங்களை பேரதிர்ச்சிக்கு ஆளாக்கியது. எனவே கலைஞரோடு அரசியல் ரீதியாக நாங்கள் கொண்டிருந்த உறவை நீடித்துக் கொள்ள முடியவில்லை. 1998 தேர்தலில் அ.இ.அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வோடு உறவு கொண்டிருந்தது. அந்த நேரத்தில் தி.மு.க.வோடு இணைந்து அதைக் கடுமையாக எதிர்த்தோம். பின்னர் ஜெயலலிதா ஒரு கடற்கரை கூட்டத்தில் "நான் செய்த பெரும் தவறு பா.ஜ.க.வோடு கூட்டணி வைத்ததுதான்; அதற்காக மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்" என்று அறிவித்தார். இப்போது தி.மு.க. பா.ஜ.க.வோடு இணைந்திருக்கும் நிலையில் நாங்கள் அந்த அணியில் கண்டிப்பாக இருக்க முடியாது. நாங்கள் உயிர்மூச்சாக கருதும் மதச்சார்பற்ற கொள்கையின் அடிப்படையில் தி.மு.க - பா.ஜ.க கூட்டணிக்கு எதிராக அணி வகுத்திருக்கும் அ.இ.அ.தி.மு.க கூட்டணியில் இணைந்துள்ளோம்.

நான்கரை வருட தி.மு.க. ஆட்சியில் சாதனைகளைவிட வேதனைகளே அதிகம். அரசு ரீதியிலும் கட்சி மட்டத்திலும் கீழ் மட்டத்தில் ஊழல் புரையோடி போய் இருக்கிறது. சமத்துவபுரத்தில் வீடுகள் ஒதுக்குவதில் ஊழல். அங்கு சமூக நீதி இல்லை. பாலங்கள் கட்டுவதில் அதிகார துஷ்பிரயோகம், அகப்பட்டதைச் சுருட்டும் போக்கு; "இவ்வளவு பேசுகிறீர்களே.. ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ள ஜெயலலிதாவுடன் கூட்டணி சேர்ந்திருக்கிறீர்களே!" என்று எங்களைக் கேட்கலாம். திமுகவினர் என்ன ஊழல் செய்யாத உத்தம புத்திரர்களா? ஜெயலலிதா மீது வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன, "நீதி மன்றத்தில் நான் குற்றமற்றவள்" என்று அவர் கூறியிருக்கிறார். அதற்கு அவருக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டாமா? தி.மு.க.வினருக்கு சர்க்காரியா விவகாரம் மறந்து போய் விட்டது போலும்.

இந்த ஊழல் விவகாரங்கள் ஒரு பக்கம் இருக்க, தி.மு.க தலைமையிலுள்ள அணியை வரும் சட்டமன்றத் தேர்தலில் நாங்கள் தோற்கடிக்க துடிப்பதற்கு முக்கியக் காரணம் மதச்சார்புள்ள பா.ஜ.க அந்தக் கூட்டணியில் இருப்பதுதான். பா.ஜ.க தமிழகத்தில் காலூன்றுவதற்கு எந்த வாய்ப்பும் கொடுக்கப்படக் கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். அந்த வகையில் அ.இ.அ.தி.மு.க தலைமையில் உள்ள மதச்சார்பற்ற அணியை முன்னிலைப்படுத்தும் விதத்தில் எங்கள் பிரசாரம் தீவிரமாக அமையும்.

படம்: **ராஜன்**

"திமிகிட திமிகிட வாத்ய மிருதங்க..." திடீரென்று குரல் கேட்டது. ஒன்றும் புரியாமல் நான் விழிக்க என் முன் பிரசன்னமானார் சாட்சாத் திருவாளர் மிருதங்கம்.

"கச்சேரி சீசனும் அதுவுமாய் என்னைத் தேடி வந்திருக்கிறீர், என்ன விஷயமோ?" என்றேன் ஒரு வண்டி ஆச்சரியத்தோடு.

"சற்று புலம்பிவிட்டு போகத்தான், வேறெதுக்கு?"

"உமக்கென்ன ஓய்... உம் தாளகதிக்குத் தான் எல்லோரும் அசைகிறார்களே, போதாதா?; கச்சேரிகளில் தனியாவர்த்தனம் போதாது என்று தனியாக வேறு தனியாவர்த்தனக் கச்சேரிகள், மிருதங்கத்திற்கென்று லெக்ச்சர் டெமான்ஸ்ட்ரேஷன்கள், பாலக்காடு ரகு, திருச்சூர் நரேந்திரன், விநாயக்ராம் என்று இந்த வருடம் லயவித்வான்களுக்கு எக்கச்சக்க விருதுகள்..."

"போதும், போதும், விட்டால் அடுக்கிக் கொண்டே போகிறீரே? மேலோட்டமாகப் பார்த்தால் நீர் சொல்வதெல்லாம் சரிதான்... ஆனால் ஒரு சிலரைத் தவிர என்னைக் கையாளும் பல கலைஞர்களின் பாடு திண்டாட்டம்தான் என்பது எனக்குத் தெரியும்!

"அப்படியா?" என்று யோசனையில் ஆழ்ந்த என்னை "நான் சொன்னால் நம்பமாட்டீர்! நீரே ஒரு ரவுண்டு கலைஞர்களைப் பார்த்து விட்டு வாரும், நான் என்ன சொல்கிறேன் என்பது புரியும்!" என்று என்னைப் பிடித்துத் தள்ளாத குறையாய் அனுப்பி வைத்தார் மிருதங்கம்வான்.

நானும் அவர் சொன்ன பேச்சைக் கேட்க முடிவு செய்து திருச்சூர் நரேந்திரன், கணபதி ராமன், பாம்பே பாலாஜி, ஸ்கந்த பிரசாத், மனோஜ் சிவா என்று மிருதங்க கலைஞர்கள் சிலரின் வாய்களைக் கொஞ்சம் கிளறினேன்.



• ஸ்கந்த் பிரசாத்

• கணபதி ராமன்

சாதம் போட முன்னூறு ரூபாய்!



• பாம்பே பாலாஜி



நேரடியாகச் சொல்லவில்லை என்றாலும் மிருதங்க வித்வான்களுக்குத் தங்கள் திறமைக்கும் அவசிய தேவைக்கும் ஏற்ற சன்மானம் கிடைக்கவில்லை என்கிற மிக நியாயமான ஆதங்கம் நிறையவே இருப்பது புரிந்தது.

"எனக்கு வேறு உத்யோகம் இருப்பதால் பரவாயில்லை, சன்மானத்தைப் பற்றிக் கவலைப் படாமல் ஆத்மதிருப்திக்காக மட்டுமே வாசிக்கிறேன், ஆனால் வாசிப்பையே முழுநேர தொழிலாகக் கொண்டிருக்கும் கலைஞர்கள் பாடு ரொம்பவே கஷ்டம்தான்!" என்கிறார் பாம்பே பாலாஜி.

''இப்பொழுதுதான் தனியார் கம்பெனிகள், நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு சபாக் கச்சேரிகளை ஸ்பான்ஸர் செய்கிறார்களே, பிறகு வருமானத்திற்கென்ன?''- அப்பாவித்தனமாக கேட்ட எனக்குப் பொறுமையாகப் புரிய வைக்கிறார்கள்.

ஸ்பான்ஸர்கள், பணத்தைச் சபாக்காரர்களிடம் கொடுத்து விடுவார்களாம். பெரும்பாலான சபாக்களில் பக்கவாத்தியக்காரர் களுக்கான சன்மானமும் பாடகரிடமே கொடுக்கப் படுகிறதாம். அதை விநியோகிக்கும் உரிமை பாடகருக்குத் தானாம். சில பாடகர்கள் வாங்கும் சன்மானத்திற்கும் பக்க வாத்திய கலைஞர்களுக்கு அவர்கள் கொடுக்கும் சன்மானத்திற்கும் சம் பந்தமே இருக்காதாம். அப்படிப் பார்த்தால் சன்மானம் எல்லாம், பாட்டை அனுசரித்து வாசிப்பதைப் பொருத்து அல்ல, பாடகரை அனுசரித்து வாசிப் பதைப் பொருத்துதான் போலும் என்று நினைத்துக் கொண்டேன்.

''சௌம்யா, விஜய்சிவா போன்ற ஒன்றிரண்டு பாடகர்கள் தமக்கு வரும் பணத்தில் பாதியைப் பக்கவாத்திய கலை ஞர்களுக்குப் பிரித்துக் கொடுத்து விடுகிறார் கள், ஆனால் இப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு'' என்கிறார் கணபதிராமன்.



"ஸ்பான்ஸர்கள் பணம் கொடுப்பதோடு வேலை முடிந்துவிட்டது என்று நினைக்கக் கூடாது, தங்கள் பணம் சரிவர பயன்படுகிறதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்; எங்களின் ஆதங்கத்தைப் புரிந்து கொண்டு பணம் விநியோகிக்கும் விஷயத்தில் தலையிட முன்வரவேண்டும்!" என்கிறார் ஸ்கந்தபிரசாத்.

சன்மானம் தான் இப்படி என்றால் வாய்ப்புகளைப் பற்றி என்ன சொல்கிறார்கள்?

"வாய்ப்பு என்பது குதிரைக் கொம்பாகத்

தான் இருக்கிறது; திறமையை அடிப்படையாகக் கொண்டு பக்கவாத்தியக்காரர்களைத் தேர்ந்தெடுத்து சபாக்கள் பாடகர்களுக்குச் சிபாரிசு செய்யக் கூடாதா? அதையுமா பாடகர்களிடம் விட்டுவிட வேண்டும்? பலன்... ஒரு சில கலைஞர்களே திரும்பத் திரும்ப வாய்ப்புப் பெறுவதும், திறமையுள்ள வேறு பலர் வாய்ப்பே கிடைக்காமல் கஷ்டப்படுவதும், நியாயமா?... நீங்களே சொல்லுங்கள்?'' என்கிறார்கள்.

உண்மைதானே?

"இந்தக் கஷ்டங்கள் உங்க எல்லா பக்க வாத்தியக் கலைஞர்களுக்கும் பொதுவானதா?" என்று துருவினேன்.

"சன்மானப் பிரச்னை, வாய்ப்புப் பிரச்னை பொதுதான். ஆனால், எங்கள் வாத்யத்தின் பராமரிப்புச் செலவு மற்றவர்களுடையதை விட மிக அதிகம்" என்கிறார்கள் கோரஸாக.

''வெவ்வேறு சுருதிகளுக்கு வெவ்வேறு மிருதங்கம் தேவைப்படுவதால் ஒரு வித்வான் சராசரியாக பத்து முதல் பன்னிரண்டு மிருதங்கங்களைக் கைவசம் வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு மிருதங்கம் வாங்குவதற்கு நாலாயிரம் முதல் ஆறாயிரம் ரூபாய் வரை ஆகும் என்றால் எங்கள் முதலீட்டைக் கணக்கு செய்து கொள்ளுங்கள்!" என்கிறார்கள்.

"வாங்குவதோடு செலவு முடிந்து விடாது. அதன் பராமரிப்புக்கும் செலவு செய்து கொண்டே இருக்கவேண்டும்..." என்று ஸ்கந்த பிரசாத் சொல்ல, "மிருதங்கத்தைப் பொறுத்த வரை பராமரிப்பு என்பது மிக மிக முக்கியம்" என்று பாலாஜி சேர்ந்து கொள்ள "கச்சேரியில் ஒரு மிருதங்க வித்வான் பிரமாதமாக வாசிக்கிறார் என்றால், அதற்குப் பாதி காரணம், அவர் வாத்தியத்தைப் பராமரிக்கும் முறையாகத்தான் இருக்கும்" என்று கணபதிராமன் விளக்க, பொறுமையிழந்த நான் "பராமரிப்பு, பராமரிப்பு என்று சொல்கிறீர்களே, அப்படி என்னதான் செய்வீர்கள்?" என்றேன்.

"அதற்கு அடிக்கடி சாதம் போட வேண்டும்!"

"புளி சாதமா, மோர் சாதமா?" கடித்தேன்.

புன்முறுவலுடன் விளக்கினார் மனோஜ் சிவா. "கட்டான் கல்" எனப்படும் ஒரு கல்லைப் பொடி செய்து அதைச் சாதத்துடன் கலந்து அந்தக் கூழைத் தேய்ப்போம்; அப்போதுதான் வாத்யத்தின் த்வனி சுத்தமாக இருக்கும்; இதைத்தான் 'சாதம் போடுவது' என்று குறிப்பிடுவோம்; ஒரு தடவை சாதம் போட குறைந்தது முன்னூறு ரூபாய் ஆகும்; சராசரியாக இரண்டு அல்லது மூன்று கச்சேரிகளுக்கு ஒரு முறை இதைச் செய்ய வேண்டியிருக்கும்!"

"அதுமட்டுமல்ல, மிருதங்கம் ஒரு தோல் வாத்யம்; அதனால் தட்பவெப்ப நிலையின் மாற்றங்கள் அதை எளிதில் பாதித்துவிடும்... உதாரணத்திற்கு, கச்சேரிக்காக டில்லி செல்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்; வழியில் ஆந்திராவைக் கடக்கும் போது வெயில் கன்னென்று அடிக்கும்... டில்லி சென்றடைந்தவுடன் குளிர் தாக்கும்... இப்படிப்பட்ட மாறுதல்கள் நாதத்தைக் கெடுத்துவிடும்; அதுமட்டுமல்ல, சில சமயம், கண்ணுக்குத் தெரியாத பூச்சிகள் உள்ளே சென்று வாத்யத்தைப் பாழ்பண்ணிவிடும் வாய்ப்பு இருக்கிறது. இந்தக் காரணங்களால் அடிக்கடித் தோல் பகுதியை மூட்டடித்துச் சரி செய்ய வேண்டும். இதற்குத் தனியாக முன்னூறு ரூபாய் செலவு செய்ய வேண்டும்" என்றார் திருச்சூர் நரேந்திரன்.

இது தவிர, தோல்வார்களை அடிக்கடி மாற்றிக் கொண்டே இருக்க வேண்டுமாம். இப்போது நைலான் வார்கள் வந்துவிட்டாலும், செலவு ஒன்றும் மிச்சமாகவில்லை என்கிறார்கள்.

"இத்தனை பராமரிப்புச் செலவுகளையும் செய்து கொண்டு எங்கள் குடும்பத்தையும் கவனித்துக் கொள்ள வேண்டிய நிலைமையில் இருக்கும் எங்களுக்கு ஒரு கச்சேரிக்கு ஆயிரம் ரூபாய் கூட கிடைக்காவிட்டால் எப்படி?" என்று இவர்கள் பொருமுவதில் என்ன தவறு?


''எங்கள் நிலைதான் இப்படி என்றால் வளரும் நிலையில் இருக்கும் கலைஞர்களைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்; ஒரு கச்சேரிக்கு நூறு ரூபாய் கூடக் கிடைக்காது; போக்குவரத்துச் செலவைக் கூட அவர்களே பார்த்துக் கொள்ள வேண்டும்... இந்த லட்சணத்தில் மிருதங்கம் வாசிப்பதை முழு நேரத் தொழிலாக எடுத்துக் கொள்ள இவர்களுக்கு எப்படி ஊக்கம் வரும்?" என்று கேட்கிறார் ஸ்கந்த பிரசாத்.

"இந்தக் கஷ்டங்கள் தெரிந்துதான் இத்தொழிலை மேற்கொள்கிறோம். எல்லாம் மறக்க வைக்கும் மருந்து என்று ஒன்று இருக்குமானால் அது ரசிகர்களிடமிருந்து கிடைக்கும் பாராட்டும் கைதட்டலும்தான்!" என்கிறார் மனோஜ் சிவா நெகிழ்ச்சியுடன்.

"திருவாளர் மிருதங்கம் அவர்களே நான் உமது கட்சி!"- தேடிக் கொண்டு போய் சொன்னேன் மிருதங்கம் அண்ணாச்சியிடம். 'திமிகிட திமிகிட' என்று அவர் திரும்பவும் ஆரம்பிக்க எடுத்தேன் ஓட்டம்! 'சாதம் போடு' என்று அவர் கேட்டால் என் பாடு திண்டாட்டமாகி விடுமே!

— டி.என். சித்ரா, கே.ஸி.

படங்கள்: **ஸ்ரீஹரி**



''என்னது... நாதஸ்வர வித்வான் பாதியிலேயே கச்சேரியை நிறுத்திட்டார்!''

''அவருக்கு பீப்பி அதிகமாயிட்டுதாம்!''

— புளியரை கணேசன்

அலை ஒடுங்கும் கடல்



நடு வானில் பொட்டிட்டாற் போலிருந்தது நிலா. கண்டங்கள் தாண்டி, எங்கோ ஒலிப்பது போலக் கேட்டது கடலின் சப்தம். ஸ்தூல உருவங்களை விழுங்கி நிறைந்திருந்த இருளில் இறங்கி, வீதியில் நடக்க ஆரம்பித்தார் அப்புசாமி. மௌனத்தின் அதிதேவதை வெளியெங்கும் புன்னகைத்துக் கொண்டிருந்தாள். தான் நடக்கும் சப்தமே கூடத் தன்னை அச்சமூட்டப் போதுமானதென்று அவர் நினைத்தார்.

இந்தக் கிழவி ஏன் இப்படி இருக்கிறாள்? மூவிரண்டு நூற்றாண்டுகளுக்குமுன் பதியனிடப்பட்டதொரு செடியைப் பிடுங்கி வந்து இன்று நட்டாற்போல இது என்ன பிறவி?

"அத்தை, நான் உன்னை நம்பலைன்னு ஆதங்கப்படாதே. நீ மனுஷியா இருக்கற வரைக்கும் உன்னை நம்பறதிலோ, பொருட்படுத்தறதிலோ எனக்கொன்னும் பிரச்னை கிடையாது. ஆனா நீ ஏன் திமர் திமர்னு அமானுஷ்ய எல்லைக்குப் போயிடறே. எனக்குத் தெரிஞ்ச பிரத்யட்ச தேவதைன்னா பணம் மட்டுந்தான். அதைத் துதிக்கணும்னு சொல்லு. கொஞ்சணும்னு சொல்லு. தூரத்திண்டு தலைகீழா வேணா நடந்து போகச் சொல்லு; செய்யறேன். வாய்க்கு ருசியா மூணுவேளை சாப்பிட்டுண்டு இருந்திருந்தோம்னா, நீ இப்படிப் பைத்தியம் மாதிரி கனவுல சூர்ப்பணகை வந்தா; நெனவுல இந்திரஜித் வந்தான்னு புலம்பிண்டிருக்க மாட்டே. என்ன நான்சொல்றது?" என்று ஒருமுறை கேட்டிருக்கிறார் அப்புசாமி.

நீலுப்பாட்டி அதற்குப் பதிலேதும் சொல்லவில்லை. ஆனால் பிறகு ஒருபோதும் தன் மனத்தில் உதிக்கும் சூட்சும சங்கேதங்களை அவரிடம் வெளிப்படுத்தியதேயில்லை.

"பணம்தான் பகவான்னுட்டான் உங்கப்பன். இந்த ஒரு சொல் பாவத்துக்கே இன்னும் எத்தனை வயித்தைக் கிழிச்சிண்டு, இரண்யாட்சனா பொறக்கப் போறானோ தெரியலை. நீங்களானா சமர்த்தா நடந்துக்கணும்னு, அதுக்கும் நானே வேண்டிக்கறேன்" என்று உமாவையும் அகிலாவையும் உட்காரவைத்துச் சாதம் உருட்டிப் போடும் வேளையில் சற்று உரக்கவே சொன்னாள்.


சமையல் உள்ளிலிருந்து எட்டிப்பார்த்து அப்போது சிரித்த அப்புசாமியின் மனைவி, "கல்லும் மண்ணுங்கூடக் கடவுள்தாங்கறா: அவருக்குக் காசுதான் கடவுளா இருந்துட்டுப் போகட்டுமே அத்தே! தேடியும் கிடைக்காத வஸ்துதான் சுவாமின்னா, அதுவும் அப்படித்தானே இருக்கு?" என்று சொன்னதை வாசல் திண்ணையிலிருந்து ரசித்தார் அப்புசாமி.

"பாரு, பொழியறா உங்கம்மா. இந்த மண்ணுல பொறக்கற ஆம்பளைகள் எல்லாரும் ஒரே மாதிரிதான் காசைத் துரத்தறான்னா, வாய்க்கற பெண்டாட்டிகளும் இப்படித்தான் இருக்கு. கலி, கலி!" என்று மேலும் புலம்பிவிட்டு அடங்கிப் போனாள் நீலுப்பாட்டி.

தமக்குச் சற்றும் புரியாத, சம்பந்தமில்லாத ஏதோ ஒன்றைக் குறித்துப் பாட்டி அலுத்துக் கொள்வதாகத்தான் குழந்தைகள் நினைத்தன.

"அத்தைப் பாட்டிக்கு அப்பாவைக் கண்டாலே பிடிக்கறதில்லம்மா" என்று

20



அகிலா சொல்லிக் கொண்டிருந்ததைத் தாம் புன்னகையுடன் பின்புறமிருந்து கேட்ட காட்சி நினைவுக்கு வந்தது அப்புசாமிக்கு.

அத்தைக்குத் தன்னை எப்படிப் பிடிக்காமல் போகும்? தன்பாலுள்ள அன்பு மிகையாலன்றோ அவள் புலம்புகிறாள்? அவள் போதனைகளைக் கருதாமலிருந்தாலும் அவளையே விலக்கத் தோன்றியதில்லை இதுகாறும். குலமுன்னோர் தம் அந்திமக் காலத்தில் விட்டுச் சென்ற ஒரு ஞாபகச் சின்னமாகத்தான் அவளை எண்ண வேண்டியிருக்கிறது. ஒரு பேசும் பொம்மை. அப்படிகூட இல்லை. புலம்பும் பொம்மை.

ஆனால் இன்று நடந்தது வேறு. இதுவரை இல்லாதது. தான் இளகியிருந்த தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டு, தன்னையுமவள் பயப்பிராந்திக்கு உட்படுத்தி விட முடிவு செய்துவிட்டாளா? அப்படிச் செய்யக் கூடியவளா அவள்? என்ன பலனுண்டு அதனால் அவருக்கு? 'கம்மாகிட கிழவி' என்று ஒரு சப்தம் போட்டிருந்தால் ஒடுங்கி உருக்குலைந்திருப்பாள். ஆனால், தன்னால் ஏன் அது முடியவில்லை இன்று?

அவள் குரலின் நடுக்க இடைவெளிகளில் சத்தியத்தின் சாயை படர்ந்திருந்ததை முதல் முதலாகத் தன்னால் உணர முடிந்ததுதான் காரணம் என்று தோன்றியது அவருக்கு.

பழகிய பாதையில் கால்கள் கொண்டு சேர்த்த அக்னி தீர்த்தக் கரையின் மூன்றாம் படிக்கட்டில் குத்திட்டு அமர்ந்து கொண்டார். சாலையின் ஓரமெங்கும் கோணிச்சுருளுக்குள் உருண்டிருந்த பிச்சைக்காரர்களை ஒட்டி, கரிய நாயொன்று நடந்து போகக் கண்டார். பின்புறம் காலடியில் உறங்கும் கடலின் சுவாசமே போல் ததும்பின அலைகள்.

மணி இரண்டிருக்கும் என்று தோன்றியது. நட்சத்திரங்கள் சிதறிய வானில் விமானமொன்று பறந்து கடந்தது. அவ்வளவுதான். மீண்டும் ஓங்காரமாக உடுக்கையொலியுடன் மனத்தில் கேட்கத் தொடங்கிவிட்டது நீலுப்பாட்டியின் குரல்.

"**வெ**ளிச்சம்னா, அப்படியொரு வெளிச்சத்தை நான் பார்த்ததில்லேடா அப்புச்சா. கண்ணு பொட்டையாயிடுத்து. அப்பேர்ப்பட்ட பிரகாசம்! லட்சம் சூரியன்கள் சேர்ந்துண்டு விசறமாதிரியொரு பிரகாசம்! சரி, இன்னிக்குப் பகவான் தரிசனம் குடுக்க முடிவு பண்ணிப்பிட்டார்னு ஒரு பக்கம் தோணறது. இன்னொரு பக்கம், என்னமோ அசம்பாவிதத்துக்குத் தான் யாரோ என்னைக் கட்டி இழுத்துண்டு போய்க் காண்பிக்கப் போறான்னு தோணறது. பறக்கறனா, மிதக்கறனான்னு புரியலை. ஆனா ஜிவ்வுனு போயிண்டே இருக்கேன். கோடி மைல் தூரம் போயிருப்பேன். சட்டுனு வெளிச்சம் குறைஞ்சது. கண்ணைக் கசக்கிண்டு பார்த்தா, நம்ம தெக்கு வீதிக்குத்தான் வந்து சேர்ந்திருக்கேன்! கடவுளே, அப்ப நான் மின்ன எங்க இருந்தேன்னு ஒரே கலவரமாயிடுத்து. பரபரன்னு நம்மாத்துக்கு ஓடிவரேன்.

"பார்த்தா, முன் வாசல்

பா. ராகவன்

இடிஞ்சிருக்கு. திண்ணைல தீப்பத்தி எரியறது. கால்வெக்கற இடமெல்லாம் பத்திண்டு எரியறது.

“அப்புச்சா, அப்புச்சான்னு கத்தறேன். பதில் தர மாட்டியோ நீ கடங்காரன்? நாலா பக்கமும் திகுதிகுன்னு பத்திண்டு எரிய, நடுல மாட்டிண்டுட்டேன். உத்தரமானா உடைஞ்சு விழறது. பச்சை மரம் எரியற வாசனை மூக்கைத் துரத்தறது.

“நான் நடக்க, நடக்க, வீடு விரிஞ்சுண்டே போறது. அப்பாடி! ஆயிரம் மைல் நீள வீடு! எப்படிடா தேடப்போறோம்னு மனசு நொறுங்கிப் போய் ஒன்னு அழறேன். இத்தனை களேபரத்துலேயும் உமா ஞாபகம் வரலே. பார்த்துக்கோ.

“கால்ல ஒரு எமவெறி வந்து பாய்ஞ்சு பாய்ஞ்சு தேடறேன்.

“பகவானேன்னு அலறி விழப்போன போதுதான் அதை தூரத்துல பார்த்தேன். கோடீல இன்னும் எரிய ஆரம்பிக்காம இருந்த பிரதேசத்துல சட்டுனு ஒரு உருவம். இருட்டுல நடந்து வரா மாதிரி. ‘அப்புச்சா’ன்னு தொண்டை கிழியக் கத்தறேன். அவ்ளோதான். என் வாய்லேருந்து ஒரு பொறி பறந்து போய் அதுமேல விழுந்து பக்குனு பத்திண்டுடுத்து...

“ஐயோ, ஐயோன்னு கதறேன். மேல ஒரு அடி எடுத்து வெக்க முடியாம சுவர் இடிஞ்சி விழறது. சமுத்திரம்தான் அக்னியா மாறி வந்து உன்னை ஆவாஹனம் பண்ணிண்டுடுத்துன்னு உறுதியா படறது. திரும்பத் திரும்பப் போய் மீட்டுட முடியாதான்னு பிரயத்தனப் படறேன். ம்ஹூம். கால் அதுக்கு மேல ஒரடி நகரலேடா அப்புச்சா!”

குலுங்கி அழ ஆரம்பித்தாள் நீலுப் பாட்டி. என்ன தடுத்தும் அவள் அழுகையை நிறுத்த முடியவில்லை. சரி ஓயட்டும் என்று காத்திருந்தார். சில நிமிடங்கள் அழுது தீர்த்து, மூக்கைச் சிந்தினாள்.

“அப்புறம்தான் அந்த தீப்பிடிச்ச வீடு மெள்ள மறைஞ்சு ஒரு கானகம் வந்தது. நம்ம கோதண்டராமர் சந்நிதி தெரிஞ்சது. அவன் கால்ல போய் விழுந்து அழலாம்னு நடக்கறேன். அதுக்குள்ள இந்த நாசமாப் போறவ வந்துட்டா...”

“யாரு?” என்று அப்புசாமி கேட்டார்.

“வேற யாரு? சூர்ப்பனகைதான். கோயிலுக்காடி போறே நீலு! போ, போ. அங்க உன் ராமன் இருக்கற கோலத்தைப் போய்ப் பார்த்து சிரிங்கறா. ‘என்னடி பண்ணிட்டே நாசமத்துப் போறவளே’ன்னு கத்தறேன். அவளானா சிரிக்கறா. ‘என் தவம் முடியற நேரம் வந்தாச்சு. உன் குலம் அழிஞ்சது பார்’ங்கறா. பேய் மாதிரி ஒரு சிரிப்பு. பாரு, பாருன்னு அவளோட அறுபட்ட மூக்கை எடுத்து நீட்டறா. ‘உன் வம்சம் முழுக்கப் பத்தி எரியற நெருப்புல தான் இந்த மாமிசத்தை வீசுவே’ங்கறா...”

இதைச் சொல்லி முடித்த பிறகுதான் ஊரை விட்டுப் போய்விடலாமென்று புலம்பத் தொடங்கினாள் நீலுப்பாட்டி.

“பாவம் மிகுந்து போச்சுடா அப்புச்சா. அதுதான் நெருப்பு. பொசுக்கிடற வேளை வந்தாச்சுன்னு உள்ளுக்குள்ள ஒரு குரல் கேட்கறது. எங்க போனாலும் ஒரு நாள் சாகத்தான் போறோம். அதுக்குச் சொல்லலே நான். ஆனா இனிமேலும் இங்க இருந்தமானா, அஸ்தியைக் கரைக்கறதுக்குக் கூட ஒரு ஆள் அகப்படமாட்டான்...”

நாலுங்கு மணி பால் வண்டி, தமிழ் நாடு ஒட்டலை நோக்கிச் சப்தமிட்டுக் கொண்டே செல்லவும் சுய நினைவு கொண்டவராகப் பரபரவென்று எழுந்தார் அப்புசாமி.

தாம் என்ன செய்து விட்டோம் என்கிற குற்ற உணர்வு மிகுந்தது. வீட்டில் கிழவியைத் தனியாக விட்டுவிட்டு இதென்ன நள்ளிரவில் கடற்கரைக்கு வந்து சீராட்டம்!

வேகவேகமாக வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தார். கடைகள் மூடியிருந்த சந்நிதித் தெரு, பார்க்க விகாரமாகவும் அந்நியமாகவும் தெரிந்தது அவருக்கு. உலகம் உறங்கும் பொழுது புலப்படுவதுதான் உண்மைத் தோற்றமாயிருக்க முடியும் என்று தோன்றிய

“நான் நடிச்ச படத்தைப் பார்த்துட்டு எல்லோரும் வாயைப் பொளக்கிறாங்களாமே?”

“பின்னே... வாயைப் பொளக்காம கொட்டாவி விட முடியாதே!”

– தஞ்சை தாமு





"நடிகை நளினாஸ்ரீக்கு மார்க்கெட் இல்லேன்னு எதிர்காலத்துல யாரும் சொல்ல முடியாதபடி செஞ்சுட்டா!"

"அதெப்படி?"

" 'நளினா சூப்பர் மார்க்கெட்'ன்ற பேர்ல பெரிய கடை ஆரம்பிச்சுட்டா!"

– லலிதா செல்லப்பா



''என் உடம்புல ஏதோ கோளாறு இருக்கு டாக்டர்...''

''எதை வச்சு சொல்றீங்க?''

''இப்பவெல்லாம் புடைவை செலக்ட் பண்ண பத்து நிமிஷம் செலவழிச்சாலே ரொம்ப டயர்டா இருக்கு!''

– அம்பை தேவா

மறுவிநாடியே, 'அப்போது நீலுக் கிழவியின் கனவுகள்?' என்றும் தோன்ற, தம்மையறியாமல் உள்ளுக்குள் அச்சம் மிகுவதாக உணர்ந்தார்.

ஒரு புதையலாகக் கிடைத்திருப்பவளைப் புரிந்து கொள்ளாமல் இத்தனை காலம் உதாசீனப்படுத்தியது பெரும் பிழையோ என்று தோன்றியது.

இந்த உமா ஏன் திடுதிப்பென்று அகிலாவுடன் கிளம்பிப் போனாள்? என்ன திட்டத்தை ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறாள்? அவளை ஒரு குழந்தை என்றல்லவா எண்ணி வந்திருக்கிறோம், இது காறும்!

கண்ணுக்குத் தெரியாத கணங்களில் மொட்டுகள் மலர்ந்து விடுகின்றன. அந்தக் காட்சியைக் கண்டதுண்டா யாரும் இது வரை? தினமும் கருமைக்கும் வெண்மைக்குமாக மாறிக் கொண்டுதானிருக்கிறது வானம். ஒளிந்திருந்த நிறம் பூசும் தேவதையை யார் அறிவார்?

மானுட வாழ்விலும் மனத்திலும் நன்மாற்றமெனும் கனை பெருக்கெடுக்கச் செய்யும் தேவனே, உன்னைத் துதிக்கிறோம். ஒளியாகவும் இருளாகவும் மாறியபடி, உன் தன்மையை எங்களுக்கு நீ அடையாளம் காட்டுகிறாய். நீ சத்புருஷன். நீ விசை. நீ அற்புதங்களின் திறவுகோலைக் கரத்தில் வைத்திருப்பவன். உன் பராக்கிரமத்தின் ஒரு அணுவளவு எம்மை நல்வழிப்படுத்துவதற்கெனச் செலவிடப்படுகிறது என்பதை உணர்ந்திருக்கிறோம். உன் கருணையின் கிரணங்கள் நீக்கமற எம்மேல் படருவதாக. ஓம்.ஓம்.

மனம் உணர்ந்த வரிகளின் பொருளில் இளகிக் கண்கள் பனித்தன அப்புசாமிக்கு. ஓர் இயந்திரம் போல இவ்வரிகளை உச்சரிக்காத நாளில்லை. ஆனால், ஒரு போதும் தாக்கமாக இறங்கியதில்லை.

இதுகாறும் புருஷார்த்தமென்று தான் தேடிய அனைத்துமே வீண்தானோ என்று இப்போது தோன்றியது. அத்தனை சக்திகளாலும் கைவிடப்பட்ட நிலையை அடைந்துவிட்டாற்போல் உணர, தலை தெறிக்க வீட்டுக்கு ஓடினார்.

இருள் கவிந்தே இருந்தது இன்னும். இலேசாகச் சார்த்திவிட்டு வந்த வாசல் கதவைத் திறந்து, மெள்ள உள்ளே சென்றார்.

கூடத்தில் அதே இடத்தில் நீலு அத்தை சலனமற்றுப் படுத்திருக்கக் கண்டார். சப்தமிடாமல் அருகே சென்று அமர்ந்தவருக்கு, அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு சற்று நேரமாவது ஒரு குழந்தை போலிருக்க வேண்டும் போலிருந்தது.

தன்னிரக்கம் மிகுவதற்கான காரணம் விளங்காமலே, அவர் கண்கள் கலங்கித் ததும்பின.

ஒரு சொட்டு உதிர்ந்திருக்க வேண்டும். அத்தையின் விழிகள் சட்டென்று திறந்து கொண்டன.

"அழறியா?" என்று கேட்டாள்.

அவர் பதில் சொல்லவில்லை.

"தப்பில்லே. அழு. அதுதான் சூழப்போற நெருப்போட உஷ்ணத்தைக் கொஞ்சமானா மட்டுப்படுத்தும்" என்று சொன்னாள்.

(தொடரும்)



அழைக்கிறது அமெரிக்கா!

கல்கி - டயானா வொர்ல்ட் டிராவல் இணைந்து வழங்கும்

குவிஸ் போட்டி—6

இந்த வார குவிஸ் 'உடன் பிறந்த சகோதரிகள்' பற்றி.. விடைகள் சுலபமானவை என்பதால் தேடும் வேலை கூட உங்களுக்கு அனேகமாக இருக்காது. கூப்பனில் எழுதி பீரோவில் மற்ற கூப்பன்களுடன் பூட்டி வையுங்கள். 26 வார இறுதியில் எங்களுக்கு எல்லா கூப்பன்களையும் அனுப்ப வேண்டும்.

மிக அதிகமான கேள்விகளுக்குச் சரியான விடை எழுதும் ஒரு நபருக்கு

அமெரிக்கப் பயணம் பரிசு!

ஐரோப்பா பயணம் – இரண்டாவது பரிசு.

மலேஷியா—சிங்கப்பூர் பயணம் – மூன்றாவது பரிசு.

மூன்று நிலைகளிலும் ஒருவருக்கு மேல் சரியான விடை எழுதியிருப்பின் குலுக்கல் முறையில் பரிசு முடிவாகும். பயணப் பரிசு பெறாதவர்களுக்கு அமரர் கல்கி புத்தகங்கள் உண்டு.

ஆசிரியர் தீர்ப்பே இறுதி!

குவிஸ் கூப்பன்—6

1) ஐ.நா. சபையில் நம் பெருமையை நிலை நாட்டிய, ஜவாஹர்லால் நேருவின் சகோதரி யார்?

2) 'நாட்டியப் பேரொளி' பத்மினியின் தங்கையின் பெயர் என்ன?

3) 'பொன்னியின் செல்வன்' ஆதித்த கரிகாலனின் பிரபல தங்கை யார்?

4) லட்சமணனால் மூக்கறுபட்ட ராவணனின் தங்கை யார்?

5) திருநாவுக்கரசரை சமண மதத்திலிருந்து மீண்டும் சைவ மதத்துக்கு மீட்கப் பெருமுயற்சிகள் எடுத்துக் கொண்ட அவரது சகோதரியின் பெயர் என்ன?

6) 'பாசமலர்' படத்தில் சிவாஜி கணேசனின் தங்கையாக நடித்தது யார்?

விடைகள்:

1)..

2)..

3)..

4)..

5)..

6)..

நீங்கள் கேட்டவை

பிரபாகரனைப் பிடித்து வருவது சாத்தியமா?

● எஸ்.சந்திரா, திருச்சி - 17

? மர்லின் மன்ரோ முதல் விஜி வரை நடிகைகளின் தற்கொலை தொடர்கதையாகி வருகிறதே? இதற்கு முடிவு என்ன...?

! பணம், புகழ், பெயர் எல்லாமே குறுகிய காலத்துக்குள் கிடைத்தும் எதையோ தேடித் தேடி, அது கிடைக்காத ஏக்கத்தில் இந்த முடிவைத் தேடிக் கொள்கிறார்கள். இந்த வாரம் கருப்பம்புலம் சித்ரவேலு, ஆர்.அப்துல்கலாம் போன்ற நிறைய வாசகர்கள் விஜியைப் பற்றித்தான் புலம்பியிருக்கிறார்கள். இதுபோன்ற நல்ல உள்ளங்களுக்காகவேனும் விஜி போன்றவர்கள் பயனுள்ள விஷயங்களில் மனத்தைச் செலுத்தியிருக்கலாம்.

● 'நகை' தி. மகராசன், கடமலைக்குண்டு.

? படித்த, வேலை இல்லாத இளைஞர்களுக்கு உதவித் தொகை அளிக்க வேண்டும் என்று பார்லிமென்டில் எதிர்க்கட்சிகள் யோசனை தெரிவித்திருப்பது பற்றி...?

! இத்தகைய இளைஞர்களுக்கு வேலை தர வேண்டுமே தவிர உதவித் தொகை அல்ல. அமெரிக்காவில் வேலையில்லா இளைஞர்களுக்கு இரண்டு வேலை வாய்ப்புகள் தரப்படுகின்றன. வேலையை ஏற்காது போனால் உதவித் தொகை நிறுத்தப்படுகிறது. கிடைக்கும் எந்த வேலையையும் செய்யத் தயாராக வேண்டும்; கூடியவரை, தகுதிக் கேற்ற வேலை தர முயற்சி செய்யப்படும் - எல்லாமே அமெரிக்காவில்.



• ஆடிய ஆட்டம்!

● இரா. பார்த்திபன், சேத்துப்பட்டு

? சமீபத்தில் படித்த புத்தகம் எது?

! 'தி பிரின்சஸ்' - சவுதி அரேபியாவில் வாழும் முஸ்லிம் இளவரசியின் கதை. முஸ்லிம் பெண்களின் அனைத்துப் பிரச்னைகளும் அந்தரங்கமாக எழுதப்பட்டுள்ளது. எந்த ஊராக இருந்தாலும் பெண்களின் கண்ணீர் உப்புக் கரிக்கும் என்று தெரிந்து கொண்டேன்.

● ரேவதி சங்கர், சென்னை - 13 *

? ஜப்பானியர்கள் போல் நம்மவர்கள் முன்னேற்றம் காணாதது ஏன்...?

! ரொம்ப சிம்பிள் - அவர்கள் உரிமைகளுக்கு முன்னதாகக் கடமைகளை வைக்கிறார்கள். நாம் கடமைகளுக்கு முன்னதாக உரிமைகளை வைக்கிறோம்.

● கே.கே. வெங்கடேசன், வேலூர் - 4

? கிரிக்கெட் ஊழல் புகழ் அசாருதீன், அஜய் சர்மா, ஜடேஜா, மனோஜ் பிரபாகர் இவர்களுக்குத் தண்டனை வழங்கியவுடன் அரசு இவர்களுடைய அசையும் / அசையா சொத்துக்களைப் பறிமுதல் செய்யுமா?

! மாட்ச் ஃபிக்ஸிங்கைப் பொறுத்தமட்டில் அதை நிரூபிக்க முடியாததாகையால் வழக்கு தொடர இயலாது என்று சட்ட அமைச்சகம் கூறிவிட்டது. ஆனால், கணக்கு காட்டாமல் சொத்து குவித்ததாக வருமானவரி இலாகா வழக்கு தொடர்ந்து சொத்துக்களைக் கையகப்படுத்த முடியும் - இதைச் செய்ய வேண்டும்.



• தொடரட்டும்...

● சீ. பூங்கோதை, சென்னை - 78 □

? லாட்டரிச் சீட்டுக்

□ ரூ. 50 பரிசு பெறுபவர் :
சீ. பூங்கோதை
101/3, சி.பி. டபிள்யூ.டி.
குடியிருப்பு, கே.கே. நகர்,
சென்னை - 600 078.

* ரூ.25 பரிசு பெறுபவர் :
ரேவதி சங்கர்,
10/53, ஆதம்சாகிப் தெரு,
இராயபுரம்,
சென்னை - 600 013.



• ரசிக—

குலுக்கலை நேரடி ஒளி பரப்புச் செய்யப் போகிற தாமே சன் தொலைக் காட்சி..? உங்கள் கருத்து...?

! லாட்டரி என்பது இருக் கும்வரை குலுக்கல் ஒழுங்காக நடப்பதை உறுதி செய்ய வேண்டும். இதற்கு நேரடி ஒளி பரப்பு உதவும். நமது எதிர்ப்பு லாட்டரியே கூடாது என்ப தாகத்தான் இருக்க வேண் டும்; ஒளிபரப்பு கூடாது என்ப தல்ல.

● ஆர். அப்துல் சலாம், திருச்சி - 20


? வழக்குகள் தேங்குவதைத் தடுக்க அனைத்து கோர்ட் களிலும் வாரம் ஆறுநாள் வேலை முறையைக் கொண்டுவர சென்னை உயர்நீதி மன்றம் முடிவு செய்திருப்பதுபற்றி...?

! வாரம் எட்டு நாள் என்ற அளவுக்குப் பணி நேரத்தை அதிகப்படுத்தினாலும் தீர்க்க முடியாத அளவுக்கு வழக்கு கள் தேங்கியுள்ளன. வேண்டு மென்றே காலதாமதம் செய்யும் போக்குக்கு இடம் தராமல் வழக்குகளைத் துரித மாக நடத்த முடியுமானால் தான் முன்னேற்றம் ஏற்படும். இதற்கு உயர்நீதிமன்ற உச்சநீதி மன்ற நீதிபதிகள்தான் வழி காட்ட வேண்டும்.

● எம்.டி. ரவிகாந்த், காஞ்சிபுரம்

? மத்திய அமைச்சர் முரசொலி மாறன் பூரண குண மடைந்து வீடு திரும்பியுள்ளது குறித்து...?

! இந்தியப் பொருளாதாரமும் பூரண குணமடையும் வகையில் அவருடைய தொழில் துறை அமைச் சகப்பணி தொடரட்டும் என்று வாழ்த்து வோம்.



• ஆராதனை!

● எம். சிவகுருநாதன், சென்னை - 42

? 'பாபர் மசூதி இடிக்கப்பட்டது கிரிமினல் நடவடிக்கை என்று கூற முடியாது. இதற்காக மத்திய அமைச் சர்கள் அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, உமாபாரதி ஆகியோர் பதவி விலகத் தேவையில்லை' என்று காஞ்சி ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கருத்து தெரிவித்துள்ளாரே?

! ஜெயேந்திரர் ஆன்மிகம் பேசினால் ஏற்கலாம்; அரசியல் பேசினால் எதிர்க்கலாம். தப்பில்லை.



• ஆன்மிகம் தாண்டி

● பி. மீனா கணபதி, நெல்லை டவுன்

? ராஜீவ் காந்தி கொலை வழக்குக்காக பிரபாகரனை இந்தியா கொண்டு வருவது சாத்தி யமா? இலங்கை அரசாலேயே பிரபாகரனைப் பிடிக்க முடியாவில்லையே.

! இலங்கை அரசு அவருடன் பேச்சுவார்த்தை நடத்தி சமாதான முயற்சிக்குக் கூட தயாராகலாம். ஆனால் இந்தியாவைப் பொறுத்தமட்டில் பிரபாகரன் குற்றவாளியே. கொள்கை அளவில் அந்நிலை மாறாது; மாறவும் கூடாது. அவரைப் பிடித்துக்கொண்டு வர முடியுமா; வழக்கு நடத்தமுடியுமா என்பது வேறு விஷயம்.

● பா. பிரகாஷ், மதுரை - 16.

? கடந்த ஆட்சியைவிட தி.மு.க ஆட்சியில் விலைகள் குறைவு என்று பட்டியலிட்ட முதல்வர் அவ்வாறு கூறிய இரு தினங் களுக்குள்ளேயே மூன்று சதவிகித அகவிலைப்படி உயர்வை அரசு ஊழியர்களுக்கு அறிவித்திருப்பது முரண்பாடு இல் லையா?

! ஊழியர்களுக்கான அகவிலைப்படி, cost of living index அடிப்படையில் அமைந்தது. இது மக்கள் உபயோகிக்கும் பலதரப்பட்ட பொருள்களின் விலைகளைக் கணக்கில் கொண்டு நிர்ணயிக்கப்படுவது. மோட்டார், கார் முதல் சைக்கிள், வாஷிங் மெஷின் ஃப்ரிஜ் வரை பலவற்றின் விலைகள் உள்ளடக்கம். ஆனால் தமிழக முதல்வர் விலை குறைந்துள்ள தாகக் கூறுவது காய்கறி, பருப்பு போன்றவற்றைக் குறித்து. உதாரணமாக, ஒரு மாதம் முன் கிலோ முப்பது ரூபாய் விற்ற தக்காளி, இப்போது கிலோ பத்து ரூபாய்!

• அன்று முதல்...



● கே. இளங்கோ, கல்யாண ஓடை

? ரஜினியும் கமலும் இன்னும் எத்தனை நாட்களுக்கு டூயட் பாடிக் கொண்டிருப்பார்கள்?

! 'தலைவரு படம் தீவுளிக்கு ரிலீஸ் ஆவலை' என்று தீக்குளிக்கும் 'ரசிகர்கள்' இருக்கும்வரை.

- தராசு

ஸ்ரீ ராமபக்த ஹனுமான்

20

கல்யாணபுரம் ஆராவமுதன்

பயம் தீர்ப்பவர்!

அரக்கோணத்திற்கு அருகேயுள்ள (சுமார் 20 கி.மீ. தொலைவில்) சோளிங்கபுரத்தில் உறைகின்ற ஹனுமாரைப் பற்றி அறியாதார் இருக்க முடியாது. 'கடிகாசலம்' என்று பெயர் பெற்ற இத் திருத்தலத்தில், அருகருகேயுள்ள இரு குன்றுகள் மீது முறையே யோகநரசிம்ம ஸ்வாமியையும் யோக ஆஞ்சநேயரையும் தரிசிக்கலாம். சதுர்புஜம், சங்க சக்ரம் என ஸ்ரீமந்நாராயணனுக்குரிய அம்சங்களுடன் எழுந்தருளியிருக்கும் இந்த ஹனுமாருக்கு மஹாவிஷ்ணு சங்கு சக்ரங்களை அருளி இந்த்ரத்யும்னன் என்ற அரசனுக்கு உதவும் பொருட்டு ஹனுமாரை அனுப்பியதாக வரலாறு.

குறிப்பாக கார்த்திகை மாதத்தில் இந்தத் தலத்துக்கு பக்தர்கள் கூட்டம் கூட்டமாக வருகிறார்கள். மனோ பயங்களை இங்கு உறையும் ஹனுமார் தீர்த்து வைக்கிறார்.

தான் அனுப்பிய அரக்கர்களையெல்லாம் ஹனுமான் கொன்று குவித்து விட்டான் என்று அறிந்ததும் கோபத்தில் துடித்தான் ராவணன். மகன் இந்திரஜித்தை அழைத்தான்.

"மைந்தா! நீ பிரும்மாவை ஆராதனை செய்து திவ்ய அஸ்திரங்களைப் பெற்றவன். மூவுலகத்தாரும் உன்னுடன் யுத்தம் செய்து தோற்று, அஞ்சி ஓடிய வரலாறு உண்டு. வீர மகனே! நம்மைச் சேர்ந்தவர்கள் பலரும் இந்தக் குரங்கிடம் பலியாகியிருக்கிறார்கள். கிங்கரர்கள் மாண்டு போயிருக்கிறார்கள்; ராக்ஷஸர்களில் சிறந்த ஜம்புமாலியும் செத்தான்; சேனாதிபதிகள் அனைவரும் இறந்து விட்டனர்; உன் அருமைத் தம்பி அக்ஷகுமாரன் மாண்டு போனான். எல்லாவற்றுக்கும் காரணமான அந்த ஹனுமானை நீதான் போய் வென்று வரவேண்டும்'' என்று இந்திரஜித்தை அனுப்பி வைத்தான்.

இந்திரஜித் ரதத்தில் ஏறி ஹனுமான் இருக்கும் இடத்துக்கு விரைந்து போனான்.

தூரத்திலிருந்தே அவன் வருவதைப் பார்த்து விட்டான் ஹனுமான். உடனே, தன் உடலைப் பெரிதாக்கிக் கொண்டு ஒரு சிம்ஹநாதம் செய்தான்!

எட்டு திக்கும் இடி இடிப்பதுபோன்ற பயங்கரமான சப்தத்தை இரு வீரர்களும் எழுப்ப, இருவருக்குமிடையே யுத்தம் ஆரம்பமாயிற்று.

ஒவ்வொரு பாணமாகத் தொடுத்தான் இந்திரஜித். ஒன்று கூட ஹனுமானின் உடலைத் தீண்டவில்லை. யோசித்துப் பார்த்தான். 'பிரும்மாஸ்திரம் மட்டுமே இந்தக் குரங்கை வீழ்த்த உதவும்' என்று முடிவு செய்து பிரும்மாஸ்திரத்தைப் பிரயோகித்தான்!

இந்திரஜித் எய்திய பிரும்மாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டான் ஹனுமான்!

ஆமாம்! 'கட்டுப்பட்டான்' என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்று கேட்பீர்கள். வால்மீகி என்ன சொல்கிறார் பாருங்கள் :

பிரும்மாஸ்திரம் பிரயோகிக்கப்பட்டதுமே அது தன்னைக் கட்டுப்படுத்துகிறது என்பதை உணர்ந்து பிரும்ம தேவனை தியானம் செய்ய ஆரம்பித்து விட்டான் ஆஞ்சனேயன். அதே சமயம் அவனுக்கு பால்யத்தில் நடந்த சம்பவமும் நினைவுக்கு வந்



தது.

குழந்தை ஹனுமான் சூரியனைப் பழம் என்று நினைத்துப் பறிக்கப் போக, பிரும்மாஸ்திரம் கொண்டு அவன் தாக்கப்பட்டதும், அதன் பின்னர் தேவர்கள் அனைவரும் வரம் அளித்ததும், பிரும்மா தன் அஸ்திரம் ஒரு முஹுர்த்தம் கடந்த பின் செயலிழந்து விடும் என்று சொன்னதும்... எல்லாமாக அவனுக்கு நினைவுக்கு வருகின்றன.

ஆதலால் இந்திரஜித்தை எதிர்க்காமல், அவன் எய்திய பிரும்மாஸ்திரத்தால் கட்டுண்டு இருக்கிறான். அதுவரை ஹனுமானின் வீரத்தைக் கண்டு நடுங்கி அவனை நெருங்கவே அஞ்சிய அரக்கர்கள் பலர், அவன் பிரும்மாஸ்திரத்தினால் கட்டுண்டதும் துணிவு கொண்டார்கள். வேறு பல கயிறுகளைக் கொண்டு வந்து ஆஞ்சநேயனை அவர்கள் கட்டிப் போட்டார்கள்!

உண்மையில், பிரும்மாஸ்திரத்தால் கட்டுண்ட ஒருவர் பேரில் வேறு கட்டுகள் போடப்பட்டால் அவர் மீதிருந்து பிரும்மாஸ்திரம் விலகி விடும். அவ்வாறு விலகி, தாம் விடுபட்டு விடுவோம் என்பதும் ஹனுமானுக்குப் புரிந்து போய்விட்டது. கட்டுண்டவனாக; பேசாமல் இந்திரஜித்தைப் பின்தொடர்ந்து ராவணன் சபைக்குப் போனான்.

ராவணனின் சபையில் கொண்டு நிறுத்தப்பட்ட ஹனுமான் அந்த மாமன்னன் கம்பீரமாக உட்கார்ந்திருப்பதைப் பார்க்கிறான். ராவணனை உறங்கும்போது அந்தப்புரத்திலும் பின்னர் அசோகவனத்திலும் பார்த்த வன்தான் ஹனுமான். ஆனால் இப்போது தான் தர்பாரில் சிம்மாசனத்தில் அவன் இருக்கக் காண்கிறான். அவனது செல்வச் செழிப்பையும் பெருமைகளையும் பார்க்கிறான். பார்த்தவன் மனத்திலே எண்ணிக் கொண்டானாம்:

'ஆஹா! எத்தகைய உருவம்! என்ன தைரியம்! என்ன பலம்! என்ன காந்தி இந்த ராக்ஷஸ ராஜனிடத்திலே! சீதையை

அபகரித்த அதர்மத்தை மட்டும் செய்யாமல் இருந்திருந்தால் இந்த மன்னன் தேவேந்திரனுக்கு நிகராக இருந்திருப்பானே!'

ராமாயணத்தின் இதே கட்டத்தில், பிற கவிகள் காணாத ஒரு இன்பத்தை அருணாசலக் கவிராயர் காண்கிறார். 'அனுமன் பிள்ளைத்தமிழ்' என்ற தமது நூலில் இந்தக் கற்பனையை விவரிக்கிறார். 'தமக்கு ஆசனம் அளிக்காத ராவணன் முன் தனது வாலினால் ஆசனம் அமைத்து, ராவணனைக் காட்டிலும் உயர்ந்து அமர்ந்தான். அவனது வாலாசனம் மேலாசனமாயிற்று' என்கிறார் கவிராயர் :

இவ்வகையில் விடும் படைஎலாம்
கோலாகலம் பெறக் கொன்று களம்
எங்கும்
அரி கூத்தாட, நரி பாடக்
குருதி ஆறு ஓட, இந்திர விரோதியும்
உளம்
குலைய ராவணனிடம் போய்
மேலாசனம் போல வாலாசனம்
கோலி மேவினாய்

வந்து இவ்வாறு அமர்ந்த ஹனுமானைப் பார்த்து, ராவணனின் முதன் மந்திரியான பிரஹஸ்தன் கேட்கிறான் :

''யாரப்பா நீ? விஷ்ணுவின் தூதனா? யமனின் தூதனா? தேவனா? யக்ஷனா? எங்கிருந்து வந்திருக்கிறாய்...?''

ஹனுமான் நிதானமாக, தெளிவாக பதில் சொல்கிறான் :

''நீங்கள் இப்போது பட்டியலிட்டீர்களே, அவர்களுள் யாருடைய தூதனும் அல்ல நான்! ஸ்ரீ ராமபிரானின் தூதன். வானரமான என் மூலம் சுக்ரீவன் உங்களுக்குச் செய்தி அனுப்பியுள்ளான் ராவணா! ராம பத்னியான சீதையைக் களவாடி வந்து உன் ஊரில் சிறை வைத்தாய். அவளைத் தேடி வந்தவன் நான். உன்னைக் காணவேண்டும் என்பதற்காகவே அசோகவனத்தை அழித்தேன்; நீ இந்திரஜித்தைக் கொண்டு எய்யச் செய்த பிரும்மாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டேன். உன்னைக் காண வேண்டும் என்பதற்காக நான் செய்த காரியம் இது. உன் வீட்டில் கொண்டு வந்து சீதையை வைத்துக் கொண்டிருக்கிறாயே! நீ சொந்தம் கொண்டாட நினைக்கும் அவளே உன் குலத்தை அழிக்க வந்த சர்ப்பமாகி விடுவாள் என்பதை அறிவாயாக - ஆகவே, சீதையை நீ உடனடியாக ராமனிடம் திரும்பக் கொடுத்து விடு. அவ்வாறு கொடுத்தால்தான் நீயும் உன் குலமும் வாழ முடியும்.

எவ்வளவு தெளிவான நல்லுரைகள்!

இவையெல்லாம் வால்மீகி ராமாயண சித்திரிப்பு. இதே கட்டத்தை அருணாசலக் கவிராயர் ராம நாடகத்தில் விவரிக்கும் போது நாடக வசனமாகவே அந்தச் சொற்கள் வருகின்றன :

ஹனுமான் ராவணனிடம் தன்னை எப்படி அறிமுகம் செய்து கொள்கிறான்.

ராமசாமி தூதன் நான் அடா
அடடா ராவணா!
நான் அடா! என்பேர் அனுமன் அடா!

- எத்தனை 'அடா' போடுகிறான் ஹனுமான் ராவணனைப் பார்த்து!

வால்மீகியின் கவிதைக் காட்சி, கவிராயரின் நாடகக் காட்சி என்று இரண்டு ஆயிற்றா...? துளஸிதாஸர் ராமாயணத்தில் ஹனுமான் சித்திர அழகுடன் தீட்டப்படுகிறான். துளஸிதாஸர் எழுதுகிறார் :

ராவணன் ஹனுமானைப் பார்த்துக் கேட்டானாம்...

''ஏ வானரமே! நீ யார்? யார் பலத்தை நம்பி வனத்தை அழித்தாய்? என்னைப் பற்றி நீ கேள்விப்பட்டதே இல்லையா? கொஞ்சமும் பயமில்லாமல் இப்படி இருக்கிறாயே! என்ன குற்றத்துக்காக ராக்ஷஸர்களைக்

ரூ.150க்கு டிஜிடல் சி.டி!

'பாலுமகேந்திரா கதை நேரம், 'பாரதி' திரைப்படம் போன்ற தரமான பொழுது போக்குகளைத் தயாரித்த மீடியா ட்ரீம்ஸ் நிறுவனம், இப்போது ஆடியோ உலகிலும் அடியெடுத்து வைத்துள்ளது. கிரேட் மாஸ்டர்ஸ், கச்சேரி வரிசை, வாய்ப்பாட்டு, இன்ஸ்ட்ருமென்டல், பக்திப்பாடல்கள் என சுமார் ஐம்பது கேஸட் மற்றும் சி.டி.களை வரிசையாய் வழங்கிக் கொண்டிருக்கிறது.



இதில் ஆச்சரியம் என்னவெனில் டிஜிடல் முறையில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட சி.டி. ஒன்றின் விலை வெறும் நூற்றைம்பது ரூபாய்தான். ''இன்று இருநூற்றைம்பது, முன்னூறு என்று சி.டிகள் விலை விற்கிற போது, உங்களால் எப்படி இவ்வளவு குறைந்த விலையில் தர முடிகிறது?'' என்று இந்நிறுவனத் தலைவர் வரதராஜனிடம் கேட்டால்,

''எங்களது சகோதர நிறுவனமான பென்ட்டா மீடியாவில் உள்ள லேட்டஸ்ட் தொழில் நுட்பத்தை சகாய விலையில் நாங்கள் பயன்படுத்திக் கொள்ளுகிறோம். அதிக எண்ணிக்கையில் உற்பத்தி செய்தால், விலையைக் குறைக்கலாம் என்ற கொள்கைப் படி, கிடைக்கும் சலுகையை, வாடிக்கையாளர்களுக்கே வழங்கிவிடுகிறோம்'' என்கிறார்.

—எம்.

கொன்றாய்? எதற்கு வந்தாய்..? பயப்படாமல் சொல்!" என்கிறான் ராவணன்.

அடுக்கடுக்கான கேள்விகள்! எல்லா கேள்விகளுமே அகந்தையினால் எழுந்தவை தான். இறுதியில் முத்தாய்ப்பாக 'பயப்படாமல் சொல்!' என்றொரு ஆணை! பயப்படுகிறவனாயிருந்தால் இத்தனை துவம்சம் பண்ணியிருப்பானா ஹனுமான்? அதைக் கூட சிந்திக்காத அளவுக்கு என்ன அஞ்ஞானம் பாருங்கள்!

இதற்கு ஹனுமான் எத்தனை அழகாக பதில் சொல்கிறான் பாருங்கள் :

"ராவணா, கேள்! எவருடைய பலத்தினால் பிரும்மா, விஷ்ணு சிவன் முறையே சிருஷ்டி, பாலனம், ஸம்ஹாரம் என்ற முத்தொழில்களை நிகழ்த்துகிறார்களோ, எவருடைய பலத்தினால் ஆயிரம் முகம் கொண்ட ஆதிசேஷன் பிரும்மாண்டம் முழுவதையும் தலையிலே தாங்குகிறானோ? எவர் தேவர்களைக் காப்பாற்றுகிறாரோ? எவர் அனேக விதமான சரீரம் எடுக்கிறாரோ? எவர் உன் போன்றவர்களுக்குப் பாடம் கற்பிக்கிறாரோ, மகாபலசாலிகளான கரன், தூஷணன், வாலி முதலானோரை எவர் அனாயாசமாக அழித்தாரோ... எவரது மனைவியை நீ கவர்ந்து வந்தாயோ... அந்த ஸ்ரீ ராமனின் தூதன் நான். உன் வல்லமை எல்லாம் எனக்குத் தெரியும். பசி வந்தது; வனத்தில் நுழைந்து பழம் சாப்பிட்டேன். கபி ஸ்வரூபமுள்ளவன் - கபி ஸ்வபாவத்தால் மரத்தை ஒடித்தேன். உனது கிங்கரர்கள் என்னை அடித்தார்கள். என்னை அடித்தவர்களை நானும் அடித்தேன். அதற்காக உன் பிள்ளை என்னைக் கட்டி இழுத்து வந்திருக்கிறான். கட்டுப்பட்டதில் எனக்கு வெட்கமில்லை. ஏனெனில் என் பிரபுவின் பணியில் ஈடுபட்டவன் நான்.

"ராவணா! கை கூப்பிக் கேட்டுக் கொள்கிறேன். கர்வத்தை விட்டுக் கேள் நான் சொல்வதை. பக்தரின் பயத்தைப் போக்கும் என் பிரபுவாகிய ஸ்ரீ ராமனின் நாமத்தை பஜனை செய். காலனும் எவனைக் கண்டு அஞ்சுகிறானோ அந்த ஸ்ரீராமனைப் பகைத்துக் கொள்ளாதே. கருணா ஸிந்துவானவன் என் பிரபு. அவனை நீ போய்ச் சரணடைந்தால், எல்லாவற்றையும் மறந்து அவன் உன்னைக் காப்பாற்றுவான்.

''ராம நாமமின்றிப் பேச்சுக்கே அழகில்லை. எவன் ராமனிடம் பாராமுகமாக இருக்கிறானோ அவனது செல்வமும் வல்லமையும் நில்லாது. ஆயிரம் பிரும்மாவோ விஷ்ணுவோ சங்கரனோ வந்தாலும் ராம துரோகியைக் காப்பாற்ற முடியாது..."

இவ்வாறு உள்ளது உள்ளபடி, துளியும் அஞ்சாமல், ராவணனை நேருக்கு நேர் பார்த்துப் பேசும் துணிவு ஸ்ரீ ராம பக்த ஹனுமானன்றி வேறு யாருக்கு வரும்?

தனக்கு நிகர் எவருமில்லை என்று எண்ணியிருந்த ராவணனுக்கு, ஹனுமான் இப்படிப் பேசக் கேட்டதும் எப்படியிருந்திருக்கும்!

(வளரும்)

அருள்வாக்கு

ரஜோகுண ப்ரதானனான மஹாவீரன் அர்ஜுனனை மெஜாரிட்டியினரான ஸாதாரண ஜனங்களின் 'ரெப்ரஸென்டேடிவ்'- ஆக வைத்தே பகவான் கர்மாவை உபதேசித்தார். பெரிய ஸாதகனாக வைத்தல்ல. கர்மா பண்ணுவது, ஆனாலும் மனஸின் கொதிப்பு முதலான ஸொந்த உணர்ச்சி க்ருத்ரிமங்கள் இல்லாமல் பண்ணுவதுதான் அவனுக்கான வழி என்பதாக உபதேசித்தார்.



ஆனால் வெறும் வரட்டு கர்மாவாயில்லாமல் பக்தி சேர்ந்தால்தான் கர்மயோகத்தைச் செவ்வனே செய்து பூர்த்தி பண்ண முடியுமென்பதால், "சண்டை போடு" என்று முதலில் சொன்னதற்கு அப்புறம் ஒரு qualifying clause சேர்த்து,

"மாம் அநுஸ்மர யுத்ய ச"

என்றார். "வெறுமனே சண்டை போடாதே! என்னை நினைச்சுக்கோ- மாம் அநுஸ்மர! வெளி ஸ்மரணை யுத்தத்தில் இருந்தாலும், அதற்குத் துணையாக உள்ளே இருக்கிற அநுஸ்மரணை என்னிடம் இருக்கட்டும். அப்படி, பக்தியைத் துணை சேர்த்துண்டு சண்டை போடு! அதாவது தேவாஸுர யுத்தத்திலே அஸுர சக்திகளை எதிர்த்து ஸத்கர்ம, ஸத்குணங்களின் படையைக் கொண்டு ஸத்பக்தியின் துணையில் சண்டைபோடு" என்று சொல்லியிருக்கிறார்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

கர்நாடக இசையில்

கலைஞரின் கவிதைகள்!

• தமிழன்பன்

மத்தியில் வாஜ்பாய். மாநிலத்தில் கலைஞர். இரண்டு பேருக்கும் அரசியல் கூட்டணியைத் தவிர, இன்னொரு ஒற்றுமையும் உண்டு. இருவருமே மிகச் சிறந்த கவிஞர்கள். வாஜ்பாயின் கவிதைகளில் சில இசையமைக்கப்பட்டு ஒலி நாடாக்களாகவும் வெளியாகியிருக்கின்றன. கலைஞரின் 'சங்கத் தமிழ்' இசையமைக்கப்பட்டு நாட்டிய நாடகமாக இப்போது நடத்தப்பட்டுவந்தாலும், கலைஞரின் தனிக் கவிதைகள் இதுவரை இசையமைக்கப்பட்டு வெளி வந்ததாகத் தெரியவில்லை.

கலைஞரின் கவிதை வரிகள் கர்நாடக ராகங்களில் இலக்கணத்துக்குள் அடங்கி வருமா, வார்த்தைகளை மாற்றாமல் இசையமைக்கக்கூடிய சாத்தியம் உண்டா?



சென்னையில் டிசம்பர் சங்கீத சீசன். இந்தச் சமயத்தில் கலைஞரின் சில கவிதை வரிகளைத் தேர்ந்தெடுத்துத் தரும்படி ஒரு கவிஞரிடம் கேட்டு வாங்கி, அதை ஒரு இசையமைப்பாளரிடம் காட்டி இதற்கு இசையமைக்க இயலுமா? என்று கேட்டால் எப்படியிருக்கும்?

கவிஞர் ஈரோடு தமிழன்பன் 'கலைஞரின் கவிதைகள்' புத்தகத்தைக் எடுத்துக் கொண்டு புரட்டினார்.

"காலஞ்சென்ற இசை மேதை எம்.பி. சீனிவாசன் பாரதியாரின் வசன கவிதைகளுக்கே இசையமைத்துக் காட்டியவர். அவை அவரது குழுப் பாடல்களில் நிறைய இடம் பெற்றிருக்கின்றன. அதேபோல சென்னைப் பல்கலைக் கழகத்தில் இசைப் பேராசிரியராக இருந்த கே. சுப்பிரமணியம் புதுக் கவிதைகளுக்கு இசையமைத்திருக்கிறார். நான் கலைஞரின் கவிதைகளை ஆழ்ந்து ரசித்துப் படிப்பவன். சில வரிகளைப் படிக்கும்போது 'ஆஹா. இவற்றுக்கு இசையமைத்துக் கேட்டால் நன்றாக இருக்குமே' என்று எனக்குத் தோன்றும் 'அப்படிச் சில வரிகளை மூன்று கவிதைகளிலிருந்து நான் உங்களுக்குக் குறித்துக் கொடுக்கிறேன்' என்று சொல்லி விட்டு அரை மணி நேரத்துக்குள் குறித்துக் கொடுத்தார்.



பிரபல இசையமைப்பாளர் எஸ்.ராஜேஸ்வர ராவோடு கால் நூற்றாண்டு காலம் இணைந்து பணி புரிந்தவரும் (பக்த பிரகலாதா, கடன் வாங்கிக் கல்யாணம், மாதர்குல மாணிக்கம், பிரேம பாசம் போன்ற பலப் பல படங்கள்) அகில இந்திய வானொலியில் இசையமைப்பாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவருமான எல். கிருஷ்ணனிடம், தமிழன்பன் குறித்துக் கொடுத்த 'கலைஞரின் கவிதைகள்' நூலில் பக்கம் 40ல் 'அவர் உணர்வாரோ! யார் அறிவார்?' என்ற தலைப்பிலான கவிதையைக் கொடுத்தோம்.

திட்டித் தீர்க்கின்றார் - என்னைத்
திட்டித் தீர்க்கின்றார் - நான்
நீயுலையில் காய்ச்சியச் சொல் எடுத்து
கட்டிட மாட்டேனா என எதிர்பார்த்துத்
திட்டித் தீர்க்கின்றார்!
பட்டொளி வீசிடும் பதவியில் அமரப்
பலவழி முயன்று - ஒரு வழி கண்டு
திட்டித் தீர்க்கின்றார் - என்னை!
'எப்படித் தாக்குதல்?' இன்னும் பாரீர்!
தப்பிட முடியுமோ - கருணாநிதியால்?' உமது
சொற்படி கேட்பேன் பாதமும் சொறிவேன்!"

கண்ணை மூடிக் கொண்டு சில விநாடிகள் சிந்தித்துவிட்டு பிறகு வரிகளை 'ஹம் செய்த கிருஷ்ணன் 'அடடா! இந்த வரிகள் மோகன ராகத்தில் அமர்க்களமாய்ப் பொருந்திவருகின்றன. சந்தத்திற்கு அருமையாய் அமைந்திருக்கின்றன. வார்த்தைகளைக் கொஞ்சம்கூட மாற்ற வேண்டிய அவசியமே இல்லை



என்று சொல்லிக் கொண்டே குரலெடுத்துப் பாடிக் காட்டினார்.

இரண்டாவதாக பக்கம் 423ல் 'என்ன தேசமடா இது?' என்ன தலைப்பில்.

'என்ன தேசமடா இது?' இங்கு.
எத்தனுக்கு வாழ்வு தரும் மோசமடா!
நீரும் எண்ணெயும் போல் பற்று
பாசமடா! அட,
நீலிக் கண்ணீர் வடித்தே கழுத்தறுக்கும்
தேசமடா!
கூனமெல்லாம் கூர்வாளாய் நினைத்துக்
கொண்டு
மேளங்கொட்டி முரசுதட்டி மெதுக்காக
ஆடுதடா!
ஆளவந்தார் அடிக்கின்றார்
கொள்ளையென்றால்,
தானம் போடும் தாசர் கூட்டம்
பெருத்ததடா.."

என்று கலைஞரின் கவிதைவரிகள் போகின்றன.

"சோகம் கலந்த உணர்வுகளை இப்பாடலில் கலைஞர் அவருக்கே உரித்தான பாங்கில் வெளிப்படுத்தியிருக்கிறார்" என்று சொன்ன கிருஷ்ணன் இரண்டு மூன்று ராகங்களில் முயற்சி செய்து, "அட, சுபபந்துவராளியில் இந்த வரிகள் கச்சிதமாகப் பொருந்துகின்றன." என்றார்.

தமிழன்பன் குறித்துத் தந்த மூன்றாவது கவிதை 429ம் பக்கத்தில் 'பதில் என்ன? பகர்ந்திடுக!' என்ற தலைப்பில்.

பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள்
பைந்தமிழ் நாடு! இதன்
வேருக்குள்ளே வெந்நீர் ஊற்றியதால்
வெந்து குலைந்தது பழம் பண்பாடு!
ஊருக்குள்ளே நச்சு மரம் ஒன்று - அது
உணவுக்குத்தான் பழுத்ததென்று
ஒடித் தின்று உயிர் விட்டவர்
போலே
ஓட்டளித்துக்
கெட்டனரே
நாட்டோர்!"

இந்தப் பாடலைக் கல்யாணி ராகத்தில் பாடிக் காட்டினார் கிருஷ்ணன். "தானத்தை விட சொற்கள் சற்று அதிகமாக இருந்தாலும்கூட அரை அல்லது ஒரு

■ எல்.கிருஷ்ணன்

சர்வர்த்தனத்தை அதிகமாக எடுத்துக் கொண்டு பாடினால் இந்த வரிகள் சரியாக அமைந்து போகின்றன." இந்த மூன்று கவிதைகளின் வரிகளுமே சதுஸ்ர நடையில் ஏக தாளத்தில் அமைவதாகவும் கிருஷ்ணன் தெரிவித்தார்.

பிரதமர் வாஜ்பாயின் சில கவிதைகள் இசையமைப்பதற்காக இப்போது எல்கிருஷ்ணனிடம் தரப்பட்டிருக்கின்றன என்பது கூடுதல் தகவல்.

ராணி மைந்தன்

படம் : **வெங்கடேஷ்**

ஆண் பெண் மலடு நீங்கி குழந்தை பெற முக்கூட்டு மருத்துவம்

மருத்துவத்தில் இன்று எத்தனையோ விஞ்ஞான முன்னேற்றங்கள் இருந்தாலும், குழந்தைச் செல்வம் உண்டாவது என்பது 'இறைவன் கொடுத்த வரம்' போல் ஆகி விட்டது.

''குழந்தைப்பேறு இல்லாத தம்பதியரில், குறைபாடு கணவனிடம் இருந்தாலும் சரி, மனைவியிடம் இருந்தாலும் சரி, அவர்களை இயற்கையாகவே குழந்தைபேற்றுக்குத் தகுதி உள்ளவர்களாக ஆக்கும் – பக்கவிளைவுகள் இல்லாத சிகிச்சை, நாங்கள் கடைப்பிடிக்கும் 'ஹோமியோபதி – சித்தா – ஆயுர்வேதம்' என்ற முக்கூட்டு மருத்துவ முறையாகும்'' என்று கூறுகிறார் 'நவீன வைத்தியாலயா' என்ற பெயரில் திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் பிராமணர் தெருவிலும், சென்னை வடபழனியில் 100 அடி சாலையில் கவுரி சங்கர் திருமண மண்டபம் எதிரிலும் சிகிச்சை நிலையங்கள் நடத்தி வரும் டாக்டர் ஏ. அர்ஜுனா.

''கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலான என் மருத்துவ அனுபவத்தில் ஆயிரக்கணக்கான தம்பதியர்களுக்குச் சிகிச்சையளித்திருக்கிறேன்.



• உலகப்புகழ் பெற்ற மருத்துவ திலகம் டாக்டர் ஏ.அர்ஜுனாவுடன் திருவண்ணாமலை மாவட்டத்தில் உயிரணு உற்பத்தியாகி குழந்தைப் பெற்ற கிருஷ்ணன்-ஜெகதாம்பாள் தம்பதிகள்.

''என்னிடம் வரும் தம்பதியரில் ஆண்களில் 70 சதவிகிதம் பேரும், பெண்களில் 30 சதவிகிதம் பேரும் குறைபாடு உடையவர்களாக இருக்கிறார்கள்'' என்று விவரம் தெரிவித்தார் அர்ஜுனா.

குழந்தைப்பேறு இல்லாமல், குடும்பத்தில் பிரச்னைகள் ஏற்பட்ட காரணத்தால் தற்கொலைக்கு முயன்ற பெண்களை, தனது சிகிச்சை முறையில் தடுத்து நிறுத்தியிருப்பதாகக் கூறுகிறார் டாக்டர் அர்ஜுனா. அதுபோல், ''மனைவிக்குக் குழந்தை இல்லை என்பதற்காக மறுமணம் புரியவிருந்த கணவன்மார்களுக்கு நம்பிக்கையூட்டி, அவர்கள் குடும்பத்தில் குழந்தைச் செல்வம் உண்டாக்கி மகிழ்ச்சியூட்டியிருக்கிறேன்'' என்கிறார் அவர்.

''எங்களிடம் வரும் தம்பதியரிடம் சிகிச்சைத் தொடங்கும் முன் கணவனின் உயிரணு உற்பத்திச் சரியாக இருக்கிறதா என்பதைக் கண்டறிய விந்துப் பரிசோதனை செய்யச் சொல்வோம். அதில் குறைபாடு இருந்தால் எங்களது முக்கூட்டு மருந்துகள் மூலம் சரியாகும் வரை அவர்களுக்குச் சில கட்டுப்பாடுகளுடன் சிகிச்சை அளித்து, உயிரணுக்கள் உற்பத்தி செய்து அணுக்களின் எண்ணிக்கை – உயிரோட்டத்தை அதிகரிக்கச் செய்து கருத்தரிக்கச் செய்கிறோம்.

''பொதுவாக ஓர் ஆணின் உயிரணுக்களின் எண்ணிக்கை சராசரியாக 100 முதல் 150 மில்லியன் வரை இருக்கும். அந்த அணுக்களின் உயிரோட்டம் மொட்டிலிட்டி 80 சதவிகிதத்திற்கு மேல் இருக்க வேண்டும்.

''நாங்கள் சராசரிக்கும் குறைவாக உள்ளவர்களைக்கூட புத்திர பாக்கியத்திற்குத் தகுதி உடையவர்களாக ஆக்கியிருக்கிறோம். ஆண் தன்மை அறவே இல்லாத ஆண் மகனுக்கு ஆண் தன்மை உண்டாக்கிப் புத்திரபாக்கியம் உண்டாக்கியிருக்கிறோம்.''

ஆண் மலட்டுத்தன்மைக்கான காரணங்கள் :

ஆண்களுக்கு இளம் வயதிலேயே புட்டாளம்மை வந்தாலும், அம்மை வந்திருந்தாலும், மஞ்சள் காமாலை, டைபாய்டு ஜுரத்தால் பாதிக்கப்பட்டிருந்தாலும், விதைகளில் அடிபட்டிருந்தாலும், வெப்பம் அதிகமுள்ள இடங்களில் வேலை செய்வதாலும், இந்திரிய நரம்புகள் இல்லாமல் பிறந்திருந்தாலும், அவர்களால் புத்திர பாக்கியம் அடைய முடியாத நிலை உள்ளது.

சில ஆண்களுக்கு முறையற்ற சிற்றின்ப பழக்கங்கள், அதிகமான போதைப் பொருட்களின் பழக்கம், மற்றும் நீரிழிவு நோய் இருந்தாலும் குழந்தை பிறக்கச் செய்வதற்கான தகுதி இழந்து போகிறார்கள். அவர்களுக்கு எங்கள் முக்கூட்டு மருத்துவ சிகிச்சையால் உயிரணு உற்பத்தி செய்து புத்திர பாக்கியம் அடையச் செய்ய முடியும்.

பெண் மலட்டுத்தன்மைக்கான காரணங்கள்:

பெண்களின் பிரச்னைகளைப் பொறுத்தவரையில், வளர்ச்சியே இல்லாமல் இருக்கும் பெண்களின் கர்ப்பப் பையை வளர்ச்சியடையச் செய்கிறோம். சில பெண்களுக்கு வீட்டு விலக்கு ஒழுங்கில்லாமல் இருக்கும். அதை ஒழுங்குபடுத்துகிறோம். சில பெண்களுக்கு மாதந்தோறும் வீட்டு விலக்கின் போது சூதக வயிற்று வலி வரும். இதனால் கருத்தரிக்க வாய்ப்பில்லாமல் போகும். இந்தக் குறையையும் எங்கள் முக்கூட்டு மருந்துகளால் குறைபாடுகளை நீக்கி கருத்தரிக்கச் செய்கிறோம்.

சில பெண்களுக்குக் கருமுட்டை உற்பத்தி இருக்காது. எங்கள் முக்கூட்டு மருத்துவத்தால் கரு முட்டை உண்டாக்கி, கருவுறச் செய்கிறோம். இத்தகையவர்களை ஸ்கேன் மூலம் பரிசோதிக்கச் செய்து, கருமுட்டை உற்பத்தி நிலையை அறிந்து கருத்தரிக்கச் செய்கிறோம்.

பெண்களுக்குள்ள பிரதான பெரிய பிரச்னை,

கருக்குழாயில் சதை அடைப்பு ஏற்படுவது. அதை முக்கூட்டு மருந்துகளால் கரைத்து அடைப்பை நீக்கி விடுகிறோம்.

கடந்த ஆண்டு துபாயில், தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவருக்குக் கருக்குழாய் அடைப்பு நீங்கி ஆண் குழந்தை பிறந்துள்ளது. ராமேஸ்வரத்தில் சைக்கிள் கடை உரிமையாளர் ஒருவருக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது.

லண்டனைச் சேர்ந்த ஒரு தம்பதியர் குழந்தையில்லாதிருந்து எங்களிடம் வந்து சிகிச்சை பெற்றதில் முக்கூட்டு மருத்துவத்தால் ஆணுக்கு உயிரணு உற்பத்தி ஆகியும், பெண்ணுக்குக் கருக்குழாய் அடைப்பு நீங்கியும் இப்போது அந்தப் பெண் கருத்தரித்துள்ளதாக முதலில் தொலைபேசியில் தகவல் தெரிவித்தார்கள். அடுத்து கடிதமும் எழுதியிருந்தார்கள்.

விழுப்புரம் மாவட்டத்தில் செஞ்சி தாலுகாவில் என். சுந்தரமூர்த்தி தம்பதிகளுக்கு எங்களது முக்கூட்டு சிகிச்சை மூலம் ஆண் குழந்தை பிறந்துள்ளது.

வேலூர் மாவட்டம் வேலூரில் சார்லெட்-அபு தம்பதியருக்கு முதலில் ஆண் குழந்தையும், பிறகு பெண் குழந்தையும் பிறந்துள்ளது. ராணிப்பேட்டை (வேலூர் மாவட்டம்) தயாளன்-பிரேமா தம்பதியருக்கு எங்களது முக்கூட்டு சிகிச்சை மூலம் முதலில் பெண் குழந்தையும், பிறகு ஆண் குழந்தையும் பிறந்துள்ளது. சென்னை அருகே ஆவடியில் பாபு தம்பதியருக்கு எங்களது முக்கூட்டு சிகிச்சை மூலம் ஆண் குழந்தை பிறந்துள்ளது.

சென்னை அயன்புரத்தைச் சேர்ந்த கோபி-சுமதி தம்பதியர் குழந்தை இல்லாமல் பல ஆண்டுகள் இருந்து பலரிடம் சிகிச்சை பெற்று பலன் இல்லாமல் எங்களிடம் வந்து முக்கூட்டு மருத்துவ சிகிச்சை பெற்றதில் 5 வயதில் ஒரு பையனும் 2 வயதில் ஒரு பெண்ணும் தற்போது இருக்கிறார்கள்.

சென்னை வியாசர்பாடியைச் சேர்ந்த புஷ்பா-சக்ரபாணி தம்பதியருக்குப் பல ஆண்டுகள் குழந்தை இல்லாதிருந்து பல்வேறு மருத்துவர்களிடம் சென்று சிகிச்சை பெற்று பலன் இல்லாமல் எங்கள் மருத்துவமனையில் முக்கூட்டு சிகிச்சை பெற்றதில் 5 வயதில் ஒரு ஆணும், ஒரு வயதில் ஒரு பெண் குழந்தையும் உள்ளனர்.

சென்னை போரூரைச் சேர்ந்த ஒரு தம்பதியரில் ஆணுக்கு 25.9.2000ல் செமன்டெஸ்ட் செய்ததில் கவுண்ட் 1 மில்லியனும் மொட்டிலிட்டி 20%ம் இருந்தது. 16.11.2000ல் டெஸ்ட் செய்ததில் கவுண்ட் 87% மில்லியனும், மொட்டிலிட்டி 20%ம் ரிசல்ட் கிடைத்துள்ளது. இது ஒரு பெரிய சாதனை. எங்களிடம் 4 வார மருந்து சாப்பிட்டதிலேயே இந்த சாதனைக்குரிய ரிசல்ட் கிடைத்துள்ளது.

முக்கூட்டு சிகிச்சை பெறும் தம்பதிகள் டாக்டர் கூறும் பத்திய கட்டுப்பாடுகளை ஒழுங்காகக் கடைபிடித்தால் 100க்கு 90% புத்திரபாக்கியம் அடையலாம்.

பண்ருட்டியைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் தம்பதியருக்குப் பல வருடங்களாகக் குழந்தை இல்லாதிருந்து எங்களிடம் முக்கூட்டு சிகிச்சை பெற்றதில் குழந்தை பிறந்துள்ளது.

சென்னை குரோம்பேட்டையைச் சேர்ந்த ராஜா-அலமேலு தம்பதியர் மணமாகி நான்கு வருடங்கள் குழந்தை இல்லாதிருந்து, பல டாக்டர்களிடம் சிகிச்சை பெற்று பலனின்றி தோல்வியுற்ற பின்னர் என்னிடம் வந்தார்கள். தம்பதியரில் இருவருக்கும் குறைபாடுகள் இருந்ததால், அவர்களுக்கு முக்கூட்டு மருந்து கொடுத்து சிகிச்சையளித்ததில், திருமதி ராஜா தற்போது ஆறுமாத கர்ப்பவதியாக உள்ளார்.

எங்கள் மருத்துவமனையில், தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலிருந்தும், இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலிருந்து வந்தும்; அயல்நாடுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், கனடா, சுவிட்சர்லாந்து, நியூசிலாந்து, சவுதி அரேபியா, துபாய், குவைத், பக்ரைன், ரியாத், ஓமன், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஜெர்மனி போன்ற வெளிநாடுகளில் இருந்து வந்தும் சிகிச்சை பெற்று பயனடைந்து வருகிறார்கள்.

எங்களிடம் சிகிச்சை பெற்று கர்ப்பமடைந்தவர்கள் கர்ப்பமடைந்த பின் 6 மாதம் வரை ஆங்கில மருத்துவர்களிடம் சென்று ஆங்கில மருந்துகளைச் சாப்பிட்டால் கருச்சிதைவு ஏற்படவும் வாய்ப்புண்டு.

ஒரு ஜாதி மருந்துகளால் உருவாகும் கரு, வேறொரு ஜாதி மருந்தினால் பாதிக்கப்பட வாய்ப்புண்டு. அதனால் பிரசவம் ஆகும் வரை உஷாராக இருக்க வேண்டும். அப்போதுதான் சுகப்பிரசவம் ஏற்படும் என்றார் டாக்டர் அர்ஜுனா. சுகப்பிரசவத்திற்கு மருந்து உண்டு என்கிறார் அவர்.



• டாக்டர் அர்ஜுனா, டாக்டர் V.A. ஆண்டாள் அர்ஜுனா

நவீன வைத்தியாலயா ஹோமியோபதி – சித்தா – ஆயுர்வேத மலடு நீக்கும் ஆஸ்பத்திரி

சென்னையில் சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய தினங்களில் டாக்டரைச் சந்திக்குமிடம் நெ.9 நெற்குன்றம் பாதை, (டிலாஸ் கவரி சங்கர் கல்யாண மண்டபம் எதிரில்) 100 அடி ரிங் ரோடு, வடபழனி, சென்னை – 600 026 போன் : 4833464 எஸ்டிடி. 044

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் டாக்டரைச் சந்திக்குமிடம் –

வீடு : நெ. 30, பிராமணர் தெரு, ஈஸ்வரன் கோயில் அருகில், வந்தவாசி,
திருவண்ணாமலை மாவட்டம் – 604 408
போன் : 25208, 26180 எஸ்டிடி. 04183

Visit us at :
www.naveenainfertilityhospital.com.
www. gemsassociates.com/infertility
e-mail.doctorarjuna @naveena infertilityhospital.com
e-mail.doctorandal @ naveena infertilityhospital.com.

ADVT

8

அனுராதா ரமணன்

ஈஸ்வரனுக்கு இன்னமும் பிரமை நீங்க வில்லை. பிறந்த நாள் விழா முடிந்து இரண்டு நாட்களாகி விட்டது. கல்யாணம் நடந்து முடிந்து, சேஷஹோமம் ஆன வீடு மாதிரி இருக்கிறது அந்தப் பங்களா. செவிகளில் இப் பொழுதும் பாலமுரளி... அவரது பைரவி... சங்கராபரணம்...

"விரல் சொடுக்கற நேரத்துல மாயாஜால வித்தைக்காரர் மாதிரி தடபுடல் பண்ணிட் டாரே அந்த கேதாரி. இந்த வயசுக்கும் படு சுறுசுறுப்பு.. நம்ம சம்பந்தியே கொஞ்சம் நேரம் அசந்துட்டார். மீனாட்சி அங்கு வந்து குவிந் திருந்த பரிசுப் பொருட்களை எல்லாம் ஒவ் வொன்றாகப் பிரித்து அடுக்கி வைத்துக் கொண்டே சொன்னாள்.

–"அதுமட்டுமில்லை. தங்கச்சிலை மாதிரி ஒரு பெண்ணையும் பெத்து வச்சிருக்காரே அதையும் சொல்லணும்."

ஈஸ்வரன், தனக்கு மகன் கொடுத்த பரி சைப் புரட்டிப் பார்த்துக் கொண்டே மனம் நெகிழச் சொல்கிறார்.

"இதுகூட அந்தப் பொண்ணோட யோச னையாகத்தான் இருக்கணும். இந்த அளவுக்கு இலக்கியமா யோசிக்க உன் பையனுக்கு நேரம் கிடைக்கும்னு எனக்குத் தோணலை."

''அதென்ன இலக்கியத்தனமா, எங்க காட்டுங்கோ பார்க்கலாம்."

மீனாட்சி, அவர் கையிலிருந்தப் பொருளை வாங்கிப் பார்த்தாள். மிக அழகான தந்தப் பேழை அது. மூடியைத் திறந்தவுடன் மேல் மூடியின் உட்பக்கம் ஈஸ்வரான், மீனாட்சியின் திருமண புகைப் படம் ஒன்று லாமினேட் செய் யப்பட்டிருந்தது. பேழைக்குள், தந்தத்தில் மெலிதாய் தங்கக் கோடுகளால் இழைக்கப்பட்ட வரிகள்.

'இந்த இருபத்தோராம் நூற் றாண்டின் ஆரம்பத்தில் மட்டுமல்ல, முடி விலும்கூட நீங்கள் இருவருமே மிகச் சிறந்த தம்பதியராகவும், மிகச் சிறந்த பெற்றோராகவும் இருப்பீர்கள். இப்படிக்கு உங்களது மகனாக பிறந்துள்ள அதிர்ஷ்டசாலி அஜய்'.

மீனாட்சி புன்னகைத்தாள்...

''அன்னைக்குப் பேச்சுவாக்குல உங்க ளோட கல்யாணபோட்டோ ஆல்பத்தை காட் டுங்களேன்னு சொன்னா... கார்ல போறச்சே எங்கேயிருந்து காட்ட முடியும்? ஏதோ ஒண்ணு என் கைப்பைக்குள்ள வச்சிருந்த ஞாபகம் வந்தது.. எடுத்துக் காட்டினேன். அன்னிக்கு இருந்த பரபரப்புல மறுபடியும் போட் டோவைக் கேட்டு வாங்கிக்கவேயில்லை... சின்னதா, பழசா மக்கிபோயிருந்த போட்டோ எப்படி இத்தனை புதுசா, பெரிசா, தெளிவா இருக்கு.. ஆனாலும் அந்தப் பொண்ணு படு சமத்துதான்."

சொல்லும்போதே மீனாட்சிக்குக் குரல் தழுதழுத்தது. மறுபடியும் மறுபடியும் ரோஜா வண்ண சுரிதாருடன் அந்தப் பெண் கூடத்தில் இருந்தவர்களை வரவேற்பதும், உபசரிப்பதும், சிரிப்பதுமாய் தட்டாமாலை ஆடுவது போல...

ஈஸ்வரன், மனைவியிடம் ஆதங்கத்துடன் கேட்கிறார்– "இதுமாதிரிபட்ட நல்ல பொண் ணுங்களையெல்லாம் உன் பையன் லவ் பண்ணவே மாட்டானா..?"

மீனாட்சி பெருமூச்செறிந்

இனிமேல் ஆரம்பம்



தான்.

"யார் யாருக்கு எது ப்ராப்த்தமோ அது தான் நடக்கும்..."

''அவன் எவளை வேணுமானாலும் கட்டிக்கிட்டும். எனக்குக் கேதாரிதான் சம்பந்தியா வரணும். ஒரு கச்சேரில அசத்திட்டாரே...''

ஈஸ்வரன் கண்களிலிருந்து கனவு நீங்காமலேயே சொன்னார்.

"சும்மா இருங்கோ. அந்த வருஷத்துக்கு முந்தி இப்படித்தான். உங்க ஆப்த சிநேகிதரைப் பாராட்டி, உன் பொண்ணுதான்டா என் பையனுக்குன்னு வாக்குக் கொடுத்ததை மறந்துட வேண்டாம். நமக்கு இருக்கறது ஒரு பிள்ளை... எத்தனை பேரை சம்பந்தியாக்கிக்க முடியும்..."

ஈஸ்வரனின் முகம் வெயிலில் போட்ட பூப்போல வாடியது. அவரது வாழ்நாளிலேயே பள்ளிக்கூட காலத்திலிருந்து இன்று வரையில் பழகிய சிநேகிதர்கள் யாருமே அவரை விட்டு விலகிப் போனதில்லை. சட்டென ஒட்டிக் கொள்கிற சுபாவம். தானே வலியப்போய் உதவுகிற குணம். படிப்பு, அந்தஸ்து எதையுமே பெரிதாய் நினைக்காத பரந்த மனசு.

மொத்தத்தில் கிருஷ்ண பரமாத்மா போல ஆபத்து காலத்தில் ஈஸ்வரா என்று அவரது நண்பர்கள் எங்கேயிருந்து அழைத்தாலும் உடனடியாக விழுந்தடித்துக் கொண்டு ஓடுகிறவர்.

இப்படிப்பட்டவரையே காயப்படுத்தி விட்டாரே அந்த முன்னாள் நண்பர். ஒரு நிமிஷத்தில் கண்களில் நீர் திரை இடுகிறது. அப்படியே உட்கார்ந்து விட்டார். மீனாட்சி கூட அந்த நிலையைப் பார்த்து, சற்று கலங்கித்தான் போய் விட்டாள்.

"போதும், எழுந்திருங்கோ... பழைசையெல்லாம் நினைச்க மறுபடியும் மனசைப் போட்டு கஷ்டப்படுத்திக்க வேண்டாம்... எல்லாருமே ஒரே மாதிரி இருப்பாங்களா என்ன? பத்துல ஒண்ணு இப்படியும் அமையறது உண்டுதான். ஆனா உங்களையும் நான் குற்றம் சொல்வேன். ஒரேயடியாய் அப்படி மேல விழுந்து பழகி, உங்களோட வியாபாரத்துலயும் இடம் கொடுத்து கட்டிப் புரண்டிருக்க வேண்டாம்..."

ஈஸ்வரன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி, துடைத்து மாட்டிக் கொண்டார்.

''நான் பண கஷ்டத்தைப் பொருட்படுத்த மாட்



டேன்னு உனக்குத் தெரியும். ஆனா மனக் கஷ்டம்... அதுவும் என்னைவிட என் குழந்தை அஜய்க்கு... அதை நினைச்சாத்தான் மனசு ஆறவே மாட்டேங்கறது..."

"பேசாம இருங்கோ. இனிமே அதைப்பத்தி அவன்கிட்ட ஞாபகப்படுத்தவே வேண்டாம். எனக்கென்னவோ ப்ரீதியையும், அவனையும் சேர்ந்தாப்பல கோவில்ல பார்த்ததுலேர்ந்து மனசுக்கு நிம்மதியா இருக்கு..."

அவள் மேலும் ஏதாவது சொல்லியிருப்பாள்... அதற்குள் அஜய் உள்ளே நுழைய 'கப்பென' வாயை மூடிக் கொண்டாள்.

ஈஸ்வரன்தான் எதுவுமே நடக்காததுபோல புன்னகை ததும்ப மகனிடம் கேட்டார்.

"என்னப்பா ரெண்டு நாளா ஆளையே பிடிக்க முடியலை... என் பிறந்த நாளுக்காக இத்தனை ஏற்பாடு செஞ்சிருக்க... ஒரு வார்த்தை மூச்சு விடலையே நீ..."

அஜய் நெளிந்தான்... நெற்றியில் விழுந்த கிராப்பை ஒதுக்கிவிட்டுக் கொண்டான்... அசட்டுப் புன்னகையுடன் தாயின் பின்னால் பாதி உடம்பை மறைத்தபடி கூறினான்...

"அந்த பார்ட்டெல்லாம் என் ஆபீஸ்ல எனக்கு உதவியா வேலை செய்யற ப்ரீதிக்குத் தான் சொந்தம்... அஃப்கோர்ஸ் எனக்கே ஒண்ணும் தெரியாது... வீட்டுக்கு வந்ததும் நானே மலைச்சுப் போயிட்டேன்..."

"இப்படியொரு ரைட்ஹாண்ட் இருந்தா என்ன வேணா சாதிக்கலாம்... இந்த பரிசுகூட அவளோட செலக்ஷன்தானா...?"

அவர், தந்தப் பேழையைக் காட்ட, அவன் எட்டிப் பார்த்துவிட்டு சிரித்தபடி தலையாட்டினான்...

"ஆமாம்பா..."

"ஏண்டா, இந்த நூற்றாண்டுக்கு நீயும், உன் பெண்டாட்டியும் சிறந்த தம்பதியா, சிறந்த பெற்றோரா வரமாட்டீங்களா என்ன?"

இதைக் கேட்டதும் அஜய்யின் முகத்திலிருந்த சிரிப்பு மறைந்தது... விழிகள், மேலே சுழலும் மின்விசிறியில் பதிந்தன.

"அதப்பத்தி இப்ப எப்படிப்பா சொல்ல முடியும்... சரி... நான் கொஞ்ச நேரம் மாடியில கம்ப்யூட்டர் முன்னாடி உட்காரப் போறேன்... ரெண்டுமூணு லெட்டர் அவசரமா 'மெயில்' பண்ண வேண்டியிருக்கு..."

அவன் அம்மாவை அப்படியே அணைத்து இதமாய்ச் சொன்னான்.

"அம்மா, காபி, டிபன் எதுவும் வேண்டாம்... ஹோட்டல் சாப்பாடு என்னமோ பண்றது... ராத்திரி மிளகு ரசம், சுட்ட அப்பளம்... ஓகே..."

அவளது பதிலுக்குக் கூட காத்திராமல் அவன் மாடிப் படியில் தாவி ஏற... கணவனின் காதோடு ஆதங்கத்துடன் சொன்னாள்.

"இப்ப விழுந்தடிச்சுட்டு யாருக்கு 'மெயில்' பண்ண ஓடறான்னு தெரியும்தானே..."

"..............."

"எல்லாம் பெங்களூர்ல இருக்கற உங்களோட சிநேகிதர் பொண்ணுக்குத்தான்... என்ன முழிச்சுப்பார்க்கறாப்பல... அப்போ, ஒண்ணும் தெரியாத வயசுல ரெண்டையும் பக்கத்துப் பக்கத்துல வச்சுண்டு, மாப்பிள்ளைன்னும், மருமகளேயின்னும் நொடிக்கு ஒரு தடவை கூப்பிட்டதோட பலன், இப்போ விசுவரூபம் எடுத்து நிக்கறது.... நீங்க வேணா பார்த்துண்டே இருங்கோ.... அவகிட்டயிருந்து பதில் வரதோ இல்லையோ... இவன் வரிஞ்சு வரிஞ்சு மெயில் பண்ணிண்டிருப்பான்..."


ஈஸ்வரன், இதற்குப் பதில் சொல்லவில்லை.

உண்மைதான்... அஜய் படு உற்சாகத்துடன் தன்னிடமிருந்த ஏழெட்டு காகிதங்களைப் பிரித்து மேஜை மீது பரத்தினான்... ஒவ்வொன்றுமே 'அன்புள்ள கண்ணம்மாவிற்கு' என்று ஆரம்பித்து, அடித்தும் திருத்தியும், திக்கியும் திணறியும், அஜய்யின் மனத்திலுள்ள உணர்ச்சிப் பிரவாகத்தை, வார்த்தைகளில் வடிக்க முடியாதத் தோல்வியை ஒப்புக் கொள்வதுபோல 'ஸாரி ஸாரி' என்று படபடத்துக் கொண்டிருந்தன.

அவன் ஒவ்வொரு கடிதத்திலும் சில வரிகளை மட்டும் குறித்துக் கொண்டு மெயில் பாக்ஸைத் திறந்து தனது வார்த்தைகளுக்கு உயிர் கொடுக்கத் தொடங்கினான். மனசு ஒருமுறை விம்மித் தணிந்தது. விழிகளை கண்ணீர் மறைத்தது. அடிக்கடிப் புறங்கையால் விழிகளை தேய்த்து விட்டுக் கொண்டே பார்வையை கம்ப்யூட்டர் திரையில் பதித்தான்.

'அன்புள்ள கண்ணம்மா, உன்னை சந்தித்து பேச துடித்துக் கொண்டிருக்கிறேன். எப்பொழுது? எங்கே? சொல்வாயா?'– வார்த்தைகள் கண் சிமிட்டின...

(தொடரும்)



"முக்கோணக் காதல் கதையிலே தலைவர் நடிச்சா பொருத்தமா இருக்குமா... எப்படி?"

"ஒரு அணி இவரை விரும்புது... இவரோ இன்னொரு அணியை விரும்புறாரு!"

– தஞ்சை தாமு



என்னுடைய மனைவியின் தூரத்து தம்பி ஒருவர் டாக்டர். நர்ஸிங் ஹோம் வைத்திருக்கிறார். அவரிடம் என் உடம்பைக் காட்டி, 'செக்-அப்' செய்ய வேண்டும், அதுவும் ஓசியில் என்பது என் மனைவியின் நீண்ட நாள் லட்சியம், பிரார்த்தனை, வேண்டுதல்!

''இதோ பார் கிருஷ்ணா... நாற்பது வயது ஆனா ஃபுல்பாடி செக்-அப் பண்ணிக்கணுமாமே! மாமாக்கு முப்பத்தெட்டு வயசு ஆகுது. பி.பி., சுகர், சால்ட், சேவரின்னு ஏதாவது இருக்கான்னு பார்த்துடுப்பா'' என்று கேட்க, அவரும் சில, பல டெஸ்ட்டுகளுக்குப் பிறகு எங்களை அழைத்தார்.

வெள்ளை எலி (கினி பிக்) போல திருதிருவென

இதுதான் நீதியா!

ஆர். சேகர்


விழித்துக் கொண்டிருந்த என் தோளைத் தட்டி விட்டு, ''அக்கா, மாமா ஈஸ் பர்ஃபெக்ட்லி ஆல் ரைட். கொஞ்சம் சுகர் இருக்கு. மருந்தெல்லாம் தேவையில்லை. டயட்டிலேயே குறைச்சுடலாம்'' என்று சொல்லி விட, எனக்குப் பிடித்தது ஏழரை சனி!

காலையில் வெந்தயக் கஞ்சி. ரொம்ப கெஞ்சிக் கேட்டால் சர்க்கரை போடாத கசப்பு காப்பி. அதுக்குக் கஞ்சியே தேவலை. நோ ரைஸ்! மூணு வேளையும் 'பறக்கும் தட்டு' போல டிரை சப்பாத்தி. பாகற்காய்க் கூட்டு, வேப் பம்பூ ரசம், சுண்டைக்காய் வதற்றல் என்று பிட்டர் எக்ஸ்பீரியன்ஸ்.

''எனக்கு ஒண்ணுமில்லேடி. இப்



கல்கி — ரமணி Vs ரமணி
இணைந்து வழங்கும் 'தம்பதி தமாஷ்'
தீபாவளிப் பரிசுப் போட்டியில்
இரண்டாம் பரிசாக ரூ. 7000 மதிப்புள்ள
வாஷிங்மெஷின் பெறும் இரண்டாம் கட்டுரை



"அந்த ஆவி மட்டும் ஏன் புல்லட் ப்ரூப் மாட்டிருக்கு?"

"அது பூலோகத்துல அரசியல்வாதியா இருந்த பேய்!"

— அம்பை தேவா

படி சமைச்சு சாகடிக்காதே'' என்றால், ''சும்மா இருங்க. உங்களுக்குத் தெரியாது. என் தம்பியே 'காஷன்' கொடுத்துட்டான். டயாபடிஸை கவனிக்கலேன்னா கிட்னி, இதயம், கண் எல்லாமே பாதிச்சுடுமாம்'' என்று கறாராகச் சொல்லி விட்டாள்.

நாக்கு செத்து, வாழ்க்கையே கசந்து போயிருந்த வேளையில், தெய்வாதீனமாய் அந்தப் பத்திரிகை வந்தது. என் மனைவியின் ஒண்ணு விட்ட மாமா பேத்தி கல்யாணம். அதுவும் நியூ உட்லண்ட்ஸ் ஓட்டலில்! ''அப்பாடா! விருந்து சாப்பாட்டை வெளுத்துக் கட்ட ஒரு சந்தர்ப்பம் கிடைச்சுதே'' என்று நான் நன்றியில் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தபோது, என் மனைவி பொக்ரான் வெடி குண்டைத் தூக்கிப் போட்டாள்.

''சாரி... நீங்க டயட்ல இருக்கீங்க. ஸ்வீட்டு, பாயசம் எல்லாம் உடம்புக்கு ஒத்துக்காது. நான் மட்டும் போயிட்டு வந்துடறேன்'' என்று கழற்றி விட்டாள்.

அவள் போன பிறகு, போரடிக்கவே டி.வி. பார்க்க ஆரம்பித்தேன். அந்தச் சமயத்தில் தானா வர வேண்டும் அந்த ஐஸ்க்ரீம் விளம்பரம்? நாக்கில் லிட்டர் கணக்கில் எச்சில் ஊற, உடனே பக்கத்துத் தெருவில் இருந்த கடைக்குப் போய், ஐந்நூறு கிராம் ஃபேமிலி பேக்கை வாங்கிக் கொண்டு வந்து ரகசியமாக சுவைக்க ஆரம்பித்தேன். மூன்று ஸ்பூன் உள்ளே போயிருக்கு.

"தட்... தட்...." கதவைத் திறந்தால்...

என் மனைவி!

"ஏதோ புதிய நீதிக் கட்சி ஆரம்பிச்சிருக்காங்களாம். ராதா கிருஷ்ணன் சாலையில் போக முடியாதுன்னு ஆட்டோக்காரன் திரும்பிட்டான். ஒரே டிராபிக்ஜாம்'' என்று சலித்துக் கொண்டாள். அடக்கடவுளே! இதுதான் உன் புதிய நீதியா...?

உடனே உள்ளே ஓடிப் போய், ஐஸ்க்ரீம் தட்டை ஒரு ஷெல்ஃபுக்குள் வைத்து மூடி விட்டேன். மனக்குள் ஐஸ்க்ரீமுக்கு மர சமாதி! என் மனைவி அதே அறைக்கு வந்து, நைட்டிக்கு மாறினாள். புடைவையைக் காற்றாட உலர்த்தினாள். அரை மணி நேரம் யாரிடமோ ஃபோன் பேசிவிட்டு, பிறகு கடைத் தெருவுக்குப் போய்விட்டு வருவதாகச் சொல்லிப் போனாள். அதற்குள் என் ஆசை பிஸ்தா ஐஸ்க்ரீம், எனக்காகக் காத்திருக்குமா? உருகி, உருகி, பால் ஆறு ஓடி, வழிந்து... அலமாரியிலிருந்து கோடாக வழிந்து இதோடு நின்றிருந்தால் பரவாயில்லையே!

என் மனைவி அவிழ்த்துப் போட்டிருந்த பட்டுப் புடைவைக்குள் நுழைந்து, நனைத்து, சாயத்தில் கலந்து...

உடனே சார்லி சாப்ளின் படத்தில் காட்சிகள் வேகமாக ஓடுவது போல, ஷெல்பில் இருந்த ஐஸ்க்ரீமைத் துடைத்து, தரையைத் துடைத்து, புடைவையைப் பக்கெட்டில் போட்டு அலசி... பிழிந்து கொண்டு நான் வெளியே வரவும், என் மனைவி தன் தோழிகளுடன் வீட்டுக்குள் நுழையவும் சரியாக இருந்தது. என் மனைவியின் முகத்தில் நவரசங்கள்!


''ஐயே! இது புதுப்புடவை! டிரை வாஷ் மட்டும்தான் பண்ணணும். ஆர்டினரி வாஷ் பண்ணினா சாயம் போய், சுருங்கிடுமே'' என்று அவள் அலற, தினமும் நான்தான் அவளுடைய புடைவையைத் துவைக்கிறேன் என்று நினைத்து அவள் தோழிகள் கண்ணாலேயே ஜாடை பேசிக் கொள்ள...

எல்லாமே நடந்து முடிந்து விட்டது!

எஃப்.ஐ.ஆர். ஃபைல் பண்ணி, கேஸ் புக் செய்து, சாட்சி, வழக்கு, ரிமாண்ட், மேல் முறையீடு, அப்பீல், வாய்தா, கோர்ட்டு, முன் ஜாமீன், விசாரணை... என கன்னா பின்னா என்று 'ஃபேமிலி கோர்ட்'டில் 'டிரையல்' நடந்தது.

தடாலென காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டதில் ஐஸ்க்ரீம் பிரச்னை ஓய்ந்தது. ஆனால் டயட்டிங்?

அது இன்னும் கூடுதல் கெடுபிடிகளோடு நடக்கிறது என்ற இனிப்பான செய்தியோடு விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி.. வணக்கம்.


Dreams Audio
DREAMS AUDIO
Proudly Launches
Artistes Of Your Choice
In
Great Masters Series
T.K. RANGACHARI
D.K.PATTAMMAL
ARIYAKKUDI RAMANUJA IYENGAR
RAMNAD KRISHNAN
KUNNAKKUDI VAIDYANATHAN
KARUKURICHI P.ARUNACHALAM
Concert Series
O.S. THYAGARAJAN
Dr.N.RAMANI
Classical Vocal, Instrumental & Fusion
HYDERABAD BROTHERS
S.SOWMYA
KADIRI GOPALNATH
E. GAAYATHRI
Devotional
AMMAVUKKU
ANNAMALAI ANANDANILAI
PITHUKULI MURUGADAS
BOMBAY SISTERS
Each CD Rs. 150/- Only
FUSION
Media Dreams Ltd
Chennai - 17. Phone : 8203715
Visit us at WWW. MEDIA-DREAMS.COM
Also Available on Cassettes

பஞ்சு ஸாரை எனக்கு ஏன் அவ்வளவு பிடித்தது என்று சொல்லத் தெரியவில்லை. புகையிலை மென்று பழுத்துப் போன பற்கள் தெரிய அவர் சிரித்தபோது, நியாயத்துக்கு நான் பயந்திருக்க வேண்டும். ஆனால் அந்தப் பத்து வயதின் பல்வேறு வகையான பயங்களும் மிரட்சியும் அவர் சிரிப்பைக் கண்டதும் ஓட்டம் பிடித்துவிட்டன.

'உனக்கென்ன தெரியும், பார்த்து விடுகிறேன்...!' என்கிற தோரணைப் புன்னகையைத்தான் நான் பாட்டு டீச்சர்களிடம் கண்டிருந்தேன். பஞ்சு சார் என்னோடு சிநேகம் பண்ணிக் கொள்ள வந்த சம வயதுப் பையன் போல் தோன்றினார்.



''சுருதிப் பெட்டியை பொய்ங் பொய்ங்னு அழுத்தாதே!'' ''நிமிர்ந்து உட்கார், கூன் போடாதே!'' "நோட்டைப் பார்க்காதே" என்று வந்ததும் வராததுமாக ராஜாங்கம் செய்த முந்தைய டீச்சர் மீனலோசனிக்குக் கல்யாணம் ஆனதில் எனக்குத்தான் அதிகம் சந்தோஷம் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் பஞ்சு ஸாருடைய சந்தோஷத்துடன் ஒப்பிட்டபோது அது சமுத்திரத்துக்குப் பக்கத்தில் தேங்கிய குட்டை போல் ஆகிவிட்டது!

அந்த ஞாயிறு பிற்பகல் நன்றாக நினைவிருக்கிறது. வானொலியில் பாப்பா மலர் நேரம். காலிங் பெல் ஒலித்தது. கக்கத்தில் பழைய குடையை இடுக்கிக் கொண்டு வெளிர் மஞ்சள் ஜிப்பாவும் வீட்டுச் சலவை வேட்டியுமாக வாசலில் நின்றார் அவர். முகம் வியர்த்திருந்தாலும் களைப்புற்றிருக்கவில்லை. சொற்பமேயிருந்த நரைமுடிக்குத் தாராளமாய் வார்த்திருந்த தேங்காய் எண்ணெய் அவர் முகத்துக்கு இறங்கி பளபளப்பூட்டிக் கொண்டிருந்தது.

''அனு!'' பக்கத்திலேயே இருந்த என்னை அம்மா பெயர் சொல்லிக் கூப்பிட்டாள், ஸாருக்கு என் பெயர் தெரிய வேண்டும் என்பதற்காக இருக்கலாம். ''ஸாரை மாடிக்கு அழைச்சுண்டு போ. பாய் போட்டு, சுருதிப் பெட்டியை எடுத்து வை. நான் காப்பி எடுத்துண்டு வரேன்.''

சுருதிப் பெட்டியை எடுத்தபோது ஓடிய பல்லியைக் கண்டு நான் சப்தமில்லாமல் வெலவெலத்தபோது பஞ்சு ஸார் முதன்முதலாகச் சிரித்தார்.

"ரொம்ப நாளா சுருதி பாக்கலைத

சீதா ரவி

தொடல்லியோ?''

தினமும் பாடாத பிள்ளைகளுக்கு டியூஷன் எடுப்பது எவ்வளவு வியர்த்தம் என்பது குறித்த ஒரு கண்டனப் பேருரையை அந்தக் கணத்தில் அவரிடமிருந்து எதிர்பார்த்தேன்.

''முன்னாடி டியூஷன் எடுத்தவா

எல்லா ஜதி

ஏன் இப்போ வரதில்லை?'' என்று கேட்டு என்னை ஆச்சர்யத்தில் மூழ்கடித்தார்.

''மீனா டீச்சருக்குக் கல்யாணமாயிடுத்து...''

''தீர்க்க சுமங்கலியாயிருக்கட்டும்'' என்று துளியும் யோசிக்காது சொன்னவர், திரும்பவும் சிரித்தார். சந்தோஷம் கரைபுரண்ட சிரிப்பு!

''என்ன பாடறே?'' - தேர்வை அவர் என்னிடமே விட்டதில் திகைத்துப் போனேன்.

''சொல்லு...''

''மோகனம் - வர்ணம்?'' அது மட்டுமே நன்றாகப் பாடமாகி முழுசாக ஞாபகத்தில் இருந்தது.

''பேஷ்! பாடு...''

பாடுவதற்கு முன்பே பாராட்டத் தயாராகி விட்



டார். பிசகில்லாமல் முதல் காலம் பாடிய போது கூடவே தாளம் போட்டு, தலையையும் ஆட்டி ரசித்தார்! மேடையில் கச்சேரி பாடுகிற முதல்தர வித்வானின் உற்சாகம் பீறிட்டது எனக்குள். அந்த உந்துதலில் இரண்டாம் காலத்தை ஆரம்பித்து, மூச் சிரைக்க, அவஸ்தைப்பட்டபோதுகூட பஞ்சு ஸார் ரசிப்பதை நிறுத்தவில்லை. ஆனால், நான் பட்ட தேக சிரமத்தைக் கண்டு கொஞ்சம் பச்சாதாபமுற்றதுபோல் காணப் பட்டார்.

"போதும்" – கருணையுடன் அனுபல்லவியோடு என்னை அவர் நிறுத்தச் செய்யவும் காப்பி வந்தது – அவருக்கும் எனக்கும். வைத்துவிட்டு அம்மா கீழே போய்விட்டாள்.

சுழற்றி சுழற்றி காப்பி ஆற்ற அவர் செலவிட்ட நேரத்தில் நான் அதைச் சூடு மாறாமல் குடித்து முடித்துவிட்டேன்.

"எப்படிக் குடிச்சே? அதுவும் டம்ப்ளரை எச்சில் பண்ணாம?" என்று அதற்கொரு முறை ஆச்சர்யத்துடன் சந்தோஷப்பட்டார்.

திடீரென்று எனக்குள்ளிருந்த தயக்கமெல்லாம் உடைப்பெடுத்துக் கொண்டு ஓடிப் போய்விட்டது. விஷமத்துடன் அவரைப் பார்த்துச் சொன்னேன். "அதுவா? பத்துநாள் தலைகீழா நிற்கணும். அப்படி நின்னா அடுப்பு காப்பியை அப்படியே எடுத்துக் குடிக்கற சக்தி மந்திரம் மாதிரி வந்துடுமாக்கும்..."

காப்பியைக் கீழே வைத்து விட்டார் பஞ்சு ஸார். பட் பட்டென்று இருமுறை கை தட்டிவிட்டு ஒரு கையின் ஒற்றை விரலை நீட்டி ஆட்டியாட்டிச் சொன்னார்: "பொல்லாது! பொல்லாது! ஆனால் புத்திசாலி!"

இப்படியாக பஞ்சு ஸார் எனக்கெடுத்த இசை வகுப்புகள் ஏழு சுவரங்களையும் எட்டு அக்ஷரங்களையும் கடந்த வேறு பல சந்தோஷ சாம்ராஜ்யங்களுக்குள் அடிக்கடி சஞ்சரித்துவிடும்.

எட்டு வகுப்புகளானதும் அம்மா கவரில் வைத்துத் தந்த ரூபாய் நோட்டுகளை வாங்கிக் கொண்டபோது கூட பஞ்சு ஸார் சந்தோஷப்பட்டார். ஆனால், மீனலோசனி டீச்சரின் கல்யாணம் பற்றி நான் சொன்னபோது அவர் அடைந்த பூரிப்புக்கு நிகரேதுவுமில்லை.

இந்த மகிழ்ச்சி சிற்றுலாக்களினால் இசைப்பயிற்சி பாதிப்புக்குள்ளாகிவிடவில்லை. சரஸ்வதி படம் போட்ட பெரிய அகல நோட்டில் வர்ணங்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போயிற்று. இரண்டு வருடங்களில் இரண்டு நோட்டுகள் முழுதும் கீர்த்தனைகளும் நொடேஷனுமாக நிறைந்து போயின.

அவையத்தனையையும் நான் பாடினேன் என்பதே பஞ்சு ஸாருக்குப் போதுமாயிருந்தது. அவற்றை நான் சிறப்பாகப் பாடவில்லையே என்பது குறித்த கவலை எதுவும் அவருக்கு இருக்கவில்லை – அம்மாவுக்கு இருந்ததைப் போல.

அம்மாவின் கவலை என்னையும் குடைந்தரிக்க ஆரம்பிக்கும்வரை நானும் மகிழ்ச்சியாய்த்தானிருந்தேன். அதன் பிறகுதான் வகுப்புகள் யாவுமே பரீட்சைகளாகத் தோன்ற ஆரம்பித்துவிட்டன.

பத்து வயதின் கள்ளமற்ற உற்சாகம் வடிந்து போய், பன்னிரண்டுக்குரிய தயக்கமும் சுய விமர்சனமும் தலையெடுத்துத் துன்புறுத்தின.

என் பாட்டை என்னாலேயே காது கொடுத்துக் கேட்க முடியவில்லை.

ஆனால் எல்லாமே கச்சிதமாயிருந்தது போல் பஞ்சு ஸார் வகுப்புகளைத் தொடர்ந்தார்.

"கல்பனை ஸ்வரம் பாடக் கற்றுத் தரேன்..."

"ஐயோ! ஸார்! நானா...?"

"ஏன்? ஏன் முடியாது...? பாடு! பமகமரி சரஸ்வதி..." அலுக்காமல் சலிக்காமல் ஆர்வத்தைத் தூண்டித் தூண்டி. என் இயலா

"அந்த டாக்டர்கிட்ட கூட்டமே வராததால ரொம்ப நொந்து போயிட்டார்னு நெனைக்கிறேன்!"

"எப்படிச் சொல்ற?"

"பீஸை சுலப தவணை முறையில் செலுத்தலாம்னு போர்டு வெச்சிருக்காரே!"

— வே. செந்தில்



மையைப் பொய்யாக்க முயன்றார். அவருடைய இந்த தீரப் போராட்டத்தின் உச்சமாக அமைந்தது ஒரு அதிதீர முயற்சி.

டிசம்பர் பரீட்சைகள் முடிந்து விடுமுறை ஆரம்பித்திருந்த நேரம். சென்னையின் கச்சேரித் திருவிழாவில் அம்மாவுடன் சுற்றி வந்தேன். பிற்பகல், காலை, மாலை என்று பாரபட்சமின்றி அம்மா பலவற்றுக்கும் அழைத்துப் போனாள்.

ஒரு மூத்த வித்வானின் கச்சேரியில்தான் அதை நான் முதன்முதலாகக் கேட்டேன். துரித காலத்தில் ஒரு கீர்த்தனையை முத்து தெறித்தாற்போல் பாடிவிட்டு ஆரம்பித்தார்.

“அம்பா...கா....மா...க்ஷி...!”

படத்தில் மட்டுமே நான் பார்த்தறிந்த காமாக்ஷியைப் பிரத்தியட்சமாக்கி பைரவி என்கிற ஊஞ்சலில் அமர்த்தி மதுரமாக முன்னும் பின்னும் ஆட்டுவது போலிருந்தது. தெலுங்கு மொழி. ஆனால் வார்த்தைகளின் அர்த்தம் பற்றிய கேள்விகளுக்கு இடம் தராத கனத்த பாவத்துடன் முன்னேறியது அந்தப் பாட்டு. ஸ்வரமும் சாஹித்யமுமாக மாறி மாறி... ஓடி ஓடி விளையாடி விட்டு, களைத்து வந்து அம்மா மடியில் முகம் புதைக்கும் குழந்தைபோல் திரும்பத் திரும்ப 'அம்பா காமாக்ஷி...' என்று அழைப்பில் வந்து முடிந்தது.

“ச்யாம கிருஷ்ண சகோதரி சிவசங்கரி பரமேஸ்வரி...” - ஆட்டுவதை நிறுத்திவிட்டு, பாடகர் பிரபஞ்சத்தின் சகல ஜீவ ராசிகளுக்குமான ஒரு பிரார்த்தனையைக் கதறலுடன் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்!

பொங்கிப் பொங்கி அழுததில் என் கண் மையெல்லாம் கரைந்து போய்விட்டது.

மறுநாள் பஞ்சு ஸாரிடம் விவரித்தபோது மிகுந்த சந்தோஷத்துடன் கவனமாகக் கேட்டார்.

“அது என்ன தாளம் தெரியுமோ...? மிஸ்ர சாபு. அம்பாளுக்குச் சாமரம் வீசற மாதிரி ஒரு லயத்தை ஏற்படுத்தறது பார்த்தியா?” என்றார்.

“ஸ்வரஜதின்னு பேரு... ச்யாமா சாஸ்திரி மூணு ராகத்துல பண்ணியிருக்கார். பைரவி, தோடி, யதுகுலகாம்போஜி - எல்லாம் காமாக்ஷி பேர்லதான்.”

நீண்ட நேரம் பேசினார் - இசையும் மொழியும் பின்னிப் பிணைகிற கீர்த்தனைகளை அனாயாசமாக உருவாக்கிய மகான்களைப் பற்றி, அவர்களுள் ச்யாமா சாஸ்திரிக்கு காமாக்ஷியிடமிருந்த அந்நியோன்னிய பக்தி பற்றி, ஸ்வரஜதிகளில் ராக ஸ்வரூபத்தின் மூலை முடுக்குகள் முதற்கொண்டு உள்ளடங்கியிருக்கும் விசேஷம் பற்றி, அதிலும் பைரவி ஸ்வரஜதியில் படிப்படியாக மேலேறும் ஸ்வர அமைப்பு பற்றி... சங்கீதப் பயிற்சியும் வாழ்க்கையும்கூட அப்படித்தான் - படிப்படியாகத் தான் முன்னேற வேண்டும் என்பது பற்றி...

“பைனான்ஸ் கம்பெனிக்கு இண்டர்வியூ போனியே... என்ன கேட்டாங்க?”

“100 மீ ஓட்டம், 200 மீ ஓட்டங்களில் கலந்து கொண்டதுண்டான்னு சான்றிதழ் கேட்டாங்க!”



— கொங்கணாபுரம் வே. செந்தில்

பஞ்சு ஸார் பேசியதில் பாதிக்கு மேல் புரியவில்லை என்றாலும் கேட்க கேட்க எனதியாலமை குறித்த துக்கம் மட்டும் அதிகரித்தது. பைரவி வர்ணத்துடன் போராடித் தோற்றுத் துவண்டது ஞாபகம் வந்து வாட்டியது.

திடீரென்று பேச்சை நிறுத்திவிட்டு “சுருதி போடு” என்றார் பஞ்சு ஸார்.

“ம், பாடு...” என்று பைரவி ஸ்வரஜதியைக் கற்றுத் தர ஆரம்பித்தார்.

“கா...மா... க்ஷி...”

அன்று பிரமித்து நான் ஒடுங்கியது பைரவி ஸ்வரஜதியைக் கண்டு அல்ல; பஞ்சு ஸார் என் பேரில் கொண்டிருந்த நம்பிக்கையை உணர்ந்து.

அத்தனை நம்பிக்கைக்குப் பாத்திரமாகும் எவருக்கும் ஒரு வீரம் பிறக்கும். எதிர்பார்ப்புக்கும் நிஜத்துக்குமிடையேயான இடைவெளிகளை இட்டு நிரப்பி விட வேண்டும் என்கிற வேகம் பிறக்கும்.

எனக்குள்ளும் பிறந்தது. பைரவி ஸ்வரஜதியுடனான ஒரு நீண்ட நெடும் மல்யுத்தம் தொடங்கியது.

வெறுமே மனப்பாடம் செய்துகொண்டு முன்னேற நான் தயாராயில்லை.

ஒவ்வொரு நுணுக்கமும் அதனிடத்தில் பொருந்தி உட்காரும்வரை அடுத்த அடிக்கு



பட் பட்டென்று இருமுறை கை தட்டிவிட்டு ஒரு கையின் ஒற்றை விரலை நீட்டி ஆட்டியாட்டிச் சொன்னார்: "பொல்லாது! பொல்லாது! ஆனால் புத்திசாலி!"

நகர பஞ்சு சாரும் அனுமதிப்பதாக இல்லை.

எங்கள் நிழல் யுத்தத்தைக் கண்டு சிரிப்பது போல் பைரவி ஸ்வரஜதி மட்டும் தன் சாச்வதமான அழகுடன் பொலிந்து நின்றது.

மிகவும் பிரயத்தனப்பட்ட பின் முதல் அடி ஒளிக்கீற்றாக வசப்படுவது போலிருந்தது.

'அம்மாடியோவ்!' என்று கொண்டாடியிருக்க வேண்டிய நேரம் அது. ஆனால்... அந்த வெற்றியிலும் ஒரு வெறுமை தெரிந்தது.

வீட்டில் வளையவரும் குழந்தையைத் துரத்திப் போய் 'அகப்பட்டுக் கொண்டாயா!' என்று தூக்கிக் கொஞ்சலாம். சிணுங்கலுடன் நமது பாசப் பொழிவை ஏற்று அது அடுத்த நிமிடமே அவசரமாக இறங்கி ஓடிவிடும்.

அசந்து மறந்த நேரத்தில் அதே குழந்தை அழையாமல் வந்து மடியில் உட்காரும் பாருங்கள்.... அந்தக் கணத்தின் பரஸ்பர முழுமைக்கு எதை ஈடு சொல்ல முடியும்...!

சங்கீதப் பயிற்சியும் அவ்வாறாகத்தான் தோன்றியது. இதோ பிடித்து விட்டேன் என்று கைக்குள் அடக்கிய விஷயம் விரலிடுக்கில் நழுவியோடி குறும்பு செய்து கொண்டேயிருந்தது. இந்தக் குழந்தை ஒரு நாளும் என் மடி தேடி வராது.

பன்னிரண்டு வயதுக்குப் பொருந்தாத இந்த விவேகத்தைப் பிரகடனப்படுத்தாமல் மனத்தின் ஒரு மூலையில் துக்கத்துடன் பூட்டி வைத்துக் கொண்டேன்.

பஞ்சு ஸாருக்கு மட்டும் அது எப்படியோ தெரிந்துவிட்டது.

புரியாமல் போனது அம்மாவுக்குத்தான். வகுப்புகளின்போது வந்து உட்கார்ந்து கவனமாகக் கேட்டாள்.

கேட்கக் கேட்க பஞ்சு ஸாரின் திறம் குறித்த அவள் மதிப்பீடு கடுமையாயிற்று.

"கச்சேரி பண்ண வேண்டாம். பளிச்சுன்னு நாலு பாட்டு பாடத் தெரிஞ்சா போதும். மீனலோசனி போனப்புறம் வேற நல்ல டீச்சரே அமையலை..."

– வீட்டில் பெரியவர்கள் பேசிக் கொள்ள ஆரம்பித்தார்கள்.

பாட்டு டீச்சர் மாற்றத்துக்கான ஒரு ரகசிய சதி தீட்டப்பட்டு நிறைவேறியது.

இரண்டு மாதம் கோடை விடுமுறைக்கு கும்பகோணம் போவதால் வகுப்புகள் மறு அறிவிப்புவரை ரத்து என்று பஞ்சு சாருக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், மறு அறிவிப்பு தான் செய்யப்படவேயில்லை!

சமுத்திரத்தின் அலைகள்போல் மாறி மாறி ஆசிரியர்கள் வந்துபோனார்கள். அம்மா ஆசைப்பட்ட பளிச்சென்று நாலு பாட்டைக் கணக்கு காட்டும் அளவுக்குக் கூட சங்கீதம் எனக்கு வரவில்லை! ஆனால் பஞ்சு சார் அதனிடத்தில் விதைத்த பற்று மட்டும் ஒரு அழகான பிருந்தாவனமாக வளர்ந்துகொண்டே போயிற்று. வசப்படாத கலைக்கு ஏங்கும் வெப்ப தாகம் அந்த வனவிருக்ஷங்களின் குளிர் நிழலில் தணிந்து அடங்க ஆரம்பித்தது.

என் குழந்தைகள் இப்போது சங்கீதம் கற்றுக் கொள்கிறார்கள். பைரவி வர்ணத்தை நன்றாகவே பாடுகிறார்கள். நாளை பைரவி ஸ்வரஜதியைக்கூட அவர்கள் பாடக் கூடும்!

நான்தான் இன்னமும் அதைப் பாடம் பண்ணவில்லை. அதனாலென்ன... பஞ்சு ஸாரின் கையெழுத்தில் அது என் பாட்டு நோட்டில் பத்திரமாக இருக்கிறது. பஞ்சு ஸார் இப்போது இல்லை. இத்தனை வருடங்கள் கழித்து, அவர் ஸ்வரஜதி பற்றிப் பேசியவை நினைவிலிருக்கிறது – இப்போது புரியவும் செய்கிறது. அவரை எனக்கும் என்னை அவருக்கும் ஏன் அவ்வளவு பிடித்திருந்தது என்பதும் இப்போதுதான் மிக நன்றாகப் புரிகிறது – பஞ்சு ஸார் பாடினாரானால் காது கொண்டு கேட்க முடியாது! என்னைப் போல் அவரும் ஒரு மானசீக பிருந்தாவனத்தில்தான் இளைப்பாறியிருப்பார். ●

ஏ தில் மாங்கே


"சினிமாவில் நடிப்பதற்கேற்ற முக வெட்டு உங்களுக்கு இருக்கிறதே? ஏன் நடிக்கவில்லை?' என்று vocalist, turned mridangist டி.வி. கோபாலகிருஷ்ணனைக் கேட்டார் யூகி சேது, நையாண்டி தர்பாரில் (ஆனால் அசப்பில் கதிரி கோபால்நாத் மாதிரி இருக்கிறார் டி.வி.ஜி).

"நடிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் வந்தது. சிந்து பைரவியில் மிருதங்க வித்வானாக நடிக்கும்படி கே. பாலசந்தர் அழைத்தார். நானும் ஒப்புக் கொண்டேன். ஆனால் முதல் நாள் ஷூட்டிங்கின்போது, நான் நன்றாய்க் குடித்துவிட்டு மிருதங்கம் வாசிக்க மேடைக்கு வருவதாகவும், பாடகர் சிவ குமார் என்னை 'எழுந்து போடா' என்று விரட்டுவதாகவும் காட்சி என்று சொன்னார் கள். அப்படியொரு நிலைமை எனக்கும் வர வேண்டாம், யாருக்குமே வர வேண்டாம் என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன்'' என்றார் கோபாலகிருஷ்ணன். (அந்தப் பாத்திரத்தை டெல்லி கணேஷ் அளவுக்கு மறக்க முடியாததாக இவரால் செய்திருக்க முடியுமா? One wonders.)

இரண்டு கைகளைக் கொண்டு மிருதங் கத்தில் எத்தனை வகை நாதங்களை எழுப்ப முடியும் என்பதைச் சில நிமிடங்களுக்கு வாசித்துக் காட்டி விளக்கினார் டி.வி.ஜி. அந்தச் சப்த ஜாலங்களை இன்னும் நிறையக் கேட்க வேண்டும் போலிருந்தது, தில் மாங்கே மோர்!

'ஹிந்து'வில் கார்ட்டூன் கூடப் போட்டு விட்டார்கள், தற்சமயம் மூன்று fixing நடந்து வருகிறதென்று. ஒன்று, match fixing; இரண்டு வீரப்பன் fixing; மூன்று, உலக அழகி fixing. இது ஜோக்தான். My way of joking is to tell the truth என்று பெர்னார்ட் ஷா சொன்னது போல.

அழகு சாதனங்களின் விற்பனைக்கு இங்கே பிரம்மாண்ட மார்க்கெட் இருக்கிறது என்பதால்தான் இந்தியப் பெண்களுக்குக் கிரீடம் சூட்டுகிறார்கள் என்று சொல்கிறார் கள். உண்மையோ பொய்யோ தெரியாது. சுஷ்மிதா சென், ஐஸ்வர்யா ராய், யுக்தா முகி, லாரா தத்தா ஆகியோரின் வரிசையில் ப்ரியங்கா சோப்ரா சேர்ந்தது பெருமை(!)க் குரிய விஷயம்தான். ஆனால் முந்திய இந்திய அழகிகளைக் காட்டிலும் ப்ரியங்கா கொஞ்சம் கூடுதல் கவர்ச்சியாகவே உடை அணிந்து வந்ததாகத் தோன்றியது.



• யூகிசேது

என்.எஸ். கிருஷ்ணன் நிறைவு நாளென்றால் வாடிக்கையான சில பேர் வாடிக்கையான சில விஷயங்களைச் சொல்வார்கள். அப்படி இல்லாமல், கலைவாணரின் குடும்பத்தினரைப் பேட்டி கண்டு வித்தியாசமாக அமைத்திருந்தார் பேராசிரியர் மறைமலை. உணர்ச்சி வசப்படாத தெளிவான முன்னுரை பின்னுரைகள்.

What you give, you have; What you spent you had; What you are keeping, you are losing என்பதை வாழ்க்கை நெறியாக வைத்திருந்தவர் கலை வாணர். எடுத்துக்காட்டாக அவர் மகன் என்.எஸ்.கே. நல்லதம்பி ஒரு நிகழ்ச்சியைச் சொன்னார். என்.எஸ்.கே. நாடக மன்றம் நடந்து கொண்டிருந்தபோது, மன்றத்தைச் சேர்ந்த ஐம்பது அறுபது பேர் தினம் அவர் வீட்டில் பந்தியாக உட்கார்ந்து சாப்பிடுவார் களாம். ஒருநாள் ஒரு புதியவர் சாப்பிட்டுக் கொண்டிருந்தாராம். அவர் யாரென்பது தெரியவில்லை. இரண்டு மூன்று நாள் தொடர்ந்து அவர் வந்து சாப்பிட்டதால், மெல்ல அவரை அணுகி, 'நீங்கள் நாடக மன்றத்தைச் சேர்ந்தவரா?' என்று விசாரித் தார்கள். அந்த மனிதர் திடுக்கிட்டுக் குழம்பி, 'நாடக மன்றமா? சத்திரமில்லையா இது! அப்படி நினைத்தல்லவா நான் தினம் வந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்!' என்றா ராம்.

என்.எஸ்.கே.யின் பேத்தி மதுரம் பேசுகையில், தன் பாட்டனாரின் வாழ்க்கை குறித்த எல்லாத் தகவல்களையும் திரட்டி webpage நடத்தி வருவதாகச் சொன்னார்.

சிரிய பணி, சிறப்புற வெல்வதாக.

ஒரு சேனலின் நிகழ்ச்சியை இன்னொரு சேனல்காரர் கிண்டலடிப்பது தொழில் தர்ம மாகுமா? ஆகாதுதான். ஆனால் all is fair in love and war - and media programmes எனவே, சன்னின் 'கோடீசுவர'னை ஜெயாவின் 'ரன் டிவி' கேலி செய்தபோது



* ரன் டீவி!

மோர்!

வினோத்

குபுக்கென்று பல இடங்களில் சிரிப்பு வந்ததிலும் தப்பில்லை.

அந்தப் பெண் தான் ஒரு கோடீஸ்வரி என்றும், தன் கேள்விகளுக்குச் சரியான பதில் தருபவரைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகவும் அறிவிக்கிறாள். 'நான் ரெடி, நீங்கள் ரெடியா?' என்று அவள் கேட்டதும் 'நாங்கள் ரெடி' என்று பல குரல்கள் வருகின்றன. (ஒருவர் சிவாஜி மாதிரி மேக்கப், நடிப்பு. இன்னொருவர் பிரபுதேவா மேக்கப், நடிப்பு. மற்றுமொருவர் ரஜினி மாதிரி மேக்கப், நடிப்பு)

'விடை தெரியாமல் சந்தேகம் வரும் போது நான் உங்களுக்குத் தருவேன்' என்று ஒரு முழுத் தேங்காயை நீட்டுகிறாள் அவள். 'நம் கல்யாணத்தின்போது மஞ்சள் பூசி வைப்பார்கள் இதை. சென்ட்டிமென்ட்டல் டச்' என்று விளக்கம் சொல்கிறாள். 'மூன்று முடிச்சு படத்தை ஒருவன் மூன்று தடவை பார்த்தால் மொத்தம் எத்தனை முடிச்சு?' என்பது போன்ற அபத்தமான கேள்விகள் தொடருகின்றன.

ஒரு பதிலின்போது 'கம்ப்யூட்டர், ப்ளீஸ் க்ளிக்' என்று அவள் சொன்னதற்கு கம்ப்யூட்டர் எந்தப் பதிலும் தரவில்லை. 'கம்ப்யூட்டரில் கோளாறு' என்றாள். பதிலை நீங்களே சொல்லுங்களேன்' என்கிறான் வந்தவன். 'நானே கம்ப்யூட்டரைப் பார்த்துத் தானே பதில் தெரிஞ்சுக்கிறேன்' என்கிறாள் அவள்!

கடைசியில் சிலர் வந்து அவளை இழுத்துப் போகிறார்கள் - அவள் ஒரு தப்பி வந்த பைத்தியம் என்று சொல்லி. சதா டீவியைப் பார்த்துப் பார்த்து அப்படி ஆகிவிட்டாளாம், பாவம்.

மொத்தத்தில் ஒரு harmless parody.

பளிச்சென்ற திருமண் நெற்றியில் துலங்க, காழியூர் நாராயணன், ராசி பலன்களை அன்றாடம் சொல்லி வருகிறார், ஜெயாவின் 'இன்னாள் பொன்னாள்' என்ற தலைப்பில். ராசிகளைக் குறிக்கும் சின்னப் படங்கள் விதவிதமாகக் கண்ணுக்குக் குளிர்ச்சி தருகின்றன. இவருடைய வாக்கியங்கள்தான் எல்லா ராசிக்காரர்களுக்கும் ஒரே மாதிரி உள்ளன.

பலன்களுடன் இரண்டொரு தத்துவார்த்தமான அறிவுரைகளும் சொல்கிறார். 'நம்மைக் காக்கும் கடவுளுக்குத் தன்னைத் தானே காத்துக் கொள்ளத் தெரியாதா? அர்ச்சகர் ஏன் ராத்திரியானதும் கதவுகளைப் பூட்டிச் சாவியை இடுப்பில் செருகிக் கொண்டு கிளம்புகிறார்?" என்று ஒருவர் கேட்டாராம். 'இது ஒரு நல்ல கேள்வி. கஷ்டங்கள் வரும் போது அவை நீங்க வேண்டுமென்று கோவிலுக்குப் போய் வேண்டிக் கொள்கிறோம். அந்த நம்பிக்கை தான் நம்மைக் காப்பாற்றுகிறது. அதுதான் முக்கியம். மற்றப்படி கோவிலைப் பூட்டலாமா என்றெல்லாம் விதண்டாவதாம் பண்ணக் கூடாது' என்று கண்டித்தார் காழியூரார்.

'இது ஒரு நல்ல கேள்வி என்று முதலில் சொல்லிவிட்டு கடைசியில் இது விதண்டாவதாம் என்கிறீர்களே?" என்று கேட்பது விதண்டாவாதம். அஞ்ஞானிகளுக்கு எவ்வளவுதான் சொல்லிக் கொடுக்க முடியும்? Spoon feeding in the long run teaches us nothing but the shape of the spoon என்றார் நாவலாசிரியர் ஈ.எம்.ஃபார்ஸ்டர்.

உளுந்துக்கு முதல் மரியாதை!

வெந்தயம் பற்றி இன்னும் கொஞ்சம் பார்க்கலாம். சில பேருடைய உடம்புத் தோல் பளபளப்பு பெற்றிருக்கும். முகத்திலே புதுப் பொலிவு, அதாவது 'தேஜஸ்' என்பார்களே அது இருக்கும். விளம்பரங்களில் 'க்ளோயிங் ஸ்கின், முகப் பொலிவு' என்றெல்லாம் குறிப்பிடுகிறார்களே. அது எல்லோருக்குமே சாத்தியம்தான். அதன் சூட்சுமம் வெந்தயம். அரை ஸ்பூன் வெந்தயப் பொடியுடன், அரை ஸ்பூன் சக்கரை சேர்த்து சாப்பிட்டுவந்தால் போதும். பளபளப்புத் தானாக வந்துவிடும். டயபடீஸ்காரர்கள். சர்க்கரையைத் தவிர்த்து, வெந்தயப் பொடியை சாப்பிடலாம்.

கோடைகாலத்தில், அதிகமாக வியர்வை வெளியேறுவதால், நம் உடம்பில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும். இதனால் சிறுநீர் போகிறபோது, வலி இருக்கும். இதனை 'நீர்ச்சுருக்கு' என்பார்கள். இதற்கும் வெந்தயம் கைகண்ட மருந்து. வெந்தயப் பொடியை மோரில் கலந்து சாப்பிடலாம். இளநீரில், வெந்தயப் பொடி சேர்த்து சாப்பிடுவதும் நல்லதுதான்.

வெந்தயத் தோசை சாப்பிட்டிருக்கிறீர்களா? வழக்கமான தோசை மாவு அரைக்கிறபோது, உளுந்து சேர்க்காமல், வெந்தயம் சேர்த்து அரைக்கலாம். உளுந்து எவ்வளவு சேர்ப்பீர்களோ, அதில் பாதி அளவு வெந்தயம் சேர்த்தாலே போதுமானது. உளுந்து இல்லாமல் தோசைமாவா? என்று சிலர் நினைப்பார்கள். அப்படியென்றால், உளுந்தின் அளவைக் குறைத்து கொஞ்சம் வெந்தயம் சேர்த்துக் கொள்ளலாம்.

வெந்தயத் தோசைக்குப் புதினா சட்னி தொட்டுக் கொண்டு சாப்பிட்டுப் பாருங்கள். சுவைக்குச் சுவை. அதுமட்டுமில்லாமல், வெந்தயத்தின் குளிர்ச்சியைப் புதினாவின் சூடு ஈடுகட்டி, உடல் நிலையும் சமசீதோஷ்ணமாக இருக்கும்.

தீகட்ட புண்ணுக்கும்கூட வெந்தயம் மருந்தாகப் பயன்படுகிறது. வெந்தயப் பொடியைக் கொஞ்சம் தண்ணீர் கலந்து, பேஸ்ட் போலச் செய்து தீப்புண்ணில் தடவி வந்தால் புண் சீக்கிரமே மாயமாகிவிடும்.

டயபடீஸ், நோய் வர, பெற்றோர்க்கு அந்த நோய் இருப்பதும் ஒரு முக்கிய காரணம் என்பது மருத்துவரீதியில் கண்டறியப்பட்ட உண்மை. பெற்றோரில் யாருக்காவது டயபடீஸ் இருந்தால், நிச்சயம் வரும் என்று சொல்ல முடியாது என்றாலும்கூட, நிச்சயமாக வராது என்று ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. நாம் எச்சரிக்கையாக, இருப்பதன் மூலம் தவிர்க்க முயற்சி செய்யலாம்! அந்த விதத்தில், வெந்தயத்தை ரெகுலராக உட்கொள்ளுவதன்மூலமாக, டயபடீஸைத் தடுத்திடும் சாத்தியமுண்டு. இதற்காக, தினமும் வெந்தயமோ, வெந்தயப் பொடியோ தனியாகச் சாப்பிட்டு வர வேண்டும் என்று இல்லை. உணவில் போதிய அளவு வெந்தயம் சேர்த்துக் கொண்டாலே போதுமானது.

எடையைக் குறைக்க வேண்டும் என்று பலர் ததிங்கிணதோம் போட்டுக் கொண்டிருக்கிறபோது, சிலருக்கு எடையை



மூலிகை மணி

டாக்டர். க. வேங்கடேசன்



டாக்டர். க.வே. அபிராமி

அதிகரிக்க வேண்டும் என்று ஆசை இருக்கும். அதற்கு என்ன பண்ணுவது என்று அங்கே, இங்கே விசாரித்து ஏகப்பட்ட கொழுப்புப் பொருட்களைச் சாப்பிட்டுவிட்டு, பின்னால் திண்டாடுவதைவிட, டாக்டர்.வெந்தயத்தின் உதவியை நாடலாம். ஆம்! தேன் கலந்த வெந்தயப் பொடி (கசப்பைச் சமாளிக்கத்தான்), வெந்தய தோசை சாப்பிட்டால், நன்கு வெயிட் போட முடியும். உருளைக் கிழங்கு, கருணைக் கிழங்கு போன்றவற்றை 'ரோஸ்ட் பொறியல்' செய்யும்போது வெந்தயப் பொடியும் சிறிது சேர்த்துக் கொள்ளலாம்.



பேதி, வயிற்றுக் கடுப்பு, வயிற்றுவலி போன்ற பிரச்னைகளுக்கும் வெந்தயம் கைகண்ட மருந்து.

அடுத்து, உளுந்து பற்றிப் பார்க்கலாமா? இன்று டாக்டர்களும், சத்துணவு நிபுணர்களும் நியூட்ரியன்ட், எனர்ஜி பூஸ்டர் என்றெல்லாம் சில ஐட்டங்களைப் பற்றிப் பெருமையாகக் குறிப்பிட்டு, விளம்பரப்படுத்துகிறார்கள். உண்மையில், அந்த பட்டங்களுக்கெல்லாம் மிகத் தகுதியான ஒன்று உண்டென்றால் அது உளுந்துதான்.

இன்று இருபத்தைந்து வயதுள்ள ஆண்களால் சற்று வேகம் பிடித்து ஓட முடியாது. பெண்களோ, அவர்கள் அம்மாக்கள்போல குனிந்து, நிமிர்ந்து, வீட்டு வேலைகளைக் கவனிக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். நோய், நொடி என்று பெரிய அளவில் வியாதிகள் எதுவுமே இல்லாவிட்டாலும்கூட, உடலில் போதிய அளவு பலம் கிடையாது. பாட்டிகள் அம்மாக்களை விட ஹெல்த்தி என்பது தெரிந்ததே. இதற்கு என்ன காரணம்? அந்தத் தலைமுறையின் உணவு முறைதான் மூலகாரணம்.

நாம் உணவில் தினசரி, தேவையான சக்தியைப் பெறும் அளவுக்கு, உளுந்து சேர்த்துக் கொள்வது கிடையாது. நான் சொல்கிறேன். எல்லோருமே உணவில் கட்டாயமாக உளுந்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக, டீன் ஏஜ் பருவம் என்று சொல்லப்படுகிற பதிமூன்று வயது முதல், உளுந்து நம் உடலுக்கு அத்தியாவசியமானது. டீன் ஏஜ் பையனுக்கும் பெண்ணுக்கும் நன்றாக உளுந்து கொடுத்தால் அவர்கள் உடல் ரீதியில் நல்ல வளர்ச்சி அடைந்து நல்ல பர்சனாலிடியுடன் விளங்குவார்கள். நம் பாரம்பரியத்தில், இயற்கையிலேயே நம் உணவில் உளுந்து சேர்ப்பதுதான் வழக்கம். காலையில் இட்லி, தோசை டிபன் என்றால் பயன்படுத்துவது சட்னி அல்லது சாம்பார்தான். இரண்டிலுமே, கடுகுடன், உளுத்தம் பருப்பு சேர்த்து தாளித்துக் கொட்டியிருப்போம். மதிய சாப்பாட்டிலே கடுகு, உளுந்து தாளித்துக் கொட்டாத ஐட்டம் அநேகமாக இருக்காது. மாலையில் போண்டா போன்ற டிபன் ஐட்டங்களில், உளுந்து கட்டாயம்.

தஞ்சாவூர்க்காரர்களின் இசை ரசனை மட்டுமின்றி உணவு ரசனையும் ரொம்பப் பிரசித்தம். அவர்கள் வீட்டுக்கு விருந்துக்குப் போனால், வாழை இலையில் முதலில் இனிப்பு அல்லது உப்பு வைப்பதைப் போல, ஒரு மூலையில், ஊறவைத்த உளுந்து சிறிது வைப்பார்கள். காரணம் உளுந்து உடல் வளர்ச்சிக்கு அஸ்திவாரம். ஆக, உளுந்துக்கு முதல் மரியாதை!


படங்கள் : யோகா

நடக்குமென்பார், நடக்கும்!




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

உங்களோட துணிவும் தன்னம்பிக்கையும் கூடும் நேரம். எடுத்த காரியங்கள் எல்லாமே ஜெயிக்கும். கடுமையா உழைச்சீங்கன்னா, பலன் இரட்டிப்பா இருக்கும். எதிர்பாராத செலவு வந்து சேரும். அதுவும் சுபச் செலவா இருக்குங்கிறதனால பயப்பட வேணாம். கைப்பொருள் பத்திரம். கொடுக்கல், வாங்கல், ஸ்பெகுலேஷன் பக்கமே போகாதீங்க. ஒண்ணும் உதவாது. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு நல்ல விஷயங்களா நடக்கும். கம்ப்யூட்டர், நிர்வாகத் துறைக் காரங்களுக்கும் செழிப்பான பாதைத் தெரியற காலம் வந்தாச்சு! ஜமாயுங்க!




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

இந்த வாரம் பெண்களுக்கு ரொம்ப சிறப்பா இருக்கும். வெளிநாட்டுத் தொடர்புப் பயன் தரும். உடன் பிறந்தவங்க தாங்கு தாங்குன்னு தாங்குவாங்க. பொறியியல், சட்டம், இராணுவம், காவல் துறையைச் சேர்ந்தவங்களுக்கு அதிர்ஷ்டம் கூரையைப் பிச்சிக்கிட்டு கொட்டப் போகுது. நூதனமான விளையாட்டு விநோதங்கள்ள ஈடுபடக் கூடாது. அதனால விளையாட்டு வீரர்கள் எச்சரிக்கையா இருக்கணும். பேச்சுல சூடான வார்த்தையைத் தவிர்த்துடணும். புது ஆளுங்ககிட்ட பழகும்போது கவனம் தேவை. வீண் வம்பு வந்து சேரும். திருவண்ணாமலை அருணாசலேஷ்வரரைக் கும்பிடுங்க. வினை எல்லாம் தீர்ந்துப் போயிடும்.




மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

வீணா அவசரமோ, பதற்றமோ காட்டற டைப்பா நீங்க? இந்த வாரம் நிதானமா இருக்கறது நல்லது. உங்க கிரக அமைப்பு அனுகூலமா இல்ல. விபத்து ஏற்படலாம். உஷார். நண்பர்கள், உறவினர்கள்னு எல்லார்கிட்டேயும் பாதுகாப்பு வளையம் போட்டுக்கறது நல்லது. வெளிப்படையா பேசிப் பழகிடாதீங்க. பிரச்னை பிச்சிப் புடுங்கிடும். மத்தப்படி, குடும்ப நலம் சீராவே இருக்கும். பணத் தட்டுப்பாடு எதுவும் வராது. உங்க ஆரோக்கியத்துல அசட்டையா இருந்துடாதீங்க. படுக்கையிலே தள்ளிடும். தான, தரும காரியங்களை நிறைய செய்யுங்க. மனசுக்கு அமைதியா இருக்கும். ஆஞ்சனேயரை நினைச்சுக்குங்க... அருள் கிடைக்கும்.



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

இந்த வாரம் ஞானப் பழமா மாறிடுவீங்க. பக்தி மார்க்கத்திலும், ஞான மார்க்கத்திலும் ஈடுபாடு 'ஓகோ'ன்னு இருக்கும். வார மத்தியிலே கொஞ்சம் பனிச்னு தெரிவீங்க. இருந்தாலும் சின்னச் சின்ன பிரச்னை உறுத்திக்கிட்டே இருக்கும். கணவன் மனைவிக்குள்ள பிரச்னை வர்றதுக்கு வாய்ப்பிருக்கு. வீண் விரயம் உண்டாகும். தூக்கம் கெட்டுப் போகும். பொதுநலப் பணியாளர்கள் பாராட்டுப் பெறுவாங்க. இரும்பு, எஃகு சம்பந்தப்பட்ட பொருட்கள் லாபத்தை அள்ளிக்கிட்டு வரும். புது முயற்சிகளை இப்போதைக்குத் தள்ளிப் போடுங்க.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*


உங்களோட புத்திசாலித்தனம் பளிச்சிடும் காலம் வந்தாச்சு. முக வசீகரம் அதிகரிக்கும். நிறைய நண்பர்கள் உங்களுக்கு உதவறதுக்குப் போட்டி போடுவாங்க. குடும்பத்துலேயும் கலகலப்புக்குப் பஞ்சமிருக்காது. மனை, வீடு, வாகனம்னு எது தொட்டாலும் பொன்னாகப் போகுது. பிற மொழிக்காரங்க உதவுவாங்க. மாணவர்கள் திறமைப் பிரகாசிக்கும். தோல், ரசாயனம், டிராவல்ஸ் ஆகியவை லாபம் கொண்டு வரும். அரசியல்வாதிங்களுக்குப் புகழ் கிடைக்கும். ஸ்ரீகுரு ராகவேந்திர சுவாமிகளைக் கும்பிடுங்க. எந்தக் கஷ்டமும் அணுகாது.



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

உங்களைவிட, உங்கப் பெண்டாட்டி, பிள்ளைங்களுக்கு நல்ல காலமிது. மனை, நிலம், வாகனம்னு நீங்க தொட்டது துலங்கும். கணவன் - மனைவி இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். கூட்டுத் தொழில்ல ஏற்றம் கிடைக்கும். ஆனா

உடம்புதான் கொஞ்சம் படுத்தி எடுத்துடும். ஆரோக்கியத்துல கவனம் வையுங்க. யாருக்கிட்ட பேசினாலும் அமைதியா, சுமூகமா பேசறது நல்லது. இல்லன்னா வீண் டென்ஷன்!



துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

குடும்ப நலத்துக்காக நீங்க ரொம்பவே கஷ்டப்பட வேண்டியிருக்கும். சனி ப்ரீதி செய்யுங்க. சங்கடங்கள் தானா குறையும். உங்க அறிவாற்றல், திறமை எல்லாமே அதிகரிக்கும். சாமர்த்தியமா நிறைய காரியங்களை செஞ்சு முடிப்பீங்க. வியாபாரிங்களுக்குக் கை நிறைய காசு சேரும். தந்தை, தாய் வழியில் அனுகூலம் உண்டுங்க. புதிய ஆடை, அணிகலம், வண்டி, வாகனம்னு வாழ்க்கை சொகுசா இருக்கும். பயணத்துல பாதுகாப்பு அவசியம். திருப்பதி பெருமாளுக்கு ஏதாவது பிரார்த்தனை மிச்சமிருந்தா அதை செஞ்சுடுங்க. உயர்வு உங்களைத் தேடி வரும்.



விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

ஏதுனா பெரிய வம்புல மாட்டிக்கப் போறீங்க... அதனால எதிலும் நிதானமா போயிடறது நல்லது. சட்டம், காவல், இராணுவத் துறையில இருக்கிறவங்களுக்கு அளவான அனுகூலம் காத்திக்கிட்டிருக்கு. சிலப்புப் பொருட்கள் லாபம் கொண்டு வரும். கலைத் துறையைச் சேர்ந்தவங்கன்னா ஜாலி தான். புதிய பதவி, பட்டம், பொறுப்புகள்னு நிறைய பெருமைகள் வந்து சேரும். புதிய சொத்து வாங்குவீங்க. வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். ஸ்ரீதேவி கருமாரி அம்மனை வேண்டிக்குங்க. எல்லாமே நல்லதா நடக்கும்.



தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

எடுத்தக் காரியத்தை எப்பாடு பட்டாவது இந்த வாரம் செஞ்சு முடிச்சுடுவீங்க. ஏன்னா, எதிர்ப்புகள் குறைஞ்சு, ஏற்றம் ஏற்படும் நேரமிது. பெண்களுக்கு நினைச்சது நடக்கும். கல்யாணமாகும். புத்திர பாக்கியம் கிடைக்கும். உடன் பிறந்தவங்க உதவுவாங்க. உத்தியோகஸ்தர்களுக்கு இடம் மாற்றம், பதவி உயர்வு ஏற்படும். சமுதாய நலப் பணியாளர்களுக்குப் பாராட்டு குவியும். சுக்கிரன் தயவால பொருள் வரவுக்குப் பஞ்சமிருக்காது. கூட்டுத் தொழில் செஞ்சா, நல்ல முன்னேற்றம் காணலாம். சின்னச் சின்ன பிரச்னைகள் ஏதுனா வரும்தான். அதனால மனசைத் தளர விடாதீங்க.



மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

அடேயப்பா! அதிர்ஷ்டக் காற்று உங்கப் பக்கமா வீசுதுங்களே! ரொம்ப சந்தோஷமா இருப்பீங்க. பர்ஸ் கனமா இருக்கும். நிறைவேறவே நிறைவேறாதுன்னு நீங்க கைவிட்ட விஷயமெல்லாம் தானா கைக் கூடி கனிஞ்சு வரும். மாணவர்களுக்கு இது வளமான சமயம். திறமையும், உழைப்பும் வீண் போகாது. எதிரிங்க தானா விலகிப் போயிடுவாங்க. குடும்பத்துல, விருந்து, விழான்னு ஏக தடபுடல்தான். தொழிலதிபர்கள் ஏற்றம் பெறுவாங்க. கிரக வழிபாடு செய்யுங்க. இன்னும் அமோகமான பலன்கள் ஏற்படும்.




மகர ராசிக்காரரான செஸ் விஜய லட்சுமிக்கு அதிர்ஷ்டக் காற்று அடிக்கற நேரம் இது.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

இதுவரை குடத்துக்குள்ள இருக்கிற விளக்கு போல இருந்த உங்கத் திறமை இனிமே மலை மேலே ஏத்தி வெச்ச தீபம் போல பளிச்னு தெரியும். அரசாங்க ஆதரவு கிடைக்கும். எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் பிரகாசிப்பாங்க. பெண்கள், ரொம்ப பிரமாதமா முன்னுக்கு வருவாங்க. அதேபோல, தீயவங்களோட சகவாசம் கூடாது. கணவன் - மனைவிக்குள்ள கருத்து வேறுபாடு வரும். விட்டுக் கொடுத்துப் பொறுமையா போங்க.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

இந்த வாரம் உங்களுக்குச் சுமாரான வாரம் தாங்க. பெரிசா பணப் பிரச்னை இருக்காது. இருந்தாலும் உடல் நலத்துல கவனம் தேவை. மனசுல ஏதாவது குழப்பம் இருந்துட்டே இருக்கும். வாரப் பின் பகுதியில சிலருக்குப் புதிய பொறுப்புகள் வரலாம். பெண்கள் நிலை உயரும். கலைத் துறைக்காரங்களுக்கு உற்சாகமா இருக்கும். நல்லவங்க சகவாசம் கிடைக்கும். அரசு அலுவல்காரர்களுக்கு சீரான பண நடமாட்டம் இருக்கும். வீண் செலவுகள் வந்து மிரட்டும். கவலைப்படாதீங்க. சமாளிச்சிடுவீங்க, முருகன் அருள் இருக்குல்ல...?



புரட்சிக்காரன்

பணத்திற்காகப் படமெடுப்பவர்கள் அதிகமுள்ள தமிழ் சினிமாவில் கொள்கைக்காகப் படமெடுத்திருக்கிறார் வேலுபிரபாகரன். அவர் கைவைத்திருப்பது கடவுள் மறுப்புக் கொள்கை.

ஆனால் கோவில் தர்மகர்த்தா, போலிச் சாமியார் என்று பராசக்தியில் தொடங்கி வைக்கப்பட்ட அறதப் பழசான கதைக்களம் அலுப்பூட்டுகிறது.

போதாக் குறைக்குப் புரட்சிக்காரனாக வரும் வேலுபிரபாகரன் - எம்.ஜி.ஆர். குரலில் மைல் நீள பிரசார வசனங்களைப் பேசி மனோகரா காலத்தை நினைவுபடுத்துகிறார்.

ஆசார அனுஷ்டானங்கள் மிக்க பிராமண குடும்பத்தில் பிறந்த ராமானுஜன் எப்படி புரட்சிக்காரனாக மாறினான் என்பதுதான் மையக் கதை.

இந்தக் கதையை முழு அழுத்தத்துடன் சொல்ல விரும்பி, படத்தின் முதல் பாதியில் ஒரு கடத்தல் எபிசோடை காட்டி, பிறகு பிளாஷ்பேக் மூலம் ஓபன் செய்வது நச்.

கடத்தப்பட்ட மூன்று முக்கிய மதத் தலைவர்களிடம் "நீங்கள் மூன்று பேருமே மற்ற இரண்டு பேரின் கடவுள்களை இல்லை என்று சொல்கிறீர்கள். நான் உங்கள் மூன்று கடவுள்களையுமே இல்லை என்று சொல்கிறேன். இது தான் வித்தியாசம்" என்று புரட்சிக்காரன் விவாதிக்கும்போது தியேட்டரில் விசில்.

இரண்டு காட்சிகளே என்றாலும் கல்யாணி - காதர் காதல் சித்திரிப்பு ரியலிஸ்டிக். ஒரே ஒரு காட்சியில் வந்து உருக்கி விட்டுப் போய் விடுகிறார் ராதிகா. புரட்சிக்காரனாக வரும் வேலு பிரபாகரனுக்கு ராமானுஜம் கெட்டப்பும், அதில் அவர் வெளிகாட்டும் நடிப்பும் அற்புதமாய்ப் பொருந்திப் போயிருக்கிறது. ஆனால் இருபதுக்கும் நாற்பதுக்குமான வித்தியாசத்தோடு நீனாவுடன் அவர் டூயட் பாடுவது செம காமெடி.

ஏழை மக்களைத் திரட்டி கூட்டுப் பண்ணைத் திட்டத்தைச் செயல்படுத்த வரும் பெரியார் தொண்டராக சத்யராஜ் நிறைவு. அவர் பாட்டைக் கேட்டு கிராம மக்கள் திருந்துவதாக காட்டுவது ரீ... ல்!

தணிக்கை குழுவின் கத்திரியில் சிக்கிக் கொள்ளக்கூடாது என்பதற்காகவே நிஜமாக நடந்த பல சம்பவங்களை 'டாக்குமெண்டரி எவிடென்சாக' படத்தில் சேர்த்திருப்பதைப் பாராட்டலாம்.

ஒரு கட்டத்தில் வீரமணியின் கட்அவுட் சுமந்து ஊர்வலமாக வரும் கறுப்புச் சட்டை தொண்டர்கள், நேரடியான மத, இனக் குறியீடுகள் என்று படம் ஒரு திராவிடக் கழகத் தயாரிப்பாக மாறிவிடும்போது சினிமா காணாமல் போகிறது!

இத்தனை அபாயகர வளைவுகளைத் தாண்டி, படத்தின் கிளைமாக்சையும், இயக்குனர், நடிகர், தயாரிப்பாளர் போன்ற எல்லா பொறுப்புகளையும் மீறிய வேலு பிரபாகரனின் கொள்கைப் பிடிப்பையும் பாராட்டி விட்டு வரலாம்.

- விஷுவல்தாசன்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)


இயற்கையின் பரிசு
இணையற்ற சந்தனம்
GOKUL
SANTOL
GOKUL
SANTOL

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka

சமஹன்



14 மூலிகைகள் இருக்கிறதே பயன்மட்டும் ஒன்றே ஒன்றா ?

சமஹன் ஜலதோஷத்திற்கு மட்டுமல்ல. 14 மூலிகைகளின் சாரம் கொண்ட சமஹன் நிறைய பயன்களைக் கொண்டது.

பயன்	செயலாற்றும் மூலிகைகள்
உடல் அலுப்பைப்போக்க	மரமஞ்சள், சீரகம், பேராத்தை, சிறுதேக்கு, சுக்கு, கண்டங்கத்திரி, மிளகு
அஜீரணம், பசி தூண்டுவதற்கு	சுக்கு, மிளகு, ஓமம், ஆடாதொடை, சீரகம்
ஜலதோஷம் கூடிய தலைவலியைப்போக்க	கொத்தமல்லி, சிறுதேக்கு, பேராத்தை, கண்டங்கத்திரி
சைனசைடிஸ், ப்ராங்கைடிஸ், ஆஸ்துமாவுக்கு கூடுதல் மூலிகை உணவாக (Herbal Food Supplement)	ஆடாதொடை, பேராத்தை, கண்டங்கத்திரி, சுக்கு, மிளகு, ஓமம், திப்பிலி, விஷ்ணுக் கிராந்தி சிறுதேக்கு



இப்பொழுதே சமஹனை டீ, காபி, ரசம், சூப் அல்லது சுடு நீரில் கலந்து அருந்துங்கள். உங்கள் முகத்தில் புன்னகை பூக்க 5000 ஆண்டு ஆயுர்வேதத்தை உதவிக்கு அழைத்திடுங்கள்.

தமிழகமெங்கும் மளிகை மற்றும் மருந்து கடைகளிலும் கிடைக்கும்

100% இயற்கை 0% பக்கவிளைவு